ஸ்ரீமத் வரவர முனியே நம:

பிரபன்னாநுஷ்டான பாஸ்கரம்.

—:o:—

இஃது
வேதவேதாந்த புராணேதிஹாசங்களிலுள்ள பிரமாணங்களைக்
கோடீகரித்து பாகவதோத்தமர்களின்
ஆக்ஞையை முன்னிட்டு

குமரலிங்கம்
வி. இராமாநுஜையங்காரால்
தென்மொழியிலியற்றப்பட்டு
ஸ்ரீமாந். திருக்குருங்குடி ஜிய்யங்கார் சுவாமிகளாலும்
ஷை மடம்
ஆதீன வித்வான்
உ. வே. திருமலாசாரிய சுவாமிகளாலும்
கோயமுத்தூர்
சலவன் வீதியிலிருக்கும்
ஸ்ரீமாந். பட்டர் சுவாமிகளாலும்
மற்றும் திராவிடாந்திர பண்டிதர்களாலும்
ஆமோதன பத்திரம் பெற்று

திருச்சி சிங்காரம் முத்ராலயத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

—

ரிஜிஸ்டர் காபிரைட் 1934 விலை ரூ. **1-8-0.**

ஸ்ரீ

அறிவிப்பு.

இக்கிரந்தம் வேண்டுவோர் கோயமுத்தூர் ஜில்லா தாராபுரம் தாலூகா டீச்சர் ஸ்ரீரங்கய்யரிடத்திலும் கஸ்பா கோயமுத்தூரில் பெரியகடைவீதியில் பாங்கி கிளார்க்கு வி. கண்ணனய்யரிடத்திலும், ௸ ஜில்லா உடுமலைப்பேட்டை தாலூகாவிலிருக்கும் கொண்டசாமி நாயக்கரிடத்திலும், திருச்சி நெய்மண்டி கிருஷ்ணய்யரிடத்திலும், ஸ்ரீரங்கம் கந்தாடை ராமாநுஜஸ்வாமிகள் மடத்திலும், அடியனிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

K. V. R.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நூன்முகம்

ஸ்ரீய: பதியாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனனாய், நஷ்டைஸ்வர்ய காமன், அபூர்வைஸ்வர்ய காமன், ஆத்ம ப்ராப்தி காமன், பகவத் ப்ராப்தி காமன் என்கிற சதுர்வித புருடர்களுக்கும், சமாஸ்ரயணீயனாய், தர்மார்த்த காம மோக்ஷ மென்கிற சதுர்வித பலப்ரதனாய் எழுந்தருளி யிருக்கிற சர்வேசன் மிகுந்தவியாகுல சித்தனாகி, மூல ப்ரக்ருதியில் அழுந்தி கரண களேபர சூன்னியராய், "லூனபக்ஷயிவாண்டஜ:" என்கிற பிரகாரமாக இறகொடிந்து விழுந்திருக்கிற பக்ஷிகளைப்போலே கிடக்கிற ஸ்திதியை கடாக்ஷித்து, அகிலாத்மாக்களுக்கும், கரணகளே பரங்களைத் தந்தருள, அத்தைக்கொண்டு ஈஸ்வர திருவுள்ளத்திற் குகப்பாக நடந்துகொள்ளாமல், கோல் நறுக்க கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின்வாலைச் சேதித்தவனைப்போலும், ஆற்றைக் கடக்கக் கொடுத்த தெப்பத்தைக்கொண்டு கறை சேராமல், சமுத்திரத்தைப் போய்ச் சார்ந்தவனைப் போலும், விஷய சாகரத்தில் மூழ்கிக் கிடக்கின்றவர்களின் விஷயத்தில் போரக் கிலேசித்து, "ஸாஸநாச் சாஸ்தரம்" என்கிற அநேக சாஸ்த்ர ப்ரமாணங்களைப் பரம க்ருபையால் அருள் செய்ய, அக்ஞான அன்யதாக் ஞான, விபரீத க்ஞானங்களைக்கொண்டு அநாதி கர்ம வாஸனா தோஷ தூஷிதராய் இருக்கும் தசையைக் கடாக்ஷித்து தானே சிக்ஷா ரக்ஷைகளைச் செய்ய உத்யோகித்து ராம க்ருஷ்ணாத்யவதாரங்களை எடுத்துக் காட்டியும், "அவஜா நந்திமாம் மூடா: மாநுஷீம் தநுமாஸ்ரிதம், பரம் பாவ மஜாநந்தோ மாமபூத மஹேஸ்வரம்" என்கிறபடி ஸஜாதீய ப்ரதிபத்தியால் ஆசுர ப்ராக்ருதிகளாய் தன்னை அநுவர்த்தியாமல் போய்விட்டதினாலே, ம்ருகத்தைக் கொண்டு ம்ருகத்தைப் பிடிப்பாரைப்போலே, மநுஷ்யாளைக் கொண்டு மநுஷ்யனைத் திருத்தவேண்டுமென் றுத்தேசித்து,

ஸ்ரீவத்ச, கௌஸ்துப, வைஜயந்தி, ஸ்ரீபூநீளா, அநந்த, கருடர் முதலான நித்திய சூரிகளை, யிந்த லீலா விபூதியில் நாநா வர்ணங்களிலும் அவதரிப்பித்து அகிலாத்மகோடிகளையும் உஜ்ஜீவிப்பிக்கச் செய்யவேண்டுமென நியமிக்க, அவர்களும் மயர் வறமதி நலம்பெற்று ஆழ்வாராசிரியர்களாய் அவதரித்து, பக்திரூபா பன்னக்ஞானத்தை க்ருபை செய்து, தத்வாரா சர்வாதிகாரமான, திராவிட வேத, ஸ்ரீவசன பூஷண, இரகசிய கிரந்தங்களினாலும், இந்த விசிஷ்டாத்வைத தர்சனத்தை ப்ரகாசிக்கச் செய்தார்கள். கொஞ்ச காலத்திற்கு பிறகு இந்தவைலக்ஷண்யமான சித்தாந்தத்தைக் கெடுக்க சிலபத்தஸம் சாரிகள், கியாதி லாபங்களைக் கருதி ஸ்வரூபாநுரூபவ்ருத்திக ளொன்றுமின்றியே, ஹேயவ்ருத்திகளை யொன்றும் த்யஜிக்கமாட்டாமல், தேஹாத்மாபிமானிகளாய், துரஹம்காரக்ரஸ்தர்களாய், "கிருஷ்ண சின்ஹங்களைத் தரித்து கிருஷ்ணனை எதிர்த்த பௌண்டர வாசுதேவனைப்போலும், அமிர்தாபேக்ஷிகளாய் தேவ கோஷ்டியில் பிரவேசித்த இராகு கேதுக்களைப்போலும் திரிந்து பரதாரபரிக்ரஹ, பரத்ரவ்வியாபஹார அபக்ஷ்யபக்ஷண, அபேயபானதத்பரர்களாகி அசுரவ்ருத்திகளைச் செய்துகொண்டு யுக்தி சாதகமான சில ப்ரமாணங்களை வைத்துக்கொண்டு, ஆழ்வாராசிரியர்கள் அநுஷ்டித்து வந்த ப்ரமாணங்களை விருத்தமாக்கிவிட்டனர்.

இப்பால் ஸ்வரூபாநுரூபமான விலக்ஷண பகவத் ப்ராப்தியில் அபேக்ஷையுடைய முமுக்ஷுக்கள், சிஷ்டாசாரம் பாரம்பர்யமவஸ்யாநுஷ்டேயமானதால் அந்த அநுஷ்டானங்களையுமுபக்ரமிப்பதற்கு முன்பு மத்யம, சரமபர்வ ப்ரபன்னாதிகாரர்களுக்குத் தியாஜ்ஜியோபாதேய விவேக க்ஞானங்கள் உண்டாக வேண்டுவது அத்தியாவசியமானதால், பராம்குஸ, பரகால நாதயாமுன, யதிவர, கூரநாத, கோவிந்த பட்டாரக, லோககுரு, வரவரமுனிப்ரப்ருதிகள் க்ருபைசெய்து சகல சேதனோஜ்ஜீவனார்த்தமாக ப்ரவர்த்திப் பித்த ஸ்ருதீதிஹாச பகவத் சாஸ்திர, ப்ரம்மசூஸ்தர, திராவிடவேத, ததங்கோபாங்கங்களான ஸமஸ்கிருத ரூபவேத சாரார்த்த சங்கிரகமான ஸ்ரீவசனபூஷண திவ்ய சாஸ்திராதிரஹஸ்ய கிரந்தங்களிலும் இன்னுஞ் சில பாரமார்த்திகமான கிரந்தங்களிலும் ஆசாரவநுஷ்டானங்களை விசதீகரித்திருந்தும்,

அவைகள் ஒரே புஸ்தகத்திலமையாததினுலும், கீர்வாணுந்திர பாடைகளிலியற்றப்பட்டவையாலும், ஆசார்யோபதேசமன்றி தெரிதல் கஷ்ட சாத்தியமானதினுலும், சர்வரும் எழிதில் தெரிந்து கொள்ளத்தக்கதாக, சிஷ்டாசார நூலொன்று இயற்றித் தரல் வேண்டுமென அனேக பாகவதோத்தமர்கள் கேட்டுக் கொண்டமையாலும் "ஆசார ப்ரதமோ தர்மம்" என்றும், "ஆசாரமுக்யந்துவைஷ்ணவ:" என்று வழங்கிவருதலாலும் ஆசாரத்தால், ஆயுள் சம்பத்து, ஆரோக்கியம், முதலியவைகளுண்டாவதாக யிதிஹாசங்களில் கூறப்பட்டிருப்பதாலும், "**பிரபன்னுநுஷ்டான பாஸ்கரம்**" என்னுமிச் சிறிய கிரந்தம் தமிழில் எழியநடையில் ப்ரமாணத்துடன் இயற்றலாயிற்று.

பாசுரம்.

கற்ருேர்கள் தாமுகப்பர், கல்விதன்னிலாசையுள்ளோர்
பெற்ருேமெனவுகந்து பின்புகப்பர்—மற்ருேர்கள்
மாச்சரியத்தாலிகழில்வந்த தென் நெஞ்சேயிகழ்கை
ஆச்சரியமோதானவர்க்கு"

என்று சொலலப்பட்டிருக்கின்றன.

நிற்க இக்கிரந்த மச்சிட பலசாஸ்திரங்களின் மேற்கோள் தேவையாயிருந்தமையா லிரண்டு வருடம் சிரமப்பட்டு எழுதப் பட்டது.

இந்நூலியற்றுதற்கு தோன்ருத் துணையாவது பொருளே யாதலில் அதனைச் சந்தாமூலமாக வசூலிக்கப்பட்டது. சந்தாத் தொகையைக்கொண்டும் மற்றும் பலவிதமாகவும் அரிதுமுயன்று பிரபன்னுனுஷ்டான பாஸ்கரமென்னும் இந்நூலின் முதல் வாலியத்தை இயற்றலாயிற்று. இரண்டாம் வாலியமும் கூடிய சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

இதனை உள்ளக் கிளர்ச்சியோடும் விரைவில் முடிக்கும் பொருட்டு நல்லுரையான் மகிழ்வித்து சந்தா தொகையை முன்னங் கொடுத்துதவிய பெருமையாளருடைய பெருநன்றி மறக்கப்படுவதன்று; அந்நன்றியாளரும் என்றும் பண்புபாராட்டப் படுதற்குரியர்.

"நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டுமுலகு"

பலவேறு தொழில்களிடையிலும் நடுவிலும் ஆங்காங்கு நேர்ந்த அவகாசங்களிற் செய்யப்பட்டமையால் இந்நூலில் பலபாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்திதருவன அல்ல. ஆயினும் கல்வி கேள்விகளிற் சிறந்த கனவான்கள் இக்கூறிய குறைகளைப் பாராட்டாது என்னை இம்முயற்சிக்குத் தூண்டிவிட்ட நன்னோக்கத்தையே கருதி இந்நூலை அநாதரவு செய்யாது கடைக்கணித்து அருள்புரிவதோடு எவ்வகை வழுக்களையுந் திருத்தி வெளிப்படுத்துதல் கடன்.

இங்ஙனம் விதேயன்
வி. இராமாநுஜன்
க்ரந்த கர்த்தா.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம :

குமரலிங்கமென்று வழங்கும் ஸ்ரீகுமுணமாபுரி

ஸ்ரீ. உ. வே. இராமானுஜஸ்வாமிகள் விஷயமாய்

பாப்பனுய்க்கன் பாளையம் ஸ்கூல் மாஸ்டர்

இலக்ஷ்மநாயக்க புரிதாசன் **L. R.** சாமி எழுதியது.

ஆசிரியப்பா.

நிலவளம் நீர்வளம் பொருள் வளங்காட்டும்
மலர்வளந்தாரகை வனவளம் பூட்டும்
யரியனவரைமுடி யமரும்புலியரி
வானுறு மதிமான் வவ்விட வரவெரி
தையுறுவான்மான் தயங்குங் குடம்புக
மையுறுஞ் சிங்கம் வகைமானிடம்புக
அமராவதியெனு மந்தர நதிசூழ்
தமராங்குமுணன் சத்திய நகர்வாழ்
தக்கநெல்கன்னல் தாழையேய் கமுகு
பக்கக் குயின்மயில் பாடியாடழகு
குமுணபுரிமதில் கொண்டல்கள் பெய்ய
குமாருங் குமரியர் குனித்தனர் துய்ய
பத்திக்கொருவன் பண்ணுணர் சூரத்தன்
முத்திரகர்த்தா வெனு மூதறிஞன்
செய்தனன் ஞானச் செழுங்கலை நூல்கள்
பெய்தனநிதயம் பெறச்செவிச் சால்கள்
வடகலை தென்கலை வடுகு நடுக்கலை
புடவியர் மகிழப் பொதிந்ததிடக் கலை
புண்ணியாவாசனம் போற்று மாராதனம்
பண்ணுமாசாரம் பகரநுட்டானம்

கல்யாணு பரணம் கனரசமியற்றினன்
சொல்லுமாகாசி பசுபகோத்திரத்தன்
வேங்கடரங்க விப்பிரன்றரு சுப
மோங்குசத் கீர்த்தி யொப்பிராமாநுஜ
சருமா வென்னும் சாது ஸ்ரீவைணவன்
சிரமேலணியும் சிகாமணி பண்ணவன்
அச்சிலமைத்தே யருளினன்
மெச்சிபாகவதர் வியப்புற மாதோ.

கட்டளைக் கவித்துரை.

பிரபன்னநுட்டான பாஸ்கரப்பேர் பெற்றுப் பேணிமகிழ்
தரமன்னு நூலைத் தருமநூல் காட்டித் தனைத் துரைத்தான்
சிரமென்னுமா குழணுபுரிஞானச் செழுமறையோன்
வரமன்னிராமாநுஜ சருமாபதம் வாழ்த்துதுமே.

இஃது

திருநெல்வேலி ஜில்லா
திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யோபய
வேதாந்த ப்ரவர்த்தகராகிய
ஸ்ரீமாந் திருக்குறுங்குடி ஜிய்யர் சுவாமிகளின் மடம்
ஆஸ்தான வித்வான்

ஸ்ரீமாந். ப. திருமலாசாரியர் சுவாமிகளால்

இயற்றப்பட்டது.

சுலோகம்.

ஸ்ருதி ஸ்ம்ருதிசோதி தாநி
ப்ரபன்னாநுஷ்டா நியா னிவை
தாநி ஸர்வாநியம் க்ருஹ்ய
உத்தாங்யஸ்மின் ஸதாம் முதெ॥

(இஃதும் மேற்படி சுவாமிகளியற்றியன) பிரபன்னாநுஷ்டான பாஸ்கரமென்னும் பெயர் பெற்று மண்ணும் விண்ணும் விளங்க உபகரித்தது, இதில் சுருதிஸ்ம்ருதிகளனைத்தும் கூறியுள்ளது, சத்துக்கள் மன மகிழ பொருளனைத்தும், விரித்தது, ப்ரபன்னர்களின் அநுஷ்டானங்களை தெளிவாகக் காட்டியது, பூர்வாசாரியர்கள் மனமகிழ்ந்த ஆசார சீர்திருத்த முடையதாயும், மறையின் பொருளனைத்தையும் தன்னுளமைத்ததாயுமிராநின்றது.

இராமாநுஜன் திருவடிகளை வாழ்த்துதுமே.


ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விஷய சூசிகை.

Printed at Singaram Press, Big Bazaar, Trichinopoly.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



பிரபன்னாநுஷ்டான

பாஸ்கரம்.

ஆசாரம்.

இருடிகள் வினா.

ஶ్లో॥ శ్రీమత్తోదగిరేర్మూర్ధ్ని, శ్రీమత్యాయతనే హరేః ।
శాణ్డిల్యమృషిమాసీనం, ప్రణమ్యమునయోఽబ్రువన్ ॥

தாத்பர்யம்:—இப்பரதகண்டத்தின் கண் நீர்வளம், நிலவளம், கிரிவளம், வனவளம், இவைகளில் சிறந்து மனோஹரமாய் விளங்கும் பாண்டிய தேசத்தின் தென் பாகத்தில், தோதகிரி யென்றும், தோத்தாத்திரி யென்றும், வானமாமலை யென்றும் சொல்லப்பட்ட திவ்யதேச மொன்றுண்டு. அந்த பர்வத சிகரத்தில் ஸ்ரீய: ப்பதி யான ஸ்ரீமன் நாராயணனுடைய சன்னிதியு மொன்றுண்டு. ஆங்கு பகவத் சரணார்த்திகளாய் வாசஞ்செய்யும் மஹரிஷிக ளனைவரும் ரிஷிபுங்கவனான சாண்டில்யரிஷியைச் சேவித்து சோடசோப சாரங்களை நடத்தி ஆசனத்தி லமர்த்தியிங்ஙனம் வினவலாயினர்.

இ - வி.

శ్లో॥ కుటుంబాశ్రమనిష్ఠానాం, పఞ్చకాలనిషేవిణామ్ ।
ఆచారంత్వన్ముఖాన్బ్రహ్మన్, శ్రోతుమిచ్ఛామహేవయమ్ ॥

சு - தா:—பஞ்சகால பராயணனாயும் (குடும்பத்தை) கிரஹஸ்த தர்மத்தை உடையவராயு முள்ளவர்களுடைய ஆசாரங்களை கேள்க்க

ஆசைப்படுகிறோம். பின்னும், தாய், தந்தை, மக்களிருவர், மருமக்கள், மகன், பார்யை அதிதி, தான் இந்த சமூஹம் சேர்ந்தது குடும்ப மென்று சொல்கிறார்கள்.

இதன்றி, பிர்மசாரி, க்ருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சன்யாசி, என்கிற நான்கு ஆஸ்ரமவாசிகளுமுண்டல்லவா; அவர்களும் திரிகாலக்கிரமமாகவும், நிஷ்காமிய மாகவும் சதா அநுஷ்டிப்பதான வேதோக்த சிஷ்டா சாரங்க ளெவையோ அவற்றையும் சாங்கோபாங்கமாக அடியோங்களுக்கு அநுக்கிரஹிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க லாயினர்.

சாண்:—ஏமஹரிஷிகளே நீங்கள் கேட்ட இந்த சதாசாரமானது மிக விஸ்தாரமானது, இவை மநுஸ்மிருதி முதலான தர்ம சாஸ்திரங்களில் விசேஷ ஞானமில்லாதவர்களுக்கும், சாமான்ய ஜனங்களுக்கும், பகவத் பக்தியில் ஆர்த்தியும் நம்பிக்கையும் இல்லாதவர்களுக்கும் சப்தாதி துர்விஷயங்களில் மனது செலுத்துகிற ஜனங்களுக்கும், இந்த பரமரகசியமான ஆசாரமானது அஹிதகரமாகத் தோன்றுவதாயிருக்கும். பின்னும் குடும்ப விஷயத்தையும், ஆசிரம விஷயத்தையும் நியம பூர்வகமாகவும், பூர்வோக்தமாகவும், பஞ்சகாலக்கிரமமாகவும், சிஷ்டாசார முறையாகவும், முன்னோர்கள் அநுஷ்டித்து வந்ததினாலே அவர்களை சிஷ்டர்க ளென்றும் இந்த வாசாரத்திற்கு சிஷ்டாசார மென்றும் பெயருண்டாயிற்று. ஆகையினால் சமஸ்த சிரேயஸ்ஸையு முண்டாக்கு மிதனையுங்களுக்கு சங்கிரகமாகச் சாற்றுகின்றேன் கேட்பீர்களாக.

சாண்.

శ్లో॥ పఞ్చేన్ద్రియస్యదేహస్య, బుద్ధేశ్చమనసస్తథా ।
ద్రవ్యదేశక్రియాణాంచ, శుద్ధిరాచారఇష్యతే ॥

தா:—த்வக்கு, சட்சு, சுரோத்திரம், ஜிக்வை, ஆக்கிராணம், புத்தி, மனசு, இவைகளாலுண்டாகும் உள்ளும் புறம்புமான தேஹத்திற்கும், திரவியம், தேசம் கிரியை இவைகளுக்கும் பரிசுத்தியாவையோ அவையே ஆசாரமென்று சொல்லப்படுகிறது.

த்வக் என்றால், சரீரம், இதற்கு பரஸ்த்ரீ சங்கமம்; நீசஸ் பரிசம், இவைகளை நீக்கலும், சாஸ்திரோக்த நித்ய நைமித்திகாதி ஸ்நானம், பாகவத ஸ்பர்சம் இவைகளுண்டாதலும் சரீரத்திற்கு சுத்தியாம்.

சட்சு (நேத்திரம், பரஸ்திரீகளையும், தேவதாந்திரங்களையும், நாட்டியங்களையும், பாராதிருத்தலும் பகவத்சேவை, பாகவதசேவைகளைச் செய்தலும் கண்களுக்கு சுத்தியாம்.

சுரோத்திரம் (காதுகள் = இராஜஸதாமஸ சாஸ்திராதிகளைக் கேட்காமலும் அசத்வாக்கியங்களை உட்கொள்ளாமலும் பகவத் விஷயாதி சத்சாஸ்திரங்களைக் கேட்குதலும் செவிகளுக்கு சுத்தியாகும்.

ஜிக்வா:—நாக்கு அசத்திய வார்த்தைகளைத் தவிர்தலும் பகவத் பாகவத சேஷமாகாத பதார்த்தங்களை நீக்கலும் பிறரைத் தூஷியாதிருத்தலும் தற்புகழ்ச்சி செய்யாதிருத்தலும் சாமான்னிய சாஸ்திரங்களைப்படியா திருத்தலும், இவைகள் போன்றவற்றை தவிர்தலே நாவிற்கு சுத்தியாகும்.

க்ராணம்:—மூக்கு = எம்பெருமானுக்கு உபயோகியாத எவ்வித பரிமளாதிகளையும் முகராமலிருப்பதும் பகவானுடையவும் பாகவதாளுடையவும் திருவடிகளில் அர்ச்சித்த திருத்துழாய் முதலானதுகளை முகப்பதுமே நாசிக்கு சுத்தியாம்.

புத்தி மனசு = இவைகளுக்கு சுத்தியாதெனில், காமக்குரோத லோப மோக மதமச்சரங்களை நீக்கல் அகங்கார மமகாரங்களில்லாதிருத்தல் அந்தக்கரண சதுஷ்டயங்களை வசப்படுத்தல், சங்கல்ப விகல்பங்களை தெரிந்து நடத்தல் மனம் புத்தி சுத்தியாகும்.

"திரவிய சுத்தியாவது" பகவத் பாகவத கைங்கர்யோபயுக்தமான சகலவிததிரவிய சாகா பதார்த்தங்களும் சுத்தியாம்.

தேசசுத்தியாவன = ஆழ்வார், ஆசாரியாளாலும் மஹரிஷிகளாலும், புராணங்களாலும் பாடல் பெற்ற திவ்ய தேயங்களெவையோ அத்தேயங்கள் பரிசுத்த மாகும்.

கிரியைகள் சுத்தி = பகவானுக்குகப்பாகவும், வேத சம்மதமாகவும் செய்யப்பட்ட ஓமம், யாகம் எக்கியம், தபம், யோகம், இவைபோன்ற சர்வகிரியைகளும் சுத்தியாம்.

ஹேரிஷிகளே; நீங்கள் கேட்ட ஆசாரத்தின் பகுதியான பஞ்சேந்திரிய சரீர மனோபுத்தி முதலிய சில சுத்திகளை சங்கிரகமாக சொல்லப்பட்டது இனி ஆசாரத்தை விஸ்தரித்துரைக்கின்றேன் கேளுங்கள்.

ஸ்ரீபகவத் சாஸ்திரம் பகவாநுவாச.

శ్లో॥ శ్రుతిః స్మృతిర్మమైవాజ్ఞా యస్తాముల్లంఘ్య వర్తతే ।
ఆజ్ఞాచ్ఛేదీ మమ ద్రోహీ మద్భక్తోఽపి న వైష్ణవః ॥

தா:—ஸ்ருதிகள் ஸ்மிருதிகள் என்னுடைய ஆக்ஞையின்பேரில் உண்டாயின. இவைகளை நிராகரித்து எவன் நடப்பானோ அவன் எனக்கு துரோகியாவது மன்றி அதிபக்தி செலுத்துகிற வைணவனாயினும் அவைஷ்ணவத் வத்தை அடைகிறானென்பதாக எம்பெருமானால் சொல்லப் பட்டது.

பகவத் சாஸ்திரம் பிராட்டிவாக்கியம்

శ్లో॥ అవిప్లవాయ ధర్మాణాం, పాలనాయ కులస్యచ ।
సంగ్రహాయ చ లోకానాం, మర్యాదా స్థాపనాయ చ ।
ప్రియాయ మమ విష్ణోశ్చ, దేవదేవస్య శార్ఙ్గిణః ।
మనీషీ వైదికాచారం, మనసాపి న లంఘ్యతే ॥

தா:— தர்மங்கள் கெடாமலிருக்கும் பொருட்டும், குலங்களை பரிபாலிக்கும் பொருட்டும், உலகில் மரியாதையை ஸ்தாபிக்கும் பொருட்டும், சர்வேசனுடைய, என்னுடைய ப்ரீதியின் பொருட்டும், புத்திமான்கள் வேதோக்தமான ஆசாரங்களை எந்த ஆபத்காலத்தும் கிஞ்சிற்றேனும் மீறி நடக்கக் கூடாதென்று பிராட்டி சாயித்திருக்கிறார்.

பராசர்

శ్లో॥ చతుర్ణామపి వర్ణానా, మాచారధర్మపాలకః ।
ఆచారభ్రష్టదేహానాం, భవేద్ధర్మః పరాఙ్ముఖః ॥

தாத்:—பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராதியாவர்களுக்கும் ஆசாரமென்பது குல தர்மத்தை விருத்திசெய்கிறது, தர்மத்தை யும் காக்கிறது, ஆசாரஹீனனிடத்தில் தர்மமானது நில்லாமல் நீங்கி விடுவது மன்னியில் பாபசம்மந்தமு மேற்படுகின்றன..

பாரதம் அநுசாசநீகபர்வம்.

శ్లో॥ ఆచారల్లభతే చాయురాచారాల్లభతే శ్రియం ।
ఆచారాత్కీర్తిమాప్నోతి, పురుషః ప్రేత్యచేహచ ।
దురాచారోహి పురుషో నేహాయుర్విందతే మహత్ ।
త్రాసయంతి చ భూతాని తదా పరిభవంతి చ ।
తస్మాత్కుర్యాదిహాచారం యదిచ్ఛేద్భూతిమాత్మనః ।
అపిపాపశరీరస్య ఆచారోహంత్యలక్షణం ।

ఆచారలక్షణోధర్మస్సంతశ్చా చారలక్షణం ।
సాధూనాంచ యథావృత్తమే తదాచారలక్షణం ॥

தாத்:—பூவுலகின் கண்ணுள்ள சர்வரும், ஆசாரத்தினுல் தீர்க்காயுளையும், ஐஸ்வர்யத்தையும் இகபர சுகத்தையும் அடைகின்ருர்கள். ஆசாரயீனன் மேலே சொல்லப்பட்டவைகளை யிழந்து விடுவது மல்லாமல், சகலராலும் அவமானத்தையும், நிந்தையையும் பெறுகிருன். இதன்றி பூதப்பிரேதபை சாசங்களால், பயமுறுத்தப் படுகிருன். ஆகையால் பாபதேகத்லதப் பெற்ற ஒவ்வொருவரும் ஐஹிக ஆமுஷ் மிகம்பெற விரும்புகிறவர்களும், தருமசிந்தையுடையோரும், சத் புருடரும், சுருதி, ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட, அபிகமனம், உபாதானம், இஜ்ஜை, சுவாத்தியாயம், இயோகம், என்கிற இந்த பஞ்சகால வநுஷ்டானத்தை நாடோரும் தவராது நடத்துவதே சதாசார மென்று சொல்லப்படுவதால் இதனை உங்களுக்கு சங்க்ஷேபமாகப் புகன்றேன்.

இனி அபிகமன காலத்தில் செய்யவேண்டிய அநுஷ்டானங்களைச் சொல்கின்றேன் கேளுங்கள்.

பாஞ்சராத்திர ஆகமப்பிரமாண
அபிகமன காலவிதி.

அபிகமன மென்ருல் சூரிய உதயத்திற்கு ஐந்து நாளிகைக்கு முன் பெழுந்து புண்டாரதாரண முடித்து ஆசாரியஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீகரிக்கும் காலம் வரையுள்ளமத்திய காலத்திற்கு அபிகமனகால மென்று பெயர்.

இதில் செய்ய வேண்டிய காரியாதிகளை விரித்துரைக்கின்றேன்.

கூர்மம்.

శ్లో। బ్రహ్మే ముహూర్తే ఉత్థాయ ।
దర్మమర్థంచచింతయేత్, కాయక్లేశంతదుద్భూతం ।
ధ్యాయీతమనసేశ్వరం, పంచ్ఛపంచఉషఃకాలః ॥

தா:—என்றும் சொல்லப்பட் டிருப்பதால், பிரபன்னன், பிர்ம்ம முகூர்த்தமாகிய சூர்யோதயமாக ஐந்துநாழிகைக்கு முன்பு உஷத் காலத்தில் படுக்கையை விட்டெழுந் திருத்தல் வேண்டும் எழுந் ததும்,

கூர்மம்.

శ్లో॥ దర్పణంపూర్ణకుంభంచ, దక్షిణంకరమేవచ ।
పూజ్యంచమంగళద్రవ్యం, ప్రాతఃపశ్యేన్మహీపతిం ॥

தா:—என்றமையால் பின்னர் கண்ணாடி, பூர்ணகும்பம், தனது வலக்கரம், பூஜாதிரவியங்கள், மங்கள வஸ்துக்கள் இயானை கருங் குரங்கு, இராஜன், ஆசாரியன் தாய் தந்தையர், இவைப்போன்று வொன்றைச் சேவித்தல் பிரமாண மாகும்.

சாண்டில்லியம்.

శ్లో॥ ఉచ్చైచ్చస్స్వరేణయోగాన్నైస్తుత్యాస్తోత్రైరుదారధీః ।
వాసుదేవాదిదేవానాం నామ్నాంసంకీర్తనంచరేత్ । என்றும்
ఉత్తిష్ఠ చింతయంహరిం॥

தா:—என்றும் சாஸ்திரங்கள் புகல்வதால் அஸ்த பாதங்களைச் சுத்தி செய்து கொண்டு வா:க்ய குரு பரம்பரை, திருமந்திரம் துவயம், சரமங்களையும் ஆழ்வார் ஆசாரியரெம்பெருமான்களையும் தியானித்து, ஸ்ரீ சைலேசன்றுடக்கமாகத் திருப்பாவை வரையில் காலோசிதமாய்ச் சேவித்து.

முகுந்தமாலை.

శ్లో॥ ఘుష్యతేయత్రనగరే, రంగయాత్రాదినేదినే ।
తమహంశిరసావందే, రాజానంకులశేఖరం ॥

* தா:—இந்த ஸ்லோகாநு சந்தானத்தோடு இரங்க யாத்திரை போவதாக பாவித்து, திக்கு நோக்கி சற்று தூரம் நடக்கவேண்டும்.

---

* குறிப்பு:—காலையில் படுக்கையை விட்டெழுந்து சற்றுதூரம் நடத்தலுக்கு அபிகமன மென்று சொல்லபபடும்.

ஜலமல விசர்ச்சனம்.

விஷ்ணு புராணம்

శ్లో॥ నైరుత్యామిషువిక్షేప మతీత్యాభ్యధికంభుధః ।
దూరాదావసథాన్మూత్రం పురీషంచసమాచరేత్ ।
తృణైరాస్తీర్యవసుదాం, వస్త్రప్రావృతమస్తకః ॥

ஆங்கிரஸ.

శ్లో॥ కృత్వాయజ్ఞోపవీతంతు, పృష్ఠతః కంఠలంబితం ।
విణ్మూత్రంతు గృహీకుర్యా, ద్యద్వాకర్ణే సమాహితః ॥

விஷ்ணு.

శ్లో॥ ఆత్మచ్ఛాయాం తరుచ్ఛాయాంగో సూర్యాగ్న్యనిలాంస్తథా ।
గురుద్విజాదీంస్తుభుధో నాదిమేహేత్కదాచన ।
న కష్టేసస్యమధ్యేచ గోవ్రజేజనసంసది ।
న వర్త్మనినసద్యాది తీర్థేషుపురుషర్షభః ।
నాప్సునైవాంభసస్తేరేశ్మ శానే నసమాచరేత్ ।
ఉత్సర్గంవైపురీషస్య మూత్రస్యచవివర్జనం ॥

மநு.

శ్లో॥ నమూత్రంపథికుర్వీతనభస్మనినగోవ్రజే ।
నఫాలకృష్టేనజలే నచింత్యాంనచపర్వతే ।
నజీర్ణదేవాయతనే నవాల్మీకేకదాచన ।
ననసత్త్వేషుకర్తేషు, నగచ్ఛన్నాపిచస్థితః ।
ననదీతీరమాసాద్య నచపర్వతమస్తకే ।
వాయ్వగ్నివిప్రానాదిత్యమపః పశ్యస్తథైవగాః ।
నకదాచనకుర్వీత, విణ్మూత్రస్యవిసర్జనం ।
ప్రత్యగ్నిం ప్రతిసూర్యంచ ప్రతిసోమోదకద్విజాన్ ।
ప్రతిగాంప్రతివాతంచ, ప్రజ్ఞానశ్యతిమేహతః ॥

தா:—தான் வசிக்கும் ஊருக்கு தெற்கு அல்லது நைருதி திக்கில் ¼ மைல் தூரத்திற் கப்பால் சென்று தலையில் வஸ்திரத்தை

கட்டிக்கொண்டு எக்ஞோபவீதத்தை வலச்செவியில் சுற்றி கையை மூன்று தபா தட்டி, தனது நிழல், பசு, சூரியன், சந்திரன், அக்கினி, வாயுவு, குரு, வேதியர், இவர்களுக்கெதிரில் உட்காராமலும் தான் அவர்களைப் பாராமலும், யாவரிடமும் பேசாமலும், சுவாசியாமலும், ஜந்துக்கள் வசிக்கும் புத்திடம், யாகபூமி, யாகத்திற்குபயுக்தமான பூமி, பயிர் நிலம், பயிர்க்குழுத நிலம், பாழ்கோவில், மாட்டுத்தொழுவம், வெடிப்பு நிலம், தடாகம், ஆற்றோரம், மலையடி வாரம், மலையினுச்சி, மயானம், நந்தனவனம், நடக்கும் பாதை, இவைகளைத் தவிர்த்து மறைவிடத்தில், "నియమ్య ప్రయతో వాచం" என்றமையால் சுவாசத்தை உள் செலுத்தாமல் மௌனமாயிருந்து ஜல மல விசர்சனம் செய்ய வேண்டும். நின்றுகொண்டும் நடந்துகொண்டும் ஜல மலங்களை விடக்கூடாது.

மநு.

శ్లో॥ మూత్రోచ్చారసముత్సర్గం, దివాకుర్యాదుదఙ్ముఖః ।
దక్షిణాభిముఖో రాత్రౌ సంధ్యయోస్తు యథా దివా ॥

காசி:—'பகல் வடக்குக் கங்குலிடை தெற்காகும்' என்று சொல்லப்பட்டிருப்பதால், பகற்காலம் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் இருந்து மல ஜலம் விடவேண்டும்.

வாசிஷ்ட சம்மிதை.

శ్లో॥ అయజ్ఞియైరనార్ద్రైశ్చ, తృణైస్సంఛాద్య మేదినీం ।
என்றும் తిరస్కృత్యోచ్చరేత్కాష్ఠలోష్ఠపత్రతృణాదినా ॥

தாத்:—எனச் சொல்லப்பட்டமையால் மல விசர்சனமான பிறகு அசுத்தம் தெரியாமல், மண், கல், இலைபிவைகளால் மூடிவிடல் உத்தமம்.

சௌசக்கிரமம்.

தக்ஷ:—శ్లో॥ తీర్థే శౌచం న కుర్వీత, కుర్వీతోద్ధృతవారిణా ।

தாத்:—நதி நதம், தடாகம், கூவம், பொய்கை, முதலிய விசேஷ ஜலாஸயங்களில் குக சௌசம் செய்யாமல் செம்பில் ஜலம் கொண்டுபோய் வெளியில் சௌசம் செய்ய வேண்டும்.

மரீசி.

శ్లో॥ విప్రే శుక్లా తు మృత్ప్రోక్తా, రక్తా క్షత్రే విధీయతే ।
హారిద్రవర్ణా వైశ్యే తు, శూద్రే కృష్ణా ప్రకీర్తితా ॥

தாத்:—பிராம்மணன் வெண்ணிறமும் மிருதுவுமான சுத்தம் ருத்திகையாலும், க்ஷத்திரியன் சிகப்பு மண்ணினாலும், வைசியன் மஞ்சள் நிற மண்ணாலும் சூத்திரன் கருப்பு மண்ணினாலும் சௌசம் செய்ப வேண்டும்.

விஷ்ணு புராணம்.

శ్లో॥ వల్మీకంమూషికోద్ధృతాం, మృదంనాంతర్జలాంతథా।
శౌచంవిశిష్టాంగేహాచ్చ, నాదద్యాల్లేపసంభవాం।
అంతఃప్రాణ్యవపన్నాంచ, హలోత్ఖాతాంచపార్థివ।
పరిత్యజేన్మృదోహ్యేతం, స్సకలాశ్శౌచకర్మణి॥

தா:—புத்துமண், பெருச்சாளி தோண்டிய மண், வீட்டிற்குப் பூசி மீந்த மண், ஜலத்தினுள்ளிருக்கும் மண், சௌசம் செய்து மீந்த மண், புழுச் சம்மந்தப்பட்ட மண், உழுத மண், இவை போன்றன வற்றைத் தவிர்த்து சுத்தமான மண்ணினால் சௌசம் செய்தல் வேண்டும்.

எம:

శ్లో॥ వాపికూపతటాకేషు, నాహరేద్బాహ్యతోమృదం।
ఆహరేజ్జలమధ్యేతు, పరతోమణిబంధనాత్॥

தாத்:—சுத்தமான மண் கிடையாத சந்தர்ப்பங்களில் வாய்க்கால், கூபம், நதி இவைகளில் ஒரு முழத்திற்குள்ளிருக்கும் ம்ருத்திகை யெடுத்து சௌசம் செய்யலா மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வாசிஷ்ட:

శ్లో॥ పంచపానేదశైకస్మి, న్నుభయోస్సప్తహస్తయోః।
మృత్తికాః పాదయోస్సప్త, లింగద్వేపరికీర్తితే।
ఏకాలింగేగుదేత్రిస్స, స్తథైకత్ర కరేదశ।
ఉభయోస్సప్తదాతవ్యా, మృదశ్శుద్ధిమభీప్సతాం।
ఏతచ్ఛౌచంగృహస్థస్య, ద్విగుణంబ్రహ్మచారిణః।
వానప్రస్థస్యత్రిగుణం, యతీనాంతుచతుర్గుణం॥

தாத்:—இதன்படி ஆண் குறிக்கு ஓர் தரமும் குதத்திற்கு மூன்று தரமும் இடக்கைக்குப்பத்து தரமும் இரண்டு கைகளும் சேர்த்து எழு தரமும் மண்ணிட்டு சுத்தி செய்யவேண்டும். இதற்கிரட்டி பிரமசாரி, மும்மடங்கு வானப்பிரஸ்தன், நான் மடங்கு சன்னியாசியும் ஆமலகத்தளவு மண்ணிட்டு சௌசம் செய்யவேண்டுமெனச் சொல்லப்படுகிறது.

ஆதித்ய புராணம்.

ஶ்லோ॥ స్త్రీశూద్రయోరర్ధమానం, ప్రోక్తంశౌచంమనీషిభిః ।
దివాశౌచస్యనిశ్యర్ధం, వ్యాధిపాదంవిధీయతే ।
ఆర్తఃకుర్యాద్యథాశక్తి, శక్తిఃకుర్యాద్యథావిధిః ॥

தாத்:—மேலே சொல்லப்பட்டிருக்கும் சௌசத்தில் பாதி, ஸ்ரீ, சூத்திரர்கள் ஆசரிக்க வேண்டும். நான்கு ஆஸ்ரமிகளும் இராக் காலத்தில், பகலில் செய்த சௌசங்க ளெத்தனையோ அதிற்பகுதி செய்தால் போதுமென சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தர், பாலர், ரோகிகள், துக்கிகள், இவர்கள் தங்கள் சக்தியாநு சாரம் செய்து கொள்ளலாம். ஜலஸ்பரிசத்திற்குப் போனபின் ஆண் குறி ஜலம் மேல் படாமல் இடக்கையால் பிடித்து ஒருதரம் ம்ருக் திகையிட்டு சுத்திசெய்து இரண்டு கைகளுக்கும் மூன்று தடவை மண்ணிட்டு அலம்பி ஆசமனம் செய்ய வேண்டும்.

சுத்த ஜலத்தால் வாயலம்பல்.

ஆபஸ்தம்பஃ

ஶ்லோ॥ ఏవంశౌచవిధింకృత్వా, పశ్చాద్గండూషమాచరేత్ ।
మూత్రేరేతసివిట్సర్గే, దంతధావనకర్మణి ।
భక్ష్యాణాంభక్షణేచైవ, క్రమాద్గండూషమాచరేత్ ।
చతురష్టద్విషడ్వష్ట, గండూషైఃషోడశైస్తథా ।
ముఖశుద్ధింప్రకుర్వీత, హ్యన్యదాదోషమాప్నుయాత్ ।
పురస్తాద్దేవతాస్సర్వా, దక్షిణేపితరస్తథా ।
పశ్చిమేమునిగంధర్వా, వామేగండూషమాచరేత్ ॥

தாத்:—மேற்சொன்ன சௌசக்கிரமம் முடிந்த மேல் சுத்த ஜலத் தால்வாயலம்புதல்வேண்டும். இஃதெச்சமயத்தில் எங்ஙனம் செய்ய வேண்டுவ தென்றால் (1) மூத்திரம் (2 சுக்கிலம் (3) மலம் 4 தந்த தாவனம் 5) பக்ஷணம் இவைகள் செய்த பிறகு 4-8-12-14-16-தடவைகள் வாயலம்பி தனக்கெதிரில் தேவர்களும், வலது பாகம் பிதுர் தேவர்களும், பின்பக்கம் முனிவர்களும் கந்தருவர் களும் இருப்பதினாலே இடது பக்கம் உமிழ்தல் வேண்டும்.

ஆசமனக்கிரமம்.

வ்ருத்த பராசர:

శ్లో॥ కృత్వాథశౌచంప్రక్షాళ్య, పాదౌహస్తౌచమృజ్జలైః।
ప్రబద్ధశిఖకచ్ఛస్తు, ద్విజ ఆచామమాచరేత్ ।
కృతోపవీతంసంవ్యాంసె, వాఙ్మనః కాయసంయతః ॥

சங்க:

శ్లో॥ అద్భిస్సముద్ధృతాభిస్తు, హీనాభిః ఫేనబుద్బుదైః ।
వహ్నినానచతప్తాభి, రక్షారాభిరుపస్పృశేత్ ॥

பாரத் வாஜ:

శ్లో॥ ఆయతంసవ్యతఃకృత్వా, గోకర్ణాకృతివత్కరం ।
సంహృతాంగుళినాతోయం, గృహీత్వాపాణినాద్విజః ।
ముక్త్వాంగుష్ఠకనిష్ఠేన, శేషేణాంచమనంచరేత్ ।
మాషమజ్జనమాత్రాస్తు, సంగృహ్యత్రిపిబేదపః ॥

தாத்:—மண், ஜலம், இவைகளால் கரசரணாதிகளைச் செவ்வையாய்ச் சுத்திசெய்து கொண்டு, சிகா எக்ஞோபவீதங்களைச் சரிப்படுத்தி வேஷ்டியைச் சிராயுடுத்திக்கொண்டு ஏகாந்தமாய் ஓர் ஸ்தலத்தி லுட்கார்ந்து மௌனியாய் உப்பு, காரம், க்ஷாரம், சூடு இல்லாத சுத்தமான ஜலத்தை கோகர்ண க்ருதியான கையில் உளுந்து மறையும்படியான அளவில் எடுத்துக்கொண்டு, அச்சுதாய நம:, அநந்தாய நம:, கோவிந்தாய நம: என்றுவது, அஸ்மத் குருப்யோ நம:, அஸ்மத் பரமகுருப்யோ நம:, அஸ்மத்சர்வ குருப்யோ நம:, என்றுவது, அல்லது உத்திரவாக்கியத்தை யாவது உச்சரித்து, பிராமணன் மார்பளவு போகக்கூடிய ஜலத்தாலும், க்ஷத்திரியன் கண்ட மளவு போகக்கூடிய ஜலத்தாலும், வைசியன் சிறு நாக்களவு போகக்கூடிய ஜலத்தாலும், சூத்திரன் உதடு நனையக்கூடிய ஜலத்தினாலும் மூன்று தபா ஆசமனம்செய்து, வாயை யிரண்டுதரம் துடைத்து, நேத்திரம், காது, நாசி, வயிறு, மார்பு, சிரம், ஆகிய ஆறு ஸ்தானங்களையும் ஜலத்தால் துடைத்தல் ஆசமனமென்று சொல்லப்படுகிறது. இஃதியற்றுவிடில் திரேகம் அசுத்தியடைகின்றது.

மநு.

శ్లో॥ కృత్వామూత్రంపురీషంచ, పాణ్యాచాంతపస్పృశేత్ ।
పీత్వాపోధ్యేష్యమాణాంశ్చ, వేదమగ్నించసర్వదా ।
సుత్వాక్షుత్వాచభుక్త్వాచ, నిష్ఠీవోక్త్వానృతంవచః ।
రథ్యాంశ్మశానంచాక్రమ్య, ఆచామేత్ప్రియతోపిసన్ ।
అథో వాయుసముత్సర్గే, ఆక్రందేక్రోధసంభవే ।
మార్జాలామూషికస్పర్శే, ప్రహాసేనృతభాషణే ।
నిమిత్తేష్వసుసర్వేషు, కర్మకుర్వన్నుపస్పృశేత్ ॥

கூர்மம்.

శ్లో॥ చండాలమ్లేచ్ఛసల్లాపే, స్త్రీశూద్రోచ్ఛిష్టభాషణే ।
ఉచ్ఛిష్టంపురుషంస్పృష్ట్వా, భోజ్యంచాపితథావిధం ।
ఆచమేదశ్రుపాతేవా, లోహితస్యతథైవచ ।
అగ్నేర్గవామదాలంభే, స్పృష్ట్వాప్రయతమేవచ ।
స్త్రీణామథాత్మసంస్పర్శే, నీవీంవాపరిధాయచ ॥

தா:—ஜலமல விசர்ச்சனம் செய்த பின்பும், சௌசம் செய்த பின்பும், நித்திரை நீங்கிய பின்பும், தும்மலுண்டான பின்பும், போ[illegible]ஜனம் செய்த பின்பும், பொய்சொன்ன பின்பும், வெளியில் போய் வந்த பின்பும், அசுத்தஸ்தலத்தை மிதித்த பின்பும், அபானவாயு பரிந்த பின்பும், அழுத பின்பும், கோபமுண்டான பின்பும், பூனை, பெருச்சாளி, பக்ஷிகள், இவைகளைத் தீண்டின பின்பும், சண்டாளர், மிலேச்சர், பாஷண்டிகள், இ[illegible]ஸ்ரீகள், சூத்திரர்கள், உச்சிஷ்டகையர், இவர்களுடன் சம்பாஷித்த பின்பும், பிரேதத்தைப் பார்த்த பின்பும், ஸ்ரீயை தொட்ட பின்பும், அவசியம் ஆசமனம் செய்யல் வேண்டும். விசேஷ தோஷங்கள் ஏற்படின் ஆசமனம் செய்து, (108) ருக்குகளாயினும் காயத்திரி ஜபமாயினும் செய்யவேண்டும். ஔபாசனம், ஜபம், யாகம், திருவாராதனம், நித்திய நைமித்திய ஔவ்விய கவியங்கள் செய்ய நேரிடும்போ தெல்லாம் ஸ்நாநம்செய்து ஆசமனமுடித்து உபக்ரமிக்க வேணும். கிழக்கு அல்லது வடக்கு முகமேனு மிருந்து ஆசமனம் செய்யவேண்டும். மேற்கு முகமிருந்து செய்யின் தோஷமுண் டென்பதாகவும், தென் திசை நோக்கிச்செய்யின் புனஹ தீர்த்தமாடி ஆசமனம் செய்யவேண்டு மென்றும் சுருதிகளில் சொல்லப்பட்டதால் பூர்வதிக்கை நோக்கிச் செய்வதே உத்தமமாம். ஆசமனம் செய்யும்போது பெருவிரல், சிறு விரலைத் தவிர்த்து மற்ற மூன்று விரல்களாலே செய்யும் ஆசமனமே சிரேஷ்ட

மானது· ஸ்நாநம், காதனம், பானம், இவைகளைச் செய்யு முன், ஒருதர ஆசமனமும், செய்த மேல் இருமுறை ஆசமனமும் செய்தல் விதியாகும். பாதசுத்தி செய்யாமலும், சிகையை முடியாமலும், பூணூலை சரியாய் அணியாமலும் ஆசமனம் செய்வாராகில் அசுத்தாளா கின்றனர்.

தந்த தாவனக்கிரமம்.

ஆங்கீரஹ.

శ్లో॥ ఆమ్రపున్నాగబిల్వానా, మపామార్గశిరీషయోః ।
భక్షయేత్ప్రాతరుత్థాయ, వాగ్యతోదన్తధావనం ।
ఉదఙ్ముఖప్రాఙ్ముఖోవ, కాషాయంతిక్తకంతథా ।
ప్రాతుర్భుక్త్వాచయతవా, గ్భక్షయేద్దన్తధావనం ॥

கவி:—வேலுக்குப் பல்லிருகும் வேம்புக்குப் பல்லொழிவு பூலுக்கு மோகம் பொசியுமே—ஆலுக்கு வெண்டாமரையாள் வீற்றிருப்பள் நாயுருவி கண்டால் வசீகரமாம் காண்.

தாத்:—என்றமையால் மா - புன்னாகம், பில்வம், நாயுருவி, வேம்பு - ஆல், வேல், பூல், இவைகளும் இவைபோன்ற துவர்ப்புகுச்சிகளும். தந்த வலிவைச் செய்யக்கூடிய சூரணங்களும், கரிசலாங் கண்ணிபோன்ற மூலிகை யிலைகளும் தந்தசுத்திக்குதவும். மேற்கண்ட குச்சிகளில் ஒன்றை (12) அங்குல நீளமுள்ளதாய் கோணவில்லாததாய்க் கொணர்ந்து செவ்வையாய்ச் சுத்திசெய்து கிழக்கு அல்லது வடக்கு முகமாயுட்கார்ந்து பற்களை களைமாற்றி ஜிக்வாலேபனம் கண்டூஷாதிகளை முடித்து சுத்த ஜலத்தால் வாயலம்பி இடது பக்கமா யுமிழ்தல் வேண்டும். நின்று கொண்டும் நடந்து கொண்டும் பற்களை துலக்கக் கூடாது.

ஆக்ஞவல்கியர்.

శ్లో॥ ఇష్టకాలోష్టపాషాణైః, ఇతరాంగుళిభిస్తథా ।
ముక్త్వాచానామికాంగుష్ఠా, వర్జయేద్దన్తధావనం ॥

தா:—செங்கல், மண், கரி, சாம்பல், ஓடு, இவைபோன்றவற்றாலும், சுண்டு விரல், நடுவிரல், கட்டை விரல், இவைகளாலும் தந்த தாவனம் செய்யக்கூடாது. செய்வரேல் ஐஸ்வர்யம் குன்றி விடுமென்பதாக ஆக்ஞவல்கியர் சுருதி புகலும்.

தீர்த்தமாடும் கிரமம்.

வியாசஹா.

శ్లో॥ ఉషఃకాలేతుసంప్రాప్తే, కృత్వాచావశ్యకంబుధః ।
స్నాయాన్నదీషుశుద్ధాసు, శౌచంకృత్వాయథావిధి ।
అస్నాత్వానాచరేత్కర్మ, జపహోమాదికంచయత్ ।
లాలాస్వేదసమాకీర్ణ, శయనాదుత్థితఃపుమాన్ ।
అత్యంతమలినఃకాయో, నవచిత్రసమన్వితః ।
ప్రపత్యేవదివారాత్రం, ప్రాతస్స్నానంవిశోధనం ।
ప్రాతస్స్నానంప్రశంసంతి, దృష్టాదృష్టఫలాహితత్ ।
సర్వమర్హతిశుద్ధాత్మ, ప్రాతస్స్నాయిజపాదికం ॥

தாத்:—உஷத்காலத்தில் எழுந்து விதிப்பிரகாரம் செய்யவேண்டிய சௌசாதிகளைக் கிரமமாகச் செய்து முடிந்த பின், சுத்தமான நதி நதம், தடாகம், கூவம், இவைகளில் ஸ்நாநம் செய்து மடி வஸ்திரம் தரித்து நித்திய நைமித்திக ஜபம், ஓமம், தேவதார்ச்சனை முதலிய கர்மங்களை நடத்தவேண்டும். தீர்த்தமாடாமல் எவ்வித காரியத்தையும் ஆரம்பிக்கக் கூடாது.

விஷ்ணு.

శ్లో॥ నదీనదతటాకేషు, దేవఖాతవిశేషుచ ।
నిత్యక్రియార్థంస్నాయీత, గిరిప్రసవణేషుచ ।
కూపేషూద్ధృతతోయేన, స్నానంకుర్వీతవాభువి ।
గృహేచోద్ధృతతోయేన, హ్యథవాభువ్యసంభవే ॥

மநு.

శ్లో॥ స్నానముద్యాదేకవాసా, ననగ్నఃస్నానమాచరేత్ ॥

தாத்:—என்று சொன்னமையால், பூர்வோக்தமான சுத்தமான நதிகள் நதங்கள், குளங்கள், தடாகங்கள் பொய்கைகள், கூபங்கள், இவைகளில் ஸ்நாநமாசரிக்கவேண்டும். இவைகளுக்குச் சென்று ஸ்நாநம் செய்ய அநுகூலமில்லாத சந்தர்ப்பங்களில் ஜலத்தைக் கொணர்ந்து, ஆயிரந்தோள், இலத்தலைச்சரம், திரஸ்யகோடி, இவைகளைச் சொல்லி மந்திர ஆவாகனம் செய்து பகவத்பாகவத ஸ்ரீபாத தீர்த்தமென்று பாவித்து சிரசில் ப்ரோக்ஷணம் செய்து பகவத் பாக

வத கைங்கர்யத்திற் குருப்பாயிராநின்ற யிச்சரீரத்தை சுத்திசெய்கிறே னென்கிற எண்ணத்தோடு ஸ்நாநம் செய்யல் வேண்டும்.

ஸ்நாநம், போஜனம், திருவாராதனம், இவைகள் செய்யும் போது ஏகவஸ்திரத்துடன் இருக்கக் கூடாதென்று சொல்வதால் இரண்டு வஸ்திரத்தோடு நதியின் எதிர் முகமாய் நின்று தீர்த்தமாடல் வேண்டும்.

மா-பு.

శ్లో॥ అపమృజ్యాన్నచస్నానే, గాత్రాణ్యంభరపాణిభిః ।
నచనిర్ధనుయాత్కేశా, న్వాసశ్చైవనపీడయేత్, ఉత్తీర్యంపీడయేద్వస్త్రం ॥

தாத்:—தீர்த்தமாடின பின்பு கட்டியிருக்கும் ஈரவேஷ்டியினாலும், கைகளினாலும் உடம்பை துடைக்கக் கூடாது. சிகையை ஜலத்திற்குள் உதறக்கூடாது. ஜலத்திற்குள் வஸ்திரத்தைப் பிழியவொண்ணாது. கறைக்கு வரும்போது, இராமாநுஜ சதஸ்லோகியின் பாசுரத்தையாவது, எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றாவது சொல்லி வரவேண்டும்.

(இரா-சதசு) அனிஸம்பஜதாம், அனன்யபாஜாம்,
சரணம் போருஹ மாத ரேணுபும்ஸாம், விதரன்னிபுர்தம்,
விபூதி ஜுஷ்டாம், ஜபராமாநுஜ ரங்கதாம்னிநித்யம்.

யாக்ஞ வல்கியர்.

శ్లో॥ స్నాత్వైవంవాససీశుక్లే, ఆచ్ఛిన్నేపరిధాయచ ।
ఆగాఢేదౌతవస్త్రస్య, శాణక్షౌమాదికానిచ ।
కుతుపంయోగపట్టంచ, వివాసాస్తునవైహతేత్ ॥

தா:—பிறகு உலர்ந்த வெள்ளை வஸ்திரத்தால் சரீரத்தைத் துடைத்து, பட்டு நார்மடி, தாவளி, அல்லது பின்னமில்லாத சுத்த தவுதவஸ்திரத்தை யுடுத்தி சுத்தமான வோரிட மமர்ந்து மூன்று ஆசமனம் செய்யல் வேண்டும்.

தக்ஷ:

శ్లో॥ ప్రాతర్మధ్యాహ్నయోస్నానం, వానప్రస్థగృహస్థయోః ।
యతేస్త్రిషవణస్నానం, సకృచ్చబ్రహ్మచారిణః ॥

தா:—வானப்ரஸ்தன், க்ருஹஸ்தன் இவர்கள் பிராதக்காலமும், உச்சிக்காலமும், சன்னியாசி மூன்று காலமும், பிரம்மசாரி பிராதக் காலத்திலும் ஸ்நாநம் செய்யவேண்டு மெனச் சொல்லப்பட்டது.

விஷ்ணு பாரதம்:

శ్లో॥ బ్రహ్మక్షత్రవిశాంచైవ, మంత్రవత్స్నానమిష్యతే।
తూష్ణీమేవహిశూద్రస్య, స్త్రీణాంచకురునందన॥

தா:—பிர்ம்ம க்ஷத்திரிய வைசியர்கள், மந்திரஸ்நாநம் செய்ய வேண்டும், ஸ்திரீகளும் சூத்திரர்களும் மந்திரமில்லாமல் ஸ்நாநம்செய்ய வேண்டுமெனக் கண்ணபிரானால் தர்ம நந்தனுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

மார்க்கண்டேய:

శ్లో॥ పురాణానాంనరేంద్రాణాం, నృషీణాంచమహాత్మనాం।
స్నానంకూపతటాకేషు, దేవతానాంసమాచరేత్॥

தா:—பூர்வகால அரசர், மஹான்கள், தேவர்கள், இருடிகள், இவர்களால் நிர்மாணம் செய்யப்பட்ட, நதி நதங்கள், தடாகங்கள் குளங்கள், கூபங்கள், பொய்கைகள், இவைகளில் ஸ்நாநம் செய்ய உத்தமம்.

வியாச:

శ్లో॥ అసత్ప్రవృష్టేమనస్నాయా, త్తదైవాసంస్తుతేషుచ।
ఆత్మీయేష్వపినింద్యేషు, దుష్టేస్వల్పజలేషుచ॥

தாத்:—தாங்களே உண்டு பண்ணிய தடாகம், பொய்கை கூவங்களாயினும், நீசரால் ஸ்பரிசிக்கப் படுமாயின் ஸ்நாநம் செய்யத் தக்கதன்று. சிரேஷ்டமாகாததும், நிந்திக்கக் கூடியதும், வியாதிக்கு ஆஸ்பதமானதும், குறைந்த ஜல முடையதும், புழுச்சம்மந்த மானதும், துர்வாடை யுள்ளதுமான ஜலாஸயங்களில தீர்த்தமாடக் கூடாது.

ஜாபாலி:

శ్లో॥ స్నానంకృత్వార్ద్రవాసాస్తు, విణ్మూత్రంకురుతేయది।
ప్రాణాయామత్రయంకృత్వా, పునస్స్నానేనశుద్ధ్యతి॥

தா:—தீர்த்தமாடி ஈரவஸ்திரத்தோடிருக்கும் சமயம் மலஜல விசர்ஜனம் செய்வாராகில் புன: ஸ்நாநம் செய்து மூன்று பிராணயாமம் செய்வராகில் சுத்தியடைகின்றனர்.

மநு.

శ్లో॥ చండాలశవయూపాంశ్చ, స్పృష్ట్వాస్నాతాంరజస్వలాం।
స్నానార్హాస్తుయదాస్నాతి, స్నానంనైమిత్తికంహితత్॥

தா:—பஞ்சமர், சவம், துருஷ்கர், ரஜஸ்வலை, பன்றி, நாய், மலம், மூத்திரம், எச்சில், இவற்றைத் தீண்டில் இந்ததோஷம் நீங்கச் செய்யும் ஸ்நாநம் நைமித்திக ஸ்நாநமென்று புகலப்படுகிறது.

ஸ்நாந பேதங்கள்.

ஆக்நேய புராணம்.

శ్లో॥ నిత్యంనైమిత్తికంకామ్యం, క్రియాంగామలకర్షణం ।
క్రియాస్నానంతథాషష్ఠం, షోడాస్నానంప్రకీర్తితం ॥

தா:—நித்தியம், நைமித்திகம், காமியம், கிரியாங்கம், மலாபகர்ஷணம், கிரியா, என ஸ்நாநங்கள் அறுவகைப் படும்.

யாக்ஞவல்கியர்.

శ్లో॥ మంత్రంభౌమంతథాగ్నేయం, వాయవ్యందివ్యమేవచ ।
వారుణంమానసంచైవ, సప్తస్నానాన్యనుక్రమాత్ ॥

* தா:—இஃதன்றி, மந்திரம், பௌமம், ஆக்னேயம், வாயவ்யம், திவ்யம், வாருணம், மானசம், என எழுவகை ஸ்நாநங்களுண்டென்று ஆக்ஞவல்கியர் சொல்லியிருக்கிறார்.

எழுவகை ஸ்நாநத்தின் விவரம்.

1. ஆபோதிஷ்டாமயோபுவஃ என்கிற மந்திரத்தினாலாயினும், துவய மந்திரத்தி ரத்தினாலாயினும், தீர்த்தமாடல் மந்திரஸ்நாநமென்று சொல்லப்படுகிறது.

2. மந்திரம்ருத்திகையை சரீரமெல்லாம் பூசிக்கொள்ளல் பௌமஸ்நாநமாம்.

3. ஓமபஸ்பத்தை திரேகமாதிபந்தம் பூசிக்கொள்ளல் ஆக்னேய ஸ்நாநமெனப் படும்.

4. பசுக்களின் குழம்பு தூளிதத்தைத் திரேகத்தில் பூசிக்கொள்ளல் வாயவ்யஸநாநமென்று சொல்லப்படுகிறது.

---

* குறிப்பு:—பின்னும், சில ரிஷிகளின் மதப்படிக்கு, கண்ட ஸ்நாநம், கடிஸ்நாநம், கபிலாஸ்நாநம், பஞ்சாங்கஸ்நாநம், புண்டரஸ்நாநம் என ஐந்து ஸ்நாநங்கள் செய்யலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

3

5. ஜலத்தில் மூழ்கல் வாருணஸ்நாநமென்று புகலும்.

6. மழையில் நனைதல் ஆதபனுல் உலர்தல் இந்த ஸ்நாநத்தைத் திவ்விய மென்று சொல்லப்பட்டது.

7. ஸ்ரீ விஷ்ணுவின் பாதத்தில் கங்கை பிரவஹித்து சிரசின் பிர்ம்மரந்திரத்தின் வழியாகப் பிரவேசித்து சரீர முழுதும் வியாபித்து விட்டதாக பாவித்து தியானம் செய்து நிற்பது மானஸ ஸ்நாநமென்று மக ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐவகை ஸ்நாநங்களுக்கு விவரம்.

1. கண்டம் வரை ஸ்நாநம் செய்தல் கண்டஸ்நாநமென்று சொல்லப் படுகிறது.

2. இடுப்பின் வரையில் தீர்த்தபாடல் கடிஸ்நாநம் என்று புகலப்படும்.

3. ஈரமான வஸ்திரத்தினுல் சிரமுதல் உடலாதியந்தம் துடைத்துக் கொள்ளுதல் கபிலமென்று சொல்கிறுர்கள்.

4. முகம் அஸ்தம் பாதங்களை சுத்தி செய்து கொள்ளுதல் பஞ்சாங்க ஸ்நாநமாம்.

5. துவாத சோர்த்துவ புண்டரங்களையாவதுப், பஞ்சாக்ஷர ஜபபஸ்மத்தினுலாகிலும், திரேகத்தை அலங்கரித்துக் கொள்ளல் புண்டரஸ் நாநமென்று ஆன்றோர் புகல்கின்றனர்.

குறிப்பு:—மேலே சொல்லப்பட்ட ஸ்நாநங்கள் ஐந்தும் ஆபத்காலத்திலும் ரோககாலத்திலும் வழிநடை காலத்திலும், வயோதிக காலத்திலும் பிரசவ காலத்திலும், உபயோகிக்கத்தகுந்ததென்று மேலோர் புகன்றுளார்.

இயாக்ஞ வல்கியர்.

శ్లో॥ ఆపఏవసదాపూతా, తాసాంవహ్నిర్విశోధకః ।
తతస్సర్వేషు కాలేషు, ఉష్ణాంభః పావనంస్మృతం ॥

தா:—ஜலம் எப்போதும் சுத்த முடையது; யாவற்றையும் பரிசுத்த மாக்குவது. அக்கினியோ யாகாதியக்கியங்களையும் உலகத்தையும் பாவனம் செய்விப்பது. ஆகையாலிதன் சம்பந்தம் பெற்ற சுடு ஜலத்தின் விசேஷத்தைக் குறித்து இவ்விடம் விஸ்தரிப்பது அனுவசியமாகும். மேலும் சாரீரக சாஸ்திரங்களுக்கும் உகந்ததாகவு மிருக்கின்றமையால் வெந்நீரில் ஸ்நாநம் செய்தலும் விசேடமென்று இயாக்ஞ வல்கியர் சொல்லி யிருக்கிறுர்.

வியாச.

శ్లో॥ శీతాస్స్వప్సునిషిచ్యోష్ణామంత్రసంభారసంభృతా ।
గేహేపిశక్యతేస్నానం నదీఫలసమంవిదుః ॥

தா:—சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் உஷ்ண ஜலத்தைச் சேர்த்து மந்திராவாஹனம் செய்து க்ருஹத்தில் ஸ்நாநம் செய்தாலும் நதியில் ஸ்நாநம் செய்ததோடொக்கு மென வியாசர் சொல்லியிருக்கிருர். ஆயினும் காலதேசவர்த்தமானங்களை அநுசரித்து நடத்தலே யுகந்ததாகும்.

குறிப்பு:—மலைப்பிறதேசங்களிலும், மலையாள தேசத்தில் சில பாகங்களிலும் பனியதி கரித்தும், குளிரதிகரித்துமிருக்கப்பட்ட ஸ்தலங்களிலும் சூடான ஜலத்தை வார்த்து ஸ்நாநம் செய்கிருர்கள்.

மார்க்கண்டேயஃ

శ్లో॥ సర్వకాలంతిలైస్స్నానం, పుణ్యవాన్సోబ్రవీన్మునిః ।
తుష్యత్యామలకైర్విష్ణు రేకాదశ్యాంవిశేషతః ।
శ్రీకామస్సర్వదాస్నానం కుర్వీతామలకైర్నరః ।
సప్తమీంనవమీంచైవ పంచపర్వసువర్జయేత్ ॥

தா:—நெல்லிக்காயையரைத்துத் தலைக்குத் தேய்த்து நதியில் ஸ்நாநம் செய்வாராகில் சம்பத்தையடைகின்றனர்.

ஏகாதசியன்று ஸ்நாநம் செய்தால் விஷ்ணு பிரீதி யடைகின்றனர். அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்த்தி, சூரியக்கிரகணம், சப்தமி, நவமி, இத்தினங்களில், இந்த ஸ்நாநத்தையாகிலும், எண்ணெய் ஸ்நாநத்தையாகிலும் செய்வரேல் தம் ஆயுள் க்ஷீணத்தை யடைகின்றனர்.

வெண்ணிற முள்ள எள்ளின் எண்ணெயால் வாரம் இருமுறை ஸ்நாந மாடுபவர்கள் புண்ணிய லோகத்தை யடைகின்றனரென மார்க்கண்ட புராணம் புகலும்.

மநு:

శ్లో॥ పక్షాదౌచరవౌషష్ఠ్యాం రిక్తాయాంచతథాతిథౌ ।
తైలేనాభ్యంజ్యమానస్తు, ధనాయుర్భ్యాం విహీయతే ॥

தா:—பாட்டியமி - பாநுவாரம், சஷ்டி, சவுதி, நவமி, சதுர்த்தி, மங்களவாரம் இத்தினங்களில் எண்ணெய் ஸ்நாநம் செய்யக்கூடாது. செய்வரேல், ஐஸ்வர்யத்தையும், ஆயுளையும் இழந்து விடுகின்றனரென்று மநு சொல்லி யிருக்கிருர்.

శ్లో॥ అలాభే దేవఖాతానాం సరసాంసరితాంతథా ।
ఉద్ధృత్యచ్చతురఃపిణ్డా న్పారక్యస్నానమాచరేత్ ॥

பின்னும் நதி நதங்கள், தடாகங்கள், புஷ்கரணிகள், கூவங்கள், குளங்கள் இவைகள் ஒருவரால் உண்டாக்கப்பட்டதாயிருப்பின் அதனுள் இருக்கும் சேறு, செத்தை, கல், மண், இவைகளைக் கிஞ்சித்து எடுத்துக் கரையின்பேரில் போட்டு விட்டு மந்திரத்தோடு இரட்டை வஸ்திரத்துடன் நதியில் எதிர் முகமாயும் மற்றவைகளில் கிழக்கு அல்லது வடக்கு முகமாகவும் நின்று, திரிஸ்யகோடி, ஆயிரந்தோழ் இலைத்தலை, கங்கேச, திருக்காவேரி முதலானவைகளை அநுசந்தானம் செய்து கொண்டு தீர்த்தமாடல் விதியாம்.

சுலோ:—த்ரிஸ்ய கோடர்த்த கோடீச, தீர்த்தானி புவனத்ரயம், வைஷ்ணவாங்ரி ஜலேப்புண்யம், கோடி பாகேனனோ சமம்.

பா:—ஆயிரந்தோள் பரப்பி முடியாயிர மின்னிலக, ஆயிரம்பைந் தலைய அனந்தசயனனாளும் மலை, ஆயிரமாறுகளுஞ் சுனைகள் பலவாயிரமும் ஆயிரம்பூம் பொழிலும் சூழுமாலிருஞ் சோலையதே.

பா:—இலைத்தலைச் சரந்துறந்திலங்கை கட்டழித்தவன், மலைத் தலைப்பிறந் திழிந்து வந்து நுந்து சந்தனம் குலைத்தலைத் திருத்தெறிந்த குங்குமக் குழம்பினோடலைத்தொழுகு காவிரியரங்கமேய வண்ணலே.

அங்கன் னியாசகரன்னியாசக் கிரமம்.

ஐயாக்கிய சம்மிதை

சுத்தமான வோர் ஸ்தலத்தில், கிழக்கு அல்லது வடக்கு முகமாக குக்குடாசனமாயுட்கார்ந்து வலக்கையை கோகர்ணாக்ரிதியாக துடைமேல் வைத்திக் கொண்டு உளுந்து மறையக்கூடிய ஜலம் வார்த்து, அச்சுதாய நம: அநந்தாய நம: கோவிந்தாய நம: என்று தேவதீர்த்தத்தால் (விரல்களின் நுனியால்) மூன்று தபா ஆசமனம் செய்து முகத்தைத் துடைத்துக் கொண்டு ஜலத்தைத்தொட்டு, கேசவாய நம: என்று பெருவிரலால் வலது கன்னத்தையும், நாராயணாய நம: என்று இடது கன்னத்தையும், மாதவாய நம: என்று அங்குஷ்டம் அனாமிகையால் வலக்கண்ணையும், கோவிந்தாய நம: என்று இடது கண்ணையும், விஷ்ணுவே நம: என்று பெருவிரல் தர்சனி விரல்களால் வலது நாசியையும், மதுசூதனாய நம: என்று இடது நாசியையும், திரிவிக்கிரமாய நம: என்று பெருவிரல் சுண்டு விரல்களால் வலது காதையும், வாமனாய நம: என்று இடது காதையும்,

ஸ்ரீ தராய நம: என்று பெருவிரல் மத்திய விரலால் வலது புயத்தையும், இருடீகேசாய நம: என்று இடது புயத்தையும், பத்மநாபாய நம: என்று பெருவிரலால் நாபியையும், ஹிருதயத்தையும் தாமோதராய நம: என்று ஜலத்தைத் தொட்டு எல்லா விரல்களாலும் உச்சியையும் தொடல் வேண்டும். இஃதை அங்கன்னியாசகரன்னியாச சுத்தியென்று சொல்லப்படுகிறது.

குறிப்பு:— தேவதீர்த்தமென்பது கட்டைவிரல் சிறுவிரல் தவிர்த்து மற்ற விரலின் நுனியால் ஆசமனம் செய்வதாம்.

ஊர்த்துவ புண்டரதாரண விதி.

ஸ்ரீமந்நாராயணன் சகல சேதனுஜ் ஜீவனார்த்தமாக இருக்கு எஜுர் சாமாதர்வணமென்கிற நான்கு வேதங்களையும், வேதாந்தவை சேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சம், உத்திரமீமாம்சம் என்கிற சட்சாஸ்திரங்களையும், வாசுதேவ வராக நாரதீயகாத்தியாயன முதலிய 32 உபநிஷத்துக்களையும், பாத்மம், பிரமாண்டம், பாகவதம், ஸ்காந்த முதலிய 18-புராணங்களையும் உண்டாக்கி அவைகளில் ப்ரதி பாதிக்கப்படுகிற சுவேதம் ருத்திகை என்கிற திருமண்ணையும் உண்டாக்கினர்.

எம்பெருமானே சுவேதவராக கல்பத்தில் துஷ்ட நிரசனம் செய்யும் பொருட்டு சுவேதவராகமாக அவதரித்தார். அப்போது அவருடைய, கோர வக்ரதந்தம், பாதப், கேசம் இவைகளிலிருந்து, கிருஷ்ண, இரக்த, பீத, சுவேத, என்கிற நான்கு வர்ணங்களான மண் உண்டாயின. இதில் ஆயுளை வ்ருத்தி செய்வது கிருஷ்ணவர்ணமென்றும், ஆரோக்கியத்தைத் தருவது இரக்த வர்ணமென்றும், ஞானத்தைக்கொடுப்பது பீதவர்ண மென்றும், மோக்ஷத்தை அளிப்பது சுவேதவர்ண மண்ணென்றும் உலகில் பிரசித்தமாயிற்று. இவற்றில் முமுக்ஷுக்கள் தரிக்கத்தக்கதான வெண்ணிறமுள்ள திருமண்ணை சர்வேசனுடைய ஆக்ஞைபின்படிக்கு பெரியதிருவடியானவர் சுவேதத்தீபத்திலுள்ள பாறகட்டிகளாகிய திருமண்ணை விதிதப் பிரதேசங்களில் கொண்டுவந்து சேர்த்தார். பிரத்தியக்ஷமாக யிப்போதும் திருநாராயண புரத்தில் பெரிய திருவடி தன் கைகளில் திருமண்ணை வைத்துக் கொண்டிருப்பதைத் தரிசிக்கலாம். இஃதன்றி ஸ்ரீரங்கம், திருமழிசை, சுள்ளங்குடி முதலிய ஸ்தலங்களிலும் பார்க்கலாம்.

இத்தகைய மோக்ஷப்ரதமான வெணணிறமுள்ள திருமண்ணைத் திவ்யதேசங்களில் பாகவதர்களிடம் பெற்று எம்பெருமான்களுக்குச்

சமர்ப்பித்து கிஞ்சித்காரத்துடன் பாகவதர்களுக்கு ஸ்ரீ சூர்ண சஹிதமாய்ச் சமர்ப்பித்து மூலமந்திரத்தோடு அரிபாதாக்ருதியாக நெற்றி முதல் 12) ஸ்தலங்களிலும் பிராட்டிமார் சஹிதமாக தரித்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்ருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இருக்கு.

శ్లో॥ ఊర్ధ్వరేఖంప్రదధమూర్ధ్వలోకం ।
యాత్యంతేవిష్ణురయమంద్రాగ్నిఅవతం ।
దియావామదీయందధాసముదాదీర్ఘమా ।
యుక్స్త్మయస్తంపురుభుజాపరంధీమహీ ॥

எஜுர்

శ్లో॥ ధృతోర్ధ్వపుణ్డ్రః కృతచక్రధారీవిష్ణుంపరం ।
ధ్యాయతియోమహాత్మ, స్వరేణమంత్రేణ ।
సదాహృదిస్థితంపరాత్పరంయన్మహతోమహాంతం ॥

அதர்வண.

శ్లో॥ హరేఃపాదాకృతిమాత్మనోహితాయ ।
మధ్యేచిద్రమూర్ధ్వపుణ్డ్రంధారయతి ।
సపరస్యప్రియోభవతి, సపుణ్యవాన్ భవతి సముక్తిభాగ్భవతి ॥

ஸ்காந்தம் ஈஸ்வரவுவாச.

శ్లో॥ ఊర్ధ్వపుణ్డ్రవిధానంతే, వక్ష్యామిపరమంశుభం ।
సంపదారోగ్యవిజ్ఞానమోక్షప్రదముమాస్పృశే ।
కృష్ణారక్తాతదాపీతాశ్వేతామృత్స్నాచతుర్విధా ।
కథ్యతేపురుషైః పుణ్యైరైశ్వర్యాదిఫలార్థిభిః ।
పురావిష్ణుర్హిరణ్యాంచవినిహంతుంమహాభుజః ।
వరాహంవపురాసాద్య సాగరానవిలోడయత్ ।
కృష్ణాఘోరోద్గనాజాతారక్తాదంష్ట్రాగ్రఘాతనాత్ ।
పాదైశ్చఖననాత్ పీతాశ్వేతానేశరచాలనాత్ ।
కృష్ణాసంపత్ప్రదానిత్యం రక్తారోగ్యప్రదాభవేత్ ।
పీతాజ్ఞానప్రదాప్రోక్తా శ్వేతామోక్షప్రదానృణామ్ ॥

பிரமாண்டம்.

శ్లో॥ విమలాన్యూర్ధ్వపుణ్డ్రాణిసాంతరాళానియోనరః ।
కరోతివిపులంతత్రమందిరంయః కరోతిసః ।
ఊర్ధ్వపుణ్డ్రస్యమధ్యేతువిశాలేషుమనోహరే ।
లక్ష్మ్యాసార్ధంసమాసీనోరమేహంతత్రనిర్వృతః ॥

பத்மம் சங்கர:

శ్లో॥ ఊర్ధ్వపుణ్డ్రస్యమధ్యేతు విశాలేషుమనోహరే ।
లక్ష్మ్యాంసార్ధంసమాసీనో, దేవదేవోజనార్దనః ।
తస్మాద్యస్యశరీరేతు ఊర్ధ్వపుణ్డ్రంధృతంభవేత్ ।
తస్యదేహోభగవతో విమలంసుందరంశుభం ॥

பராசா:

శ్లో॥ ఆదాయవైష్ణవంక్షేత్రమృత్తికాంవిమలాంసితాం ।
మూలమంత్రేణాభిమంత్ర్య ఊర్ధ్వపుండ్రాణిధారయేత్ ।
లలాటాదిషుచాంగేషు, కేశవాద్యన్యథాక్రమాత్ ।
ద్వ్యంగుళంత్ర్యంగుళంవాపి సాంతరాళంప్రకల్పయేత్ ।
పార్శ్వమంగుళమాత్రేతు ఊర్ధ్వపుణ్డ్రస్యలక్షణం ।
హరేఃపాదాకృతింరమ్య సుపార్శ్వంసుమనోహరం ।
నాసికామూలమారభ్య లలాటాంతసువిన్యసేత్ ।
ఏవంసర్వాణిపుణ్డ్రాణి సచ్ఛిద్రాణ్యేవధారయేత్ ।
ప్రమాణహీనంబద్ధాగ్రమచ్ఛిద్రంచైవవర్జయేత్ ॥

தா: — என்பதாக ஊர்த்துவ புண்டரத்தைப்பற்றி அநேக பிரமாணங்கள் சொல்லப்பட்டிருப்பதினாலே அதை வேதோக்தமாக அணியும் பிரமாணத்தைப் புகல்கின்றேன்.

பாராசர சம்மிதை.

ஸ்நாநாநுஷ்டானசீலனான ப்ரபன்னன் சுசியானவோரிடத்தில் மணையிட்டு அதன்பேரில் திருமண் பெட்டியை எழச்செய்து பிரம்பு, பலகை, தென்னம் தடுக்கு, கிருஷ்ணாஞ்சினம் இவைகளில் ஒன்றில் தானும் பத்மாசனனாய், கிழக்கு அல்லது வடக்கு முகமாயுட்கார்ந்து மூன்றுதபாகையைத் தட்டி திருமண் பெட்டியை யவிழ்த்து கோகர்ணத்தில் தீர்த்தம் நிறைத்து, திருமந்திராநுசந்தானத்தோடு வாமஹஸ்தத்தில் கொஞ்சம் தீர்த்தம் சேர்த்து, ஹூம் ஹூம்யை நமஃ

என்றும் துவயாசநுசந்தானத்துடனும் திருமண்கதிரைச்சாந்தி ஸ்ரீசைலே சதனியன் தொடங்கிக்காலோசிதமாய்ச் சேவித்துக்கொண்டேபுண்டரங்களை 12 பனிரெண்டு ஸ்தலங்களிலும் தரிக்கவேண்டும்.

இருசமய விளக்கம்.

அங்குஷ்டம் பொருள் நல்கும்
அனுமிகை மைந்தரை யருளும் ஆயுள் தன்னை
தங்குகனிட்டி கையுதவும், தற்சனியங்
குலி முத்திதனையே நல்கும்
பொங்குமிந்த விரல்களன்றி நடுவிரலால்
புண்டரத்தைப் புனைதலாகா.

பத்ம புராணம் கவி.

குறுமையாய் வட்டம் கொண்டதாய்
கோணல் கொண்டதாய் மிகவுந்தீர்க்கமுமாய்
சிறுமையாய்க் குறுக்காய் மிகவிசாலமதாய்த்
திண்ணிதாய்ப் பருத்திடு நுணியாய்
வறுமைசேர் நெருக்கமானதாய்ப் பாதமற்றதாய்
வடிவிலாததுமாய்
நறுமையற்றதுமாய் நீண்டபுண்டரத்தை
நலமுளோர் அணிந்திடார் நங்காய்.

தா:—பெருவிரலால் அணியும் புண்டரம் சம்பத்தைக் கொடுக்கும். ஆள்காட்டி விரலினுவிடும் புண்டரம் புத்திர சந்தானத்தையுண்டு செய்யும். சிறுவிரலாலணியும் புண்டரம் ஆயுளை விருத்திசெய்யும். பௌத்திர விரலினாலணியும் புண்டரமானது மோக்ஷத்தைக் கொடுக்கு மென இவ்வாறாக சொல்லப்பட்டிருக்கிறது.

பின்னும் பார்வதிக்குச் சிவன் சொன்னதாவது, குறுகியதாகவும், வட்டாகாரமாகவும், கோணல் கொண்டதாகவும், மிகவும் நீண்டதாகவும், சிறிய தாகவும், குறுக்கு விசாலமாகவும், அதிக அகலமாகவும், உதிரும்படியான கெட்டியாகவும், நுணி பருத்ததாகவும், தரித்திரம் சேரும்படியான நெருக்கமாகவும், பாதமற்ற வடகலை திருமண்ணாகவும், அழகில்லாததாகவும், நலமில்லாது கவைபோன்றதாகவும், அளவிற்கு மிகுந்த நீளமுள்ளதாகவும் புண்டரத்தை விவேகிகள் அணிந்திடார் என்று சொல்லியிருக்கிறார். பின்னும் நெற்றியில் நான்கு அங்குல உயரமும், மூன்றங்குல யிடை வெளியும்,

வயிற்றில் 8-அங்குல உயர்த்தியும், மார்பு, தோள், பிருஷ்டம், கழுத்தின் சுற்றுப் பக்கங்களில் நான்கு அங்குல உயரமுமுள்ள திருமண் தரிக்க வேண்டும். பிராம்மணர்கள் 12-திருமண்ணும், க்ஷத்திரியர் புஜங்கள், மார்பு, நெற்றியிலும்; வைசியர் நெற்றி, மார்பிலும்; சூத்திரர் நெற்றி மட்டும் புண்டரமிடல் வேண்டுமென சில ரிஷிகளின் மதம்.

. பனிரெண்டு தானங்களிலும் புண்டர மணிய அவகாசமில்லாத சந்தர்ப்பங்களில், லலாடம், இருதயம் இருபுஜங்களில் மாத்திரம் தரிக்க வேணும். அதற்குமவகாசமின்மையேல் நெற்றி, பிடரி, பிருஷ்டம், இந்தயிடங்களில் தவராமல் அணியவேண்டும். ... என்று சொன்னமையால், விரல்களால் புண்டரமிடத் தெரியாதவர்கள் குச்சியாலிட்டுக்கொள்ளலாகும். மத்தியவெளி மூன்று அங்குல அகலமுள்ளதாக திருமண் தரிக்கவேண்டும். அப்படி தரியார் முகத்தைப் பார்க்கக்கூடாதென்றும், நாயின்காலே முகத்தில் வைத்திருப்பதோடு அந்த முகம் ருத்திரி பூமிக்குச் சமமாகுமென்றும் சாஸ்திரங்களில் முறையிடுகின்றது ஊர்த்துவ புண்டர மணிதல் மூவகை 1. குண்டலீக்ருதம். 2. அம்போஜமுகுளாகாரம் 3. சதுரஸ்ரகம் இப்போது அநுஷ்டானத்திலிருப்பது அம்போஜமுகுளாகாரம் - சதுரஸ்ரகம் - இவைகளைப் படத்தில் காணலாம். பிரபன்னன் எப்போதும் லலாடசூன்யமாயிருக்கக்கூடாதென்றும். கண்களுக்குத் தெரியாமல் நீர் திருமண்ணாக வைக்கக்கூடாதென்றும் சாஸ்திரங்களில் சொன்னமையால் சர்மம் தெரியாமல் தளமாய் மறுநாள் பரியந்தமிருக்கத் தக்கதாக புண்டரமிட வேண்டும்.

திருமண் அகப்படாத சந்தர்ப்பங்களில் கோபிசந்தனத்தினால், வில்வ மூலத்தின் மண், துளவின் மூலத்தின் மண் இவைகளால் புண்டரம் தரிக்கலாகுமென்று விதியிருக்கின்றது. எவ்வித ஆபத்காலத்திலும் பிரபன்னன் பஸ்மம் தரிக்கப்படாது. புண்டரத்தின்மீது, குங்குமம், சந்தனம், சாந்து, மை, இப்போக்கொற்ற பொட்டுகள் இட்டுக் கொள்ளக் கூடாது.

நாரதீயம்.

శ్లో॥ సర్పందృష్ట్వాయదాలోకేదవంతేభయసంయుతాః।
ఊర్ధ్వపుండ్రాంకితంతద్వత్ కంపతేయమకింకరాః॥

தா:—ஊர்த்துவ புண்டர தாரிகளைப் பார்த்தால் பூதப்ரேத பைசாசங்களும், சர்ப்பத்தைக்கண்டு பயந்தோடும் ஜனங்களைப்போல

ஓடிவிடுகின்றன வென்பதாக சாஸ்திரங்களிலும் நாரதீயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பரமேஷ்டி சம்மிதை.

శ్లో॥ అకారశ్చిత్స్వరూపస్య విష్ణోర్వాచక ఇష్యతే ।
ఉకారశ్చిత్స్వరూపాయాః శ్రియోవాచితథావిదుః ।
మకారస్తు తయోర్దాస ఇతి ప్రణవలక్షణం ॥

தா:—சர்வேசனாகியும், அகாரவாச்சியனாகியுமிருக்கும் எம்பெருமானுக்கும், உகாரவாச்சினியான பிராட்டிக்கும், மகாரவாச்சியர்களான ஆத்மாக்கள் யாவும் தாசபூதர்களாயிருக்கிறார்களென்பதை அறிவிக்கும் பிரணவாக்ஷரத்தைப்போன்ற சின்னமாகவும், ஊர்த்துவ லோகமாகிய பரமனுடைய பதத்தை அடையச் செய்யும் புண்டரமாகவுமிருப்பதினாலே, இதற்கு ஊர்த்துவ புண்டரமென்று பெயருண்டாயிற்று.

பின்னும், ஜபம், ஓமம், தவம், யாகம், எக்ஞம், சார்த்தம் முதலான சர்வ கர்மங்களைச் செய்யவேண்டுமானாலும், சாதுர்வர்ணஸ்தர்களும் புண்டரம் தரித்தே ஆரம்பிக்கக் கடவர். ஊர்த்துவ புண்டரமானது. சகலவேத சாரமான அக்ஷரத்ரயமாகவும், பிரணவஸ்வரூபமாகவும் இருப்பதால் பிரணவமில்லாத மந்திரங்கள் எப்படி பயனற்றதாகிவிடுமோ அதைப்போல புண்டரமணியாமல் செய்யும் கிரியைகளும் பயன்படாமல் போய்விடுகின்றன

பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்திரம்.

శ్లో॥ ఊర్ధ్వపుణ్డ్రప్రమాణాని స్థానాని మునిసత్తమా ।
వ్యూహభేదేన నామాని వక్ష్యామి చ పృథక్ పృథక్ ॥

தாத்:—இதற்கு முன்னர் ஊர்த்துவ புண்டரத்தின் மகாத்மியத்தையும் இதர புண்டரத்தின் நிகுர்ஷ்டத்தையும் சொன்னேன். இனி புண்டரங்களை யணியவேண்டிய ஸ்தலங்களையும் அதன் பிரமாண மந்திரங்களையும் சவிஸ்தாரமாகச் சாற்றுகின்றேன்.

శ్లో॥ చతుస్త్రిద్వ్యఙ్గులం వాపి విస్తారం పరికల్పయేత్ ॥

தா:—என்று சொன்னமையால் நெற்றியில், நான்கு அல்லது மூன்றங்குல உயர்த்தியாகவும், வயிற்றிலும், இருபுஜங்களிலும், எட்டு

அல்லது பத்தங்குல உயரமாகவும், மார்பு - பிரிஷ்டம் கழுத்தின் சுற்றுப் புறங்களில், நான்கு அல்லது மூன்றங்குலப் பிரமாணமுள்ளதாகவும் புண்டரம் தரிக்கவேண்டு மென்று சொல்லப்படுகிறது.

குறிப்பு:—சிலருக்கு குறுகிய சரீரமும், சிலருக்கு நீண்ட சரீரமுமிருக்கின்றமையால் பிரமாணத்தை அநுசரியாமல் தகுந்த அங்குல ப்ரமாணமாகப் புண்டரம் தரிக்கலாம்.

பராசர:

శ్లో॥ లలాటే కేశవాయేతి చతురంగుళమాయతం ।
చతుశ్చక్రధరం దేవం, శుద్ధజాంబూనదంప్రభమ్ ॥

தா:—பத்தரை மாத்துத் தங்கம்போன்ற பிரகாசமும், நான்கு சக்கிரங்களையும் கொண்ட கேசவனென்கிற பெயருடைய திருமண்ணை நான்குஅங்குல உயரமும், ஒரு அங்குல அகலமும், இடை வெளி மூன்றங்குலமுள்ளதாகப்புண்டரத்தை கேசவாய நம: வென்று நெற்றியில் தரிக்க வேண்டும். (1)

శ్లో॥ నాభౌ నారాయణాయేతి ధారయేత్తుదశాంగులం ।
చతుశ్శంఖధరం దేవం నీలజీమూతసన్నిభమ్ ॥

தா:—நீலமேகம் போன்ற காந்தியும் நான்கு சங்கங்களைப் பெற்ற நாராயணனை, 10 - அல்லது, 8 - அங்குல உயர்த்தியுடையதாக வயிற்றில் தரிக்க வேண்டும். (2)

శ్లో॥ హృదయే మాదవాయేతి న్యస్యేదష్టాంగులస్తథా ।
చతుర్గదాధరన్దేవమింధీవరదళప్రభమ్ ॥

தாத்:—கருநெய்தல் போன்ற காந்தியும் நான்கு கதைகளையுமுடையவனை நான்கு அங்குல உயரமாக மார்பில் மாதவாய நம: யென்று தரிக்க வேண்டும். (3)

శ్లో॥ గోవిందాయేతి కణ్ఠే చ ధారయేచ్చతురంగులం ।
చతుర్ధనుర్ధరం దేవం, కోటిచన్ద్రసమప్రభమ్ ॥

தா:—கோடி சந்திரப்ரபையை யொத்தவனும் நான்கு தநுசுக்களைத் தரித்தவனுமான கோவிந்தனை, நான்கு அல்லது மூன்றங்குல உயரமாகக் கண்டத்தில் தரிக்க வேண்டும். (4)

శ్లో॥ విష్ణుశ్చదక్షిణేకుక్షౌ ధారయేత్తుదశాంగులం ।
చతుర్హలధరం దేవం, పద్మకింజల్కసన్నిభమ్ ॥

தா:—தாமரைப்பூ தாது வொத்த வர்ணத்தையும் நான்கு கலப்பைகளையும் பெற்ற விஷ்ணுவை வலப்புற வயிற்றில் தரிக்கவும். (5)

శ్లో॥ మదుసూదనంబాహుమద్యే న్యసేదష్టాంగులంతదా ।
చతుర్ముసలభృద్దేవం అరవిందాభమేవచ ॥

தா:—தாமரைப் பூப்போன்ற காந்தியும் நான்கு உலக்கைகளையுமுடைய மதுசூதனனை வலது புஜத்தில் தரிக்க வேண்டும். (6)

శ్లో॥ త్రివిక్రమాయే●చాం సెధారయేచ్చతురఙ్గులం ।
చతుఃఖడ్గధరందేవంజ్వలదగ్నిసమప్రభమ్ ॥

தா:—ஜ்வலித்துக் கொண்டிருக்கிற அக்கினிபோன்ற தேஜஸையும் நான்கு கத்திகளையும் தரித்த விக்ரமனை வலது கண்டத்தில் தரிக்க வேண்டும். (7)

శ్లో॥ వామనంవామకృక్షౌతుధారయేత్తుదశాఙ్గులం ।
చతుర్వజ్రధరన్దేవం, తరుణాదిత్యసన్నిభమ్ ॥

தா:—உச்சிக்கால சூரியனைப்போன்ற பிரகாசத்தையும், நான்கு வச்சிராயுதங்களையும் உடையவாமன மூர்த்தியை இடப்பாக வயிற்றில் தரிக்கவும். (8)

శ్లో॥ శ్రీధరంబాహుమధ్యే తున్యసేదష్టాఙ్గులస్తథా ।
పట్టసాయుధభృద్దేవం పుండరీకాభమేవచ ॥

தா:—தாமரை போன்ற தேஜஸையும் நான்கு பட்டாகத்திகளையும் உடைத்தான ஸ்ரீதரனை இடது தோளில் தரிக்கவும். (9)

శ్లో॥ హృషీకేశస్తువామాంసేధారయేచ్చతురఙ్గులం ।
చతుర్ముద్గరభృద్దేవం విద్యుద్గకాసమప్రభమ్ ॥

தா:—மின்னல் போன்ற காந்தியும் நான்கு உழல் தடிகளையும் பெற்ற ரிஷீகேசவனை இடது கழுத்தில் தரிக்க வேண்டும். (10)

శ్లో॥ పృష్ఠేతుపద్మనాభేతి ధారయేచ్చతురఙ్గులం ।
సర్వాయుధధరందేవం, కోటిసూర్యసమప్రభమ్ ॥

தா:—கோடி சூர்ய காந்தியையும், சர்வாயுதங்களையும் தரித்திராநின்ற பத்மநாபனை பிரஷ்டபாசத்தில் தரிக்க வேண்டும். (11)

శ్లో॥ కకుదఃదామోదరేతి ధారయేచ్చతురఙ్గులం ।
చతుష్టాశధరందేవమింద్రకోపసమప్రభమ్ ॥

தா:— இந்திர கோபம்போன்ற சுககரவர்ணமுடையவரும், நான்கு பாசங்களையுடையவருமான எம்பெருமானுகிய தாமோதரனை பிடரியின்கண். தரிக்கவேண்டும். (12)

శ్లో॥ నమోస్తువాసుదేవాయమూర్ధ్ని చైవంత్రయోదశం ॥

தா:—இத்தியாதிப் பிரமாண ரீதியாய் தரித்து மீந்திருக்கும் திருமண்ணை வாசுதேவாய நமః வென்று சிரசில் பரிசித்துக் கொள்ளவும்.

குறிப்பு:—இதனை புண்டரமாகக் கணக்கிடப்படாது. பிரமாணமிருந்தாலும் அநுஷ்டானத்தில் சிலரில் காணப்பட வில்லை.

குறிப்பு:—கண்டத்தைச் சுற்றி நான்கு அங்குலப் பிரமாணமாக திருமண் தரிக்க வேண்டுமென்று விதியிருப்பினும், சரீரப்ரக்ருதிக்குத் தக்கபடியாக, இரண்டு அல்லது மூன்றங்குல உயரமுள்ளதாக தரிப்பினும் குற்ற மன்று.

శ్లో॥ ధారణాదూర్ధ్వపుణ్డ్రస్య శరీరంమన్దిరంహరే।
తస్మాత్తుసతతంధార్యమూర్ధ్వపుణ్డ్రంద్విజోత్తమైః ॥

தா:—கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மது சூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன், என்கிற (12) பகவத் ஸ்வரூப சின்னங்களான திருமண்ணையும், பிராட்டியின் ஸ்வரூபமான ஸ்ரீசூர்ணத்தையும் மேற்சொன்ன விதிப்பிரகாரம் எந்த சரீரத்தில் தரிக்கப்படுமோ அது நான் வாசம் செய்யும் சந்நதியென்று பகவான் சொல்லியிருப்பதில் சர்வரும் சந்ததமும் அணிந்து கொள்ளத் தக்கதாயிருக்கிறது.

குண்டலீக்ருதம் - அம்போஜ முகுளாகாரம்
சதுரஸ்ரகம்
என திருமண்ணில் மூன்று பிரிவுகள் உண்டு.

ஸ்ரீ சூர்ணப்ரபாவம்.

நாரத சம்மிதை.

உத்தராயண புண்யகாலத்தில் சுக்ல பக்ஷத்தில் சுபயோக சுப தினத்தில் உதயாத் பூர்வம் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு தன்னுடைய நிலத்திற்குச் சென்று சதுரமாக உழுது புண்யாஹவா. சனதீர்த்தம் ப்ரோக்ஷித்து பீஜாக்ஷரத்தை உபதேசம் செய்து கொண்டே மஞ்சள் கிழங்கை நடவேண்டும்.

முதிர்ந்த காலம் தெரிந்து நன்முகூர்த்தத்தில் வெட்டி யெடுத்து சுத்தி செய்து மேற் பற்றுகளை நீக்கி துண்டுகள் செய்து நிழலில் உலர்த்த வேண்டும்.

ககப்ரசன சம்மிதை.

శ్లో॥ అసంస్కృతాంహరిద్రాంతుముఖేంపేనరాధమః ।
తన్ముఖంనైవవీక్షేతచండాళమిః తంత్యజేత్ ॥

தா:—என்று சொன்னமையால் மேற்படி மஞ்சளை யிடித்து தனித்த சூரணத்தைத் தரித்துக்கொள்ளக் கூடாதென்றும், அதவா தரிப்பவர் அதமரென்றும், அவர்களுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்றும், அவனை சண்டாளனைப்போல தியஜ்ஜிக்க வேண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

అసంస్కృతాం = என்று சொன்னமையால் மஞ்சளுக்கு மூன்று வித சம்ஸ்காரம் உண்டென்பதாகத் தெரிகிறது.

1-வது. முன் நிழலில் உலர்த்திய மஞ்சள் கிழங்குகளிலுள்ள தோல், எண்ணெய், புழுக்கள், முசலியவற்றை நீக்கி உஷ்ணஜலத்தில் போட்டு வைத்து மறுபடி பழரசத்தாலும் படிகாரத்தினாலும் ஊறும் படி செய்து நிழலில் உணர்த்தி வைத்திருப்பதற்குத் திரவிய சம்ஸ் கார மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மரீசி:—ஷட்பாகம் சாலி தண்டுலம் என்றும், கோதூம சூர்ண மிஸ்ரம்து என்றும், மரீசி சொல்லியிருக்கிறார். பின்னும்

விஷ்ணு தத்வம்.

சந்தனம் துளசீபீஜம், ஷட்பாகம் சாலிதண்டுலம்
கோரோசன சுவர்ணம்ச, குங்குமாதி விமிஸ்ரிதம்
ஸ்ரீசூர்ணம் சூர்ணயோகேன, சுத்தம்தார்யம் த்விஜோத்தம:

தா:—(2-வது) சந்தனம், துளசிவிரை, சம்பா அரிசி, கோரோஜனம், தங்கப்பொடி, குங்குமப்பூ, முதலானதுகளைச்சேர்த்து மூன்று தபாயிடித்து ஐந்துதபா வஸ்திரகாயம் செய்து வில்வகுடுக்கைகளில் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டியதற்கு திரவிய சமஸ்காரமென்று விஷ்ணு தத்துவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3-வது ஸ்ரீ சூரண விளக்கம்.

இந்த சாஸ்திரரீதியாகவும் உடையவர் ஸ்ரீசூர்ணம்போன்ற வர்ணத்தோடாயினும், பாலசூரியன் காந்தியைப் போலாயினும், பிராட்டியின் வர்ணமாயாயினும், வாசத்தோடுசெய்த அரித்திரா சூரணத்தை, ஸ்ரீ, பூ, நீளா, சூக்தங்களாலும், 108-காயத்திரியாலும் ஜபித்து பெருமான் பிராட்டிகளுக்கு அபிஷேகம் செய்வித்து, பாகவத ததீயாராதனம் செய்து எம்பெருமானுக்கும் எம்பெருமாட்டிகளுக்கும் சமர்ப்பித்து கோஷ்டிக்கும் கிஞ்சித்காரத்தோடு விநியோகம்செய்து, சுவர்ணரஜித பில்வ நாரிகேளங்களால் செய்த சம்புடங்களில் பத்திரப்படுத்தி வைத்திருப்பதற்கு மந்திர சம்ஸ்காரமென்று சொல்லப்படுகிறது.

இவ்வித சமஸ்காரங்கள்செய்த ஸ்ரீ சூர்ணத்தைப் பிரபன்னன் தரிக்க வேண்டும். ஸ்ரீ சூர்ணம் அகப்படாத சமயங்களில் குங்குமப் பூவையிழைத்து அணியலாகுமென்று சாஸ்திரங்களில் கூறுகின்றன.

குறிப்பு:—தங்களுடைய நிலத்தில் பயிர்செய்த மஞ்சள் கிழங்கால் ஸ்ரீ சூர்ணம்செய்வது தத்கால அநுஷ்டானத்தில் கிடையாது. அஃது சாத்தியமான காரியமுமன்று ஆனதால் மஞ்சள் கிழங்குகளைப்பெற்று ஸ்ரீ சூர்ணம்செய்வது வைணவர்களுக்கு சகஜவிர்த்தியாக விருப்பதால், திவ்விய தேசங்களில் மேற்படியாரால் விற்பனை செய்யப்பட்டதைப் பெறல் வேண்டும். அரளுட்மாவில் பௌடர் சேர்த்து செய்யப்பட்டதும் அவைஷ்ணவர்களால் செய்யப்பட்டதும் வாங்கியணிதல் கூடாது. குங்குமம், சிந்தூரம், தனிமஞ்சள் சூர்ணம் இவைகளைத் தரித்துக்கொள்ளக் கூடாது.

ஸ்ரீசூரணமிடும்போது சாயிக்க வேண்டியது.

சுலோகம்.

1. லலாடேஸததம் தேவ்யா, ஸ்ரீயாஸஹ விராஜிதம்
சதுஃச்சக்ரம் நமஸ்யாமி, கேஸவம் கனகப்ரபம்.

2. அமுர்ரோத்பவயாதேவ்யா, சமாஸ்லிஷ்டமதோதமே
நாராயணம்கனஸ்யாமம், சதுஃ ஸ்ஸம்கந்மாம்யஹம்||

3. நித்யம்கமலயாஸ்லிஷ்டம், ஹ்ருதயேஹம்தயாம்புதிம்
மாதவம்மணிப்ருங்காபம், சிம்தயாமிசதுர்க்கதம்=

4. தேவ்யாச்சந்த்ரஸோபின்யா, தேவம்கம்டேவிராஜிதம்
சந்த்ரஹாஸம்சதுஃஸ்ஸார்ங்கம், கோவிந்தம்மபிஸப்ஸ்ரயே=

5. விஷ்ணுபத்னியாக்யயாதேவ்யா, குக்ஷௌதக்ஷணபார்ஸ்வகே
விஷ்ணும்சதுர்ஹலம்வந்தே, பத்மக்கிம்ஜல்கஸங்நிபம்=

6. வைஷ்ணவீஸமக்ஞயாதேவ்யா, கலிதம்தக்ஷிணேபுஜே
சதுர்முசலமப்ஜாபம், ஸம்ஸ்ரயேமதுஸூதனம்=

7. தக்ஷிணம்ஸேதயாவார்த்திம், வராரோஹாதிபம்ப்ரபும்
அக்னிவர்ணம்ஃசதுஃக்கட்கம், பாவயாமித்ரிவிக்ரமம்=

8. ஹரிஃப்ரியாபதிம்குக்ஷிவாம பார்ஸ்வஸ்தபுண்ட்ரகம்
வாமனம்பாலசூர்யாபம், சதுர்வஜ்ரம்விபாவயே=

9. வாமபாஹௌமஹாபாஹூ, ஸார்ங்கிணம்பதிமவ்யயம்
ஸ்ரீதரம்புண்டரீகாபம், சதுஃப்பட்டஸமாஸ்ரயே=

10. தேவதேவிகயாதேவ்யா, ஸ்ரீதம்வாமாம்ஸஸப்ஸ்ரிதம்
சதுர்முத்காமப்யேமி, ஹ்ருஷீகேஸம்தடித்ப்ரபம=

11. ஸ்ருஷ்டேஸீஹக்ருதயாதேவ்யா, மஹாலக்ஷ்மியாவிராஜிதம்
பஞ்சாயுதம்பத்மநாபம், நமஸ்யாம்யர்க்கரோசிஷம்=

12. ஸத்ாகருத்க்கதம்லோக, சுந்கரீபதிமவ்யயம்,
தாமோதரம்சதுஷ்பாஸம், இந்திரகோபநிபம்பஜே=

1. நெற்றி-ஸ்ரீதேவி,	7. வலக்கழுத்துவாரோஹை
2. வயிறு-அமிர்தோத்பவை	8. இடப்புறவயிறுஹரிவல்லபை
3. மார்பு-கமலை	9. இடதுதோள்சார்ங்கிண்யை
4. கண்டம்-சந்திரஸோபின்யை	10. இடதுகழுத்துதேவதேவி
5. வயிற்றின் வலப்பாகம்விஷ்ணுப	11. பிரிஷ்டம்-மகாலக்ஷ்மி
6. வலதுதோள்வைஷ்ணவ்யை[த்நி	12. பிடரி-லோகசுந்தரி=

குறிப்பு:—ஸ்ரீ சூர்ணஸ்தான பிராட்டிகளின் நாமங்களைப் பற்பல சாஸ்திரங்களில் பல படிபட்டிருக்கின்றன.

இந்த மந்திரா நுசந்தரனத்துடன் தரித்தமேல் தரையில் அலம்பிவிடாமல் தன் சிரசில் தேய்த்துக் கொள்ளவேண்டும்.

வாக்கிய குரு பரம்பரை.

1. அஸ்மத் குருப்யோநம:
2. அஸ்மத்பரம குருப்யோநம:
3. அஸ்மத்சர்வ குருப்யோநம:
4. ஸ்ரீமதே ராமாநுஜாயநம:
5. ஸ்ரீமத்பராங்குஸ தாசாயநம:
6. ஸ்ரீமத்தியா மனமுனயேநம:
7. ஸ்ரீராமமிஸ் ராயநம:
8. ஸ்ரீமதேபுண்டரீகா க்ஷாயநம:
9. ஸ்ரீமந்நாத முனயேநம:
10. ஸ்ரீமதே சடகோபாயநம:
11. ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாயநம:
12. ஸ்ரீயைநம:
13. ஸ்ரீதராயநம:

கூரத்தாழ்வார் சாயித்த ஸ்லோக குருபரம்பரை.

சுலோகம்.

அஸ்மத்தேசிகமஸ்மதீய பரமாசார்யான ஸேஷான்குரும்
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகி புங்கவமஹா பூர்ணம்முனிம்யாமுனம்
ராமம்பத்மவிலோசனம் முனிவரம், நாதம்ஸடத்வேஷிணம்
ஸேனேஸம்ஸ்ரயமிந்திராஸஹசரம், நாராயணம்ஸம்ஸ்ரயே.

திருமந்திரம்.

ஓம்நமோ நாராயணாய.

5

த்வயம்.

ஸ்ரீமந்நாராயண சரணௌஸரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாயநம:

சரமஸ்லோகம்.

ஸர்வதர்மான்பரித்யஜ்ஜய. மாமேகம் ஸரணம்வ்ரஜ,

அஹம்த்வாஸர்வபாபேப்யோ, மோக்ஷயிஷ்யாமி மாசுசஹ:

ப்ர. ஆசார்யவான் புருஷோவேத || என்கிற ஸ்ருதிப்ரகாரம் தன்னுடைய ஆசாரியன் செய்த உபகாரத்தைச் சிந்தித்து.

ப்ர. (ஸதாசார்யவம்ஸோக்ஞேய:) என்ற வாக்கியத்தின்படி தன்னுடைய ஆசார்யனின் வம்சபரம்பரை தனியன்களை சேவிக்கவும்.

1. ஸ்வாசாரியன்.

2. பரமாசாரியன்.

3. மணவாளமாமுனிகள்.

ஸ்ரீசைலேஸதயாபாத்ரம் தீபக்தியாதிகுணார்ணவம்,
யதீந்திரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முனிம்.

4. திருவாய்மொழிப்பிள்ளை.

நம: ஸ்ரீசைலநாதாய குந்திநகரஜன்மனே,
ப்ரசாதலப்தபரம, ப்ராப்யகைங்கர்யஸாலிநே.

5. பிள்ளை லோகாசாரியர்.

லோகாசார்யாய குரவெக்ருஷ்ண பாதஸ்யஸூனவே,
ஸம்ஸாரபோகி ஸம்தஷ்ட ஜீவஜீவாதவேநம:.

6. பெரியவாச்சான் பிள்ளை.

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுனஸூனவே,
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் சுலபஸ்ரீதரஸ்ஸதா.

7. வடக்குத் திருவீதிப்பிள்ளை.

ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமிஸிரஸாஸதா,
யத்ப்ரகாசப்ரகாஸேன ஸர்வஸித்திரபூன்மமா.

8. நம் பிள்ளை.

வேதாந்தவேத்யாம் ருதவாரிராஸோ,
வேதார்த்தசாரம் ருதபூரமக்ரியம்

ஆதாயவர்ஷம் தபஹப்ப்ரபத்யே,
காருண்யபூர்ணம் கலிவைரிதாஸம்.

9. நஞ்சீயர்.

நமோவேதாந்த வேத்யாய, ஜகன்மங்களஹேதவே,
யஸ்யவாகம்ருதாசார, பூரிதம்புவனத்ரயம்.

10. பட்டர்.

ஸ்ரீபராசரபட்டார்ய ஸ்ரீரங்கேசபுரோஹித:,
ஸ்ரீவத்சாங்கஸுத ஸ்ரீமான்ஸ்ரேயஸேமேஸ்துபூயஸே.

11. எம்பார்.

இராமாநுஜபதச்சாய, கோவிந்தாஹ்வானதாயினி,
ததாயத்தஸ்வரூபா ஜீயான்மத்விஸ்தரஸதலி.

12. எம்பெருமானர்.

யோநித்யமச்சுத பதாம்புஜயுக்மருக்ம,
வ்யாமோஹிதஸ்ததிதராணித் ருணயமேனே,
அஸ்மத்குரோர்பகவ தோஸ்யதயைகசிந்தோ,
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம்ப்ரபத்யே.

13. பெரிய நம்பி.

கமலாபதிகல்யாண குணம்ருதநிஷேவணம்,
பூர்ணகாமாயஸததம், பூர்ணயபஹ மேதநம:.

14. ஆளவந்தார்.

யத்பதாம்போருஹத்யான வித்வஸ்தாயேஷகல்மஷ:,
வஸூதுதாமுபயாதோஹம், யாமுனேயம்நமாமிதம்.

15. மணக்கால் நம்பி.

அயத்னதோயாமுனமாத்மதாஸ,
அளர்க்கபத்ரார்ப்பண நிஷ்க்ரியேண,
ய:க்கிரீதவானுஸ்தித யௌவராஜ்யம்,
நமாமிதம்ராமமமேய ஸத்வம்.

16. உய்யக்கொண்டார்.

நம:ப்பங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே,
ந்யஸ்தஸ்ஸர்வபராயாஸ்மத், குலநாதாயதீமதே.

17. நாதமுனிகள்.

நமோசிந்தயாத்புதக்லிஷ்டக்ஞானவைராக்யராசயே,
நாதாயமுனியேகாத பகவத்பக்தஸிந்தவே.

18. நம்மாழ்வார்.

மாதாபிதாயுவதயஸ்தனயாவிபூதிஸ்,
ஸர்வம்யதேவனயமேனமதன்வயானாம்,
ஆத்யஸ்ஸஸ்னக்குலபதேர்வகுளாபிராமம்,
ஸ்ரீமத்ததங்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்தனா.

19. ஸேனை முதலியார்.

ஸ்ரீரங்கசந்த்ரமஸ மிந்திரியாவிஹர்த்தும்,
வின்யஸ்யவிஸ்வசித சின்மயனாதிகாரம்,
யோநிர்வஹம்த நிஸமங்குளிமுத்ரயைவ,
ஸேனான்யமன்யவி முகாஸ்தமஸாஸ்ரியாமஃ.

20. பெரிய பிராட்டி

நமஃ ஸ்ரீரங்கநாயக்கியை யத்ப்ரூவிப்ரமபேததஃ,
ஈஸேஷிதவ்யஸவஷம்யநிம் நோன்னதமிதம்ஜகத்.

21. பெரிய பெருமாள்.

ஸ்ரீஸ்தநாபரணம்தேஜஃ, ஸ்ரீரங்கேஸயமாஸ்ரயே,
சிந்தாமணிமிவோத்பாந்த முத்சங்கேநந்தபோகினஃ.

இவைகளைச்சேவித்து நனிநாக்ஷ துளப பவித்திரமாலைகளைத் தரித்து கோகர்ணத்தில் தீர்த்தபடியைச்சேர்த்து அஞ்சலியோடு முகுளிதநேத்திரர்களாய் ஆசாரியருடைய திவ்யமங்கள விக்கிரஹத்தை, பெரியாழ்வார் கண்ணனை அநுபவித்ததுபோலபாதாதிகேசம்வரையிலும் தியானித்து பகவத் பாகவத சன்னிதியில் சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து ஸ்ரீபாததீர்த்தத்தை மூன்று தபாலபித்து திருவடி நிலைகளையும், அபயஸ்தம் முதலானதுகளை நேத்திர,சிரோ, பாஹுக்களில் ஒத்திக்கொண்டு திருமணித்தாவடத்தை திருமண்பெட்டியில் வைத்துக்கட்டி யதாஸ்தானம் சேர்ப்பிக்கவேண்டியது.

2-வது உபாதான காலவிதி.

சாண்டில்யம்.

శ్లో॥ ఉపాదానవిధింవక్ష్యయోగ్యాయోగ్యవిభాగతః ।
ద్వితీయకాలకర్తవ్యం యత్కర్మమునిపుంగవా ॥

தா:—ஹே முனிபுங்கவர்களே, பகவத் பாகவத கைங்கர்யங்களுக்கு உபயுக்தமான யோக்கியா யோக்கிய வஸ்துக்களையும், கந்த மூல பல, சாகா, சமித்துக்களையும், தனதான்யாதிகளையும் சம்பாதிக்க வேண்டிய காலமெதுவோ அந்தகாலத்தை உபாதான காலமென்று சொல்லப்படுகிறது.

శ్లో॥ పుష్పమూలఫలాదీని, శాకానివివిధానిచ ।
స్వేషుస్వేషుచకాలేషు, శ్రద్ధయాత్వర్జయేద్గృహే ॥

தா:—க்ருஹஸ்தன் பூர்வான்ன காலத்தில் எந்தெந்த வஸ்துக்களை சேகரிக்க வேண்டுமென்றால், திருத்துழாய், புட்பம், சமித்து, தர்ப்பை, பலவர்க்கங்கள், பால், தயிர், நெய், கரியமுதுகள், அந்தந்தக்காலத்தி லுண்டாகும் பழங்கள், தளிகைக்கு வேண்டிய சாமக்கிரியை கள், இவைகளைச் சிரத்தையுடன் சம்பாதிக்க வேண்டும்.

శ్లో॥ కుర్యాత్కర్మవిశుద్ధిభ్యః ప్రతిగృహ్యపివాదనమ్ ।
కులటాషణ్డపతిత స్త్వైలభ్యఃకాకనీమని ॥

தா:—பகவத் ப்ரீதிகரமான வேதோக்த கர்ம கைங்கர்யங்களைச் செய்வதற்காக, பொருள்களையும், சாகாதி கந்தமூல பலவர்க்கங்களையும், தளிகைக்குகந்த சாமக்கிரியைகளையும் சம்பாதிக்க வேண்டுவது அவசியமாயினும் பின்னால் சொல்லப்பட்டிருக்கும் விதிவிலக்குகளுக்குட்பட்டு சேகரம் செய்து தேவகாரியங்களை நடப்பிக்க வேண்டும்.

மநு.

శ్లో॥ ఆయధాతశిలోంఛైర్చ, శిష్యదత్తైక్రమాగతైః ।
జీవీత్కర్మవిశుద్ధేభ్యః ప్రతిగృహ్యపినాయనం ।
యాచితోనాపివర్తే తద్దైవ్యంహిత్వాశమేస్థితః ॥

தா:—உஞ்சப், சிலப், ருதப், அன்றுதம் அல்லது அமிருதம், என்று சொல்லப்பட்ட நான்கு விருத்திகளால் பிரபன்னன்

ஜீவிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதால், இதனைப்புகல்கின்றேன் கேட்பீராக.

1. உம்சமென்பது, அருவடையான புலன்களில் சிந்தியிருக்கும் தானியத்தை ஒவ்வொன்றாய் எடுத்துச் சேர்த்தாவதும், ஒருவர்வீட்டிற்கும் சொல்லாமல் உபாதானம் போகும்போது சத்புருடர்களால் கொடுக்கும்படியான தானியத்தைக் கொண்டாவதும் ஜீவிப்பது உம்சவிருத்தியென்று சொல்லப்படும்.

2. சிலம், அருவடையான புலன்களில் சிந்தியிருக்கும் தானியக் கதிர்களையாவதும், கடை மூடினபிறகு அந்தயிடத்தில் சிந்தியிருக்கும் தானியங்களையாவதும், எடுத்துவந்து சுத்தம்செய்து தளிகைசெய்து பகவதாராதனம் பாகவதாராதனம்செய்து புஜிப்பது சிலமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. பயிர்த்தொழில் வர்த்தக மிவற்றால் ஜீவிப்பது ருதமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

4. அன்றுதம், அல்லது அமிருதம், 100-க்கு எட்டணுவீதம் வட்டி வாங்கியாகிலும், சுயார்ச்சிதமாய் சத்விஷப சம்பாததியத்தினாலாயினும் ஜீவிப்பது அமிருதமென்று புகல்கின்றார்கள் பின்னும் அவரவர்கள் வர்ணாஸ்ரமத்திற்கு லோபமுண்டாகாமலும், பிறர் நிந்தைக்குட் படாமலும் ஒருவரை யாசிக்காமலும் பிறருக்கு யிம்சையில்லாமலும் பதார்த்தங்களைச்சேகரித்தல் உத்தமம். குலக்கிரமமாக வந்த சம்பத்தாலாகிலும், தன சிஷர்களாலாயினும், சிஷ்டர்களாலாயினும், இதர சத்விஷயங்களாலாயினும் திரவியார்ஜிதம் செய்து பகவதாரானதம் செய்வதுத் தமோத்தமம்.

சாண்டில்யம்.

శ్లో॥ ఉద్వృత్తామపిగృహ్ణీయాన్నాపద్యపికదాచన ।
మహాపాతకిన శ్చోరాదమ్బష్టాదభిశ స్తతః ॥

தா:—வேதோக்தமான கர்மங்களைச்செய்யாதவர்கள், விபசாரிகள், நபும்ஸகர், பாபம் செய்பவர்கள், குலப்பிருஷ்டர்கள், பஞ்சமாபாதகர், திருடர், நாவிதர், வேட்டையாடுவோர், பொற்கொல்லர், கட்குடியர், கள்விற்பவர், பிரமஹத்தி செய்தவர், குருபாரியைப் புணர்ந்தவர்,பரஸ்திரீகமனன், கிராமபுரோகிதன்,வேசியாபதி,உலுத்தன், குஷ்டரோகி, கோவில்மணியக்காரன், ஸ்திரீகளுக்கு உட்பட்டு நடப்பவன், பட்டுராஜு சாஸ்திர நிந்தை செய்பவன், பிறர் பொருளை யபகரிப்பவன், சத்துரு, கணக்கன், நெய், பால், தயிர்,

தேன், உப்பு, அரிசி, எள், குதிரை முதலியவற்றை விற்பவன், சிரார்த்தான்னம் புசிப்பவன், பரிவேத்தா, பரிவேத்தி, சில்பி இவர்களைப்போன்றவர்களிடத்தும் எவ்வித பிரயோஜனத்தையும் பெற்று பகவதாராதனம் செய்யக்கூடாதென தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

శ్లో॥ ఆయాసోపార్జితైర్వాపికర్మకుర్యాదతన్ద్రితః ।
స్వైరాపత్రపుష్పాద్యై సర్వాభావేసమర్చయేత్ ।
ఆలాభేసర్వభోగానాం జరాప్రతినిధిస్మృతమ్ ।
ఆలబ్ధదాన్యోవిప్రేభ్యం క్షత్రియాన్వాపియాచయేత్ ॥

தா:—மற்றெவ்விதமாக பகவதாராதனம் கைங்கர்யம் நடத்த வேண்டுமென்றல், தன்னுடை மூதோர்களால் ஆர்ஜித்த தனதான்ய பூஸ்திதிகளாலும், தான் கஷ்டத்துடன் விவசாய முதலிய காரியங்களால் சம்பாதித்த தனத்தினுலும், சிஷ்டரிடமிருந்து யாசித்த திரவியதினுலும் தேவ பிதுர்காரியங்களை நடப்பிக்கவேண்டும். இவ்விதமான திரவிய சகாயமொன்றும் கிடையாவிடில் ராஜீயகாரியமில்லாத உத்தம க்ஷத்திரியனையும், வைசியனையும், ஆஸ்ரயித்து யாசித்து தேவ காரியங்களை நடத்தல் வேண்டுமேயன்றி ஆபத்காலத்தினும் கூட ஞாதிகளையும், பந்துக்களையும் யாசிக்கக்கூடாது.

குறிப்பு:—உம்சம், சில, விருத்திகளால் தேடிய பொருளை மறுதினத்துக்கென்று வைத்துக் கொள்ளாமல் அன்றே சில விடவேண்டும். இவைகளில் ஒன்றும் லபிக்காத சந்தர்ப்பங்களில் வனத்திலுண்டாகும், காய், கனி, பல, சாக, மூல, துளவு, சுத்ததீர்த்தம், பால் புட்பாதிகளால் எம்பெருமானை பூஜிக்கலாகுமென ஸ்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

3-வது இஜ்ஜாகால விதி.

இஜ்ஜை யென்றால் தேவதார்ச்சனை, அல்லது திருவாராதனை மென்று சொல்லப்படுகிறது. இந்த திருவாராதனமென்பது யாவை யெனில், ஸர்வேஸ்வரனுன ஸேஷிக்குச் சேதனர்களாகிய சேஷபூதர்கள் தங்களுடைய சேஷத்வ சித்தியின் பொருட்டும் ஆசாரிய நியமனத்தின் பொருட்டும் சதா தவறாமல் செய்யும் நித்திய கைங்கர்யமாம்.

பின்னும் பஞ்சமஹா யக்ஞங்களில் சிறந்ததாயும் சதுர்வித புருடார்த்தத்தில் முற்பட்டதாயும் முத்தி சாதனமாயு மிருப்பதாலிதனை திரிகரணசுத்தியுடன் சர்வரும் அநுஷ்டிக்க வேண்டியதாகவும் இருக்கிறது.

பரமேசன், பரத்வ, வ்யூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சையென்கிற ஐந்து அவதாரங்களுடன் யாவத்ராளுக்கும் சேவை சாதிப்பவராக விருந்தாலும், அநந்தகருட விஷ்வக்ஸேன நித்திய முக்தர்களுக்கு பரமபதத்திலும், சனகசனந்தன பிர்ம்ம ருத்திரேந்திராதிகளுக்கு, திருப்பாற்கடலிலும், மச்சக்கூர்மவராஹாதி அவதாரங்கள், அந்தந்த யுகத்திலுள்ளவர்களுக்கும், அந்தர்யாமித்வமானது அணிமாதி அஷ்ட சித்த புருடர்களுக்கும் ஆழ்வாராதிகளுக்கும் ஸேவை தந்தருளினுமே யன்றி ஏனையோரைப் போன்றவர்கட்கு அத்ருஸ்ஷிய மாகி விட்டது.

இஃதுணர்ந்த சர்வேசன் இறகொடிந்துழலும் பக்ஷிகளைப் போன்ற யிச்சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்கிற அவாவினுல் 'தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவாய்' திவ்யதேசங்களில் அர்ச்சா ரூபமாக எழுந்தருளலாயினர்.

ஜிதேந்திரியர்களுக்கு மானஸீகமாகவும், க்ருஹஸ்தர்களுக்கு அர்ச்சாவிக்ரஹ ரூபமாகவும் செய்யவேண்டுமென்று (ஆசாரியர்களும் அரிஹர ப்ரம்மாதிகளும் அநுஷ்டித்த திருவாராதனத்தை ப்ரபன்னன் வேதோக்தமாகச் செய்ய யேற்பட்டதாலிதற்கு பூஜாகாலம், இஜ்ஜாகாலம், எனப்பெயர் வந்தது. இந்த அர்ச்சாவிக்ரஹ திருவாராதனமானது முன்னர் எம்பெருமானுல் பிரமனுக்கு உபதேசம் செய்யப்பட்டு அதற்காக பாஞ்சராத்திராதி ஆகமங்களையும் உண்டாக்கி யிருப்பதால் அதனையுங்களுக்கு சங்கிரகமாய்ப்புகலுகின்றேன் கேட்பீர்களாக.

சர்வேசன் அண்டாண்டங்களையும் பஹுநாதிகளையும் மூலப்ரக்ருதியினின்று சிருஷ்டித்து அதில் முதன்மையாகப் பிரமனைப் படைத்தார். பிறகு தனது ஸ்வரூப குண விபூதி சேஷ்டிதங்களையும், சேதனர்களுடைய ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களையும், பூதங்களுடைய நாம ரூபகிருத்தியங்களையும் தெரியச்செய்கிற வேதங்களை உபதேசித்தார்.

அதன் மகிமையால் உலக சிருஷ்டியையும், அதில் வர்த்திக்கும், தேவ, மநுஷ்ய, திரியக்கு, ஸ்தாவரங்களையும் உண்டு பண்ணினர். ஞானஸ்வரூபியான எம்பெருமான் சாந்நித்திய மாயில்லாமையாலே தனக்கு ஞான சூனியமாய்ப் போவதையுணர்ந்த பிரமன் சிந்தித்து அனேக ஆயிரம் சம்வச்சரம் (வருடம்) அஷ்டாக்ஷர மந்திரத்தியானத்தோடு தபசு செய்தார். அப்போதெம்பெருமான் பிதாமகனபிமத மறிந்து பூஜார்ஹமான இரங்கவிமானத்தை அளித்தார். அதை யேற்ற நான்முகன் வணங்கி பூஜாக்கிரமத்தையும் அடையும் பயனையும் புகலவேண்டுமென்று வேண்ட புருஷோத்தமன் புகல்கின்றார். ஏ பிதாமஹா நீர் கேட்ட பிரஸ்னமானது லோகோத்தரமானது. உரைக்கின்றேன் கேட்பீராக.

ஆவரணங்களோடு கூடிய அநந்தகோடியண்டங்களையும் ஓர் மூலையில் அடக்கிக்கொள்ளக்கூடிய பரப்புள்ளதான பரமாகாசத்தில் நான் கோடி சூர்யப்ரகாசமான திவ்யசிம்மாசனத்தில் அநந்த, கருட, விஷ்வக்ஸேன, நித்யமுக்தர்கள் சேவியாநிற்க அப்ராக்ருத சரீரியான யான் உனது பிரார்த்தனைக்கிரங்கி அர்ச்சாரூபமாயினேன். என்னுடைய முதன்மையானயிந்த இரங்கவிமானத்தோடு கூடிய அர்ச்சா மூர்த்தியை முக்தியின்பொருட்டு சதாபஞ்சகால அநுஷ்டானத்துடன் ஆராதிக்கக் கடவாய்.

என்னுடைய லீலார்த்தமாகச் சிருட்டிசெய்த யிந்த ஜகத்தாலெனக்கு யாதும் பயனிலாதிருந்தும், சேதனர்களின் அக்கியானாந்தகாரத்தின் பொருட்டும், ஞானவிருத்தியின் பொருட்டும், வாச்சல்யத்தோடு அர்ச்சையாகவும் ஆசாரியனாகவும் உத்பவிக்கலாயினேன். இயாவத் ஜீவராசிகளிடத்தும் எள்ளினுள் எண்ணெய்போல வியாபித்திருந்தும் மோகாந்தகாரத்தில் மூழ்கிய உலகசேதனர்கள் என்னையுணராமல் போனதினாலே, நான் அண்டத்தும், க்ஷீராப்தியிலும், சூர்யமண்டலத்திலும், சுவர்க்கத்திலும், எழுந்தருளியிருந்தும் யாவரும் தெரிந்து கொள்வதற்கு அன்ர்ஹரானார்கள். அதானது தாத்காலதேசவர்த்திகளுக்கு அநுகூலமாயிற்று. பின்னும் பௌஷியு

காலத்தவர்கள் உஜ்ஜீவிக்குமாறும், அவர்களால் செய்யப்படும் தியானம், ப்ரணமம், ஸ்துதி, அர்ச்சனை இவைகளுக்குப் ப்ரதிப்ரயோஜனத்தைச் செய்யவும், அநுக்ரக விசேஷத்தைக்காட்டவும், எனது திருவடிகளையடையவும் கோரி, சப்ததீபங்களிலும், நவகண்டங்களிலும், நாநாதிவ்ய தேசங்களிலும் அவதரிக்சப் போகின்றேன்.

முமுக்ஷுக்களானவர்கள் என்னை யாராதிக்கும் பொருட்டுதாரு, சிலா, லோசங்கள் இவைகளால் சுலக்ஷணமாகச் செய்த விக்ரஹரூபங்களிலும், சான்னித்தியமாயிருப்பேன். அர்ச்சாரூபமாக விருக்குமென்னை எந்த மூடன், மரம், கல், செம்பு, மண் என்று எண்ணுவானே அவன் நீங்காத நரகவாசத்தை யடைகின்றான். என்னை சந்ததம் வந்திப்பவன் பரமசாக்ஷாத்காரத்தை அடைகின்றான். உனக்கு என்னால் சொல்லப்பட்ட பாஞ்சராத்திர ஆகமத்தில் சொல்லியிருக்கும் ஸ்வயம், வ்யக்தம், தைவம், ஆர்ஷம், மாநுஷம் என்று சொல்லப்பட்ட நான்குவித திவ்ய தேசங்களில்,

சுலோகம்.

ப்ரபன்னபரமேகாந்தி நித்யம்புப்ஜித லாதராத்,
ஸ்ரீ பூமிநீளாக்யானும் விநதாநந்த நஸ்யச,
சக்ராதீனும்ஆயுதானும் வஸ்துயத்ய பிசோதிதப்,
போக்தவ்ப மேதச்சர்வேஷாம், விப்ராதீனும் ஸமங்கிதம்,
விஷ்வக்ஸேனஸ்ப நைவேத்யம், ப்ராபணம் தூர்பலம்பவேத்,
விஷ்ணோர்நிவேதிதான்னேன டஷ்டவ்யம்தேவதாம்தரம்,
பித்ருப்யச்சாபிதத்தேயம், ததானும்த்யாயகல்பயேத்.

சுலோகம்.

சடாரிபரகாலாதி, பக்தாம்நாம்து விசேஷிதः,
மூர்த்திம்ப்ரக்ருதிகுர்யாம்து, லோஹசைலம்ருதாதிபி,
தத்தத்வர்ணும் க்ருதப்நக்தவாஹஸ்த முத்ராஸனுனிச,
பூர்வோக்தேன விதேனேன, ப்ரதிஷ்டாம் ப்ரோக்ஷணுதிகம்,
க்ருத்வாஸம்பூஜயேநித்யம், த்ரிகாலம் வைஷ்ணவோத்தமைः.

தா:—என்றமையால், ஸ்ரீபூ, நீளாதேவிகளையும் பஞ்சாயுதங்களையும் அநந்த கருட விஷ்வக்ஸேனர்களையும், முக்திபரர்களான நித்திய சூரிகளையும், பராங்குச பரகாலாதி மூர்த்திகளையும், உலோகம், சிலை, தாரு, ம்ருத்யு, இவைகளில் தங்கள் தங்களுடைய வர்ணாச்சிரமதர்மத்திற்குத் தகுந்தபடியாகச் செய்து பிரதிஷ்டாப்ரோக்ஷணாதிகளை நிறைவேற்றி தவருது சதா திரிகாலங்களிலும் ஆராதித்து,

பவித்திரமான பகவத் பிரசாதத்தை அதிதி அப்யாகத பிதுர்தேவர்களுக்கு திருப்திசெய்து மோக்ஷத்தை விரும்புகிறவன் பிரபன்னன் புஜிக்க வேண்டுமென்று சதுரானனுக்குச் சொல்லப்பட்டதையுங் களுக்குப் புகன்றேன்.

பின்னும் ஸ்லோ॥ ద్వేరూపే బ్రహ్మణ స్తస్య చరంచంచార మేవచ।
చరం సన్యాసినాం రూపం, అచరం ప్రతిమాదికం ॥

என்றமையால், பரப்ரம்மம் சஞ்சரிக்கிற ரூபமாயும் சஞ்சரியாத ரூபமாயும் இருபடிப் பட்டிருக்கும். சஞ்சரிக்கும் ரூபமாவது சன்னியாசிரூபம், சஞ்சரியாத ரூபமாவது திவ்விய தேசங்களில் விக்கிரக ரூபமான அர்ச்சாவதாரமாயும் கிரகங்களில் சித்திரரூபமாயுமெழுந்தருளியிருப்பது.

மற்றொரு சுருதி.

ஸ்லோ॥ పూర్ణస్య పూర్ణ మాదాయ, పూర్ణ మేవావశిష్యతే॥

என்று சொல்வதால் பரவாசுதேவனைக்காட்டிலும் அவதாரங்களில் குணங்கள் பூர்ணமாக விருக்குமென்றும் அதைவிட அர்ச்சாவதாரத்தில் பரிபூரணமான குணங்கள் விசேஷித்திருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

தைத்திரியோபநிஷத்து.

ஸ்லோ॥ స్థిరం ప్రపద్యే మృతం ప్రపద్యే అశ్మానమాఖణం ప్రపద్యే॥

என்றமையால், ஸ்திரரூபியாயும், அமிர்தஸ்வரூபியாயுமிருக்கிற பரமபதநாதனை பிரபத்தி பண்ணுகிறேனென்றுசொல்லி, 'அஸ்மானமாகணம், ப்ரபத்யே'. சிலா ரூபமாயாவராலும் தியானிக்கப்பட்ட அர்ச்சரூப எம்பெருமானை பிரபத்தி பண்ணுகிறேனென்று வேதபுருஷனால் சொல்லப்பட்டிருக்கிறது.

இராமோபநிஷத்தில்.

ஸ்லோ॥ కథయతి భగవానిహంత్యకాలే, భవభయకరతారకం బ్రహ్మేతి ॥

என்று பகவான் இராமமந்திரத்தைச் சிவனுக்குபதேசம்செய்து அதில் தானே

ஸ்லோ॥ అపిముక్తి భవేద్భక్తేసర్వేషాం ముక్తిసిద్ధయే।
అహం సన్నిహిత స్తత్రపాషాణప్రతిమాదిషు।

క్షేత్రే తస్మిన్ యోఽర్చయేద్భక్త్యా, మంత్రేణానేనమాంశివ ।
బ్రహ్మహత్యాదిపాపేభ్యో, మోక్షయిష్యామిమాశుచ ॥

தா:—உன்னுடைய காசி க்ஷேத்திரத்தில் யாவருக்கும் முக்தி கொடுக்கும் பொருட்டு அர்ச்சாவதாரமாய் சமீபத்திலிருக்கும் என்னை பக்தியுடன் அர்ச்சிக்கின்றவர்களுக்கு பிரம்மஹத்தியாதி பாபங்களை அகற்றி, எனது சாயுச்சியத்தைக் கொடுக்கிறேனென்று, சிவனைநோக்கி எம்பெருமான் சொன்னதாக அநேக பிரமாணங்களுண்டு.

இனியும் இராமாயணத்தில்.

శ్లో॥ సహపత్న్యావిశాలాక్ష్యా, నారాయణముపాగమత్ ॥

என்று சொன்னதில், சக்கிரவர்த்தி திருமகன் ஜானகியுடனே அயோத்தியில் ஸ்ரீரங்கநாதனை பூஜித்ததாகச் சொல்லியிருக்கிறது.

கீதையில்.

శ్లో॥ యేయథామాం ప్రపద్యంతే, తాంస్తథైవభజామ్యహం ॥

தா:—என்னை யார், சுவர்ணரஜித, உலோக, தாரு, மண்முதலானவற்றால் விக்கிரஹஞ்செய்து ஆராதிக்கிறார்களோ, அவர்களை நாம் திருமேனியாக ஆதரித்து அவர்கள் விரும்பிய வரத்தைக் கொடுக்கிறேனென்று அருளிச்செய்திருக்கிறார். இது விஷயமாகச் சொல்லப்புகின் கிரந்த விஸ்தர பீதியாலிம்மட்டில் சுருக்கிச்சொல்லப்பட்டது.

இனி யாவத்திராளாலும் சந்ததம் செய்யவேண்டிய பூஜாவிக்கிரகங்களின் பிரமாணத்தைப் புகல்கின்றோம்.

விக்ரஹ லக்ஷணம்.

சுலோகம்.

த்வாதசாங்குலமானம்து லோஹஜாபூர்வஜன்மனஃ,
நவாங்குலம்க்ஷத்திரியஸ்ய வைஸ்யம்ஸப்தாங்குலம்ததா.
பஞ்சாங்குலம்சதுர்தஸ்ய ப்ரதிமாவிபவேத்பவேத்.

தாத்:—பிராம்மணர்கள் 12 அங்குலமும், க்ஷத்திரியர் 9 அங்குலமும், வைசியர் 7 அங்குலமும், சூத்திரர் 5 அங்குலமும் உயர்த்தியுள்ள விக்ரஹங்களைச் சுலக்ஷணமாகச்செய்து ஆராதிக்கவேண்டும்.

சுலோகம்.

ப்ரதிமாயன்மயீக்லிப்தா, ப்ரபாபீடா, திதன்மயீ,
ததநந்தரலோஹவான், ப்ரபாபீடாதிகல்பயேத்.

தா:—விக்ரஹங்களின் பிரமாணத்திற் கேற்றவாறு சிற்பசாஸ்திரப்படி பீடங்களையும் பிரபாவளிகளையும் அமர்த்திக் கொள்ளல் வேண்டும்.

சுலோகம்.

ஸாராபாம் ப்ரதிமாம்விஷ்ணோ:, ப்ரபன்னவத னேக்ஷணும்,
க்ருத்வாத்மன: ப்ரீதிக்ரீம், சுவர்ண ரஜிதாதிபி:.

தாத்:—சுவர்ணம், இரஜிதம், லோஹம், தாரு, ம்ருத்திகை, இவைகளால் சாஸ்திரோக்தமாய்ச்செய்து பூஜிக்கலாமென்று சிற்ப சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றமையால் விதிப்பிரகாரம் செய்தேனும், பூர்வர்களால் ஆராதனைசெய்துவந்த சுலக்ஷண பிம்பங்களையேனும் பெற்று சம்ப்ரோக்ஷணாதிகளைக் கிரமப்படி நடத்தி திருவாராதனம் செய்தல் உத்தமம்.

சாலக்கிராம திருவாராதனம்.

శ్లో॥ యత్గృహేనాస్తితులసీ, శాలగ్రామశిలార్చనం।
స్మశానసదృశంవిద్యాత్, తత్గృహంశుభవర్జితం॥

தாத்:—எந்தக்ருஹத்தில் சாலக்கிராம (தீர்த்த எம்பெருமானார்) திருவாராதனம், துளசிப்ருந்தாவனம் இவைகளில்லையோ, அந்தவீடு அசுபவீடென்றும், ஸ்மசானத்திற்குச் சமமென்றும் சாஸ்திரம் புகலும்.

* பவுத்திர தரணம்.

தேவதார்ச்சனைசெய்யுமுன் வஸ்திரங்களைச் செவ்வையயுடுத்திக்கொண்டு ஆசமனம் செய்து கேசவாதிநாமங்களையும், வ்யாவ்ருத்திகளையும் ஜெபித்து, மூன்று பிராணாயாமம் செய்து, பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்ய சுத்தியார்த்தம் பகவதாக்ஞாப்ரகாரம் நடந்துகொள்ளும் பொருட்டு தர்ப்பையின் பவுத்திர மணியவேண்டும். சுவர்ண பவுத்திர மிருப்பினிஃது தேவையில்லை. தர்ப்பையினால் இரண்டங்குல சுற்றும், ஓரங்குல முடியும், நான்கு அங்குல நீட்சியுமுள்ளதாய்ச்செய்து ஆயுளை விருத்திசெய்யும் அனாமிகை விரலிலணியவேண்டும்.

பிராணாயாமவிதி.

பாஞ்சராத்திரம், பராசர:

శ్లో॥ ధృతోర్ధ్వపుండ్రదేహస్తు, పవిత్రకరఏవచ ।
ఉపాసీతతతఃసంధ్యాం, ప్రాఙ్ముఖోదఙ్ముఖోపివా ।
అంతర్జానుకరోభూత్వా, ప్రాణాయామాన్ సమాచరేత్ ।
సవ్యాహృతీకాం ప్రణవం, గాయత్రీంశిరసాసహ ।
త్రిపఠేదాయతఃప్రాణాన్ ప్రాణాయామస్సఉచ్యతే ।
పూరకుంభకరేచైశ్చ ప్రాణాయామస్యలక్షణం ।
వామనాసాపుటేనాయుం పూరయేచ్చజపన్ సకృత్ ॥
ధారయన్ హృదయేప్రాణమ్ జపన్ మంత్రసమాహితః ।
దక్షిణేరేచయేద్వాయుం మంత్రముచ్చారయన్ సకృత్ ।
ఏవంత్రిలక్షణోపేతః ప్రాణాయామఇతిస్మృతః ॥

தாத்:—கிழக்கல்லது வடக்கு முகமாக உட்கார்ந்து துடையின் பேரில் முழங்கையைவைத்து அனாமிகை கனிஷ்டவிரலால் இடது நாசியையடைத்து உட்கொண்டிருக்கும் வாயுவை வலது நாசியால் வெளியில் விடுத்து, அங்குஷ்ட விரலால் வலது நாசியையடைத்து, இடது நாசியால் வாயுவையுள்ளிழுத்து மேற்படி விரல்களால் இரு நாசியை மூடி, வாயை மூடிக்கொண்டு ஸ்ரீயப்பதியை இருதய கமலத்தில் இருத்தி தியானம்செய்து பிரணவத்துடன் வ்யாவிருதிகளும், சிரசோடு காயத்திரியையும் மூன்று தபா ஜபிப்பது பிராணாயாமம் இஃதுணராதார் துவயத்தை ஜபிக்கலாம்.

---

* குறிப்பு:—பவுத்திரத்திற்குப் பதில் திருத்துளாய்தளத்தை வைத்துக் கொள்வது சிலர் மதம்.

மநு.

శ్లో॥ దహ్యంతేధ్మాయమానానాం ధాతూనాంహియథామలాః ।
తథేంద్రియాణాందహ్యంతే దోషాఃప్రాణస్యనిస్పృహాత్ ॥

தாத்:—சுவர்ணத்திலுள்ள மலினமானது புடமிட்டால் எப்படி நிவர்த்தியாய் விடுகின்றதோ, அந்தப்படி பஞ்சேந்திரிய மலின சம்மந்தமான யிந்த பாபதேகத்தின் குற்றங்களையெல்லாம் பிராணயாமம் போக்கடித்து விடுகின்றன.

கர்மதீபம்.

శ్లో॥ దేవార్చనేజపేహోమే స్వాధ్యాయేశ్రాద్ధకర్మణి ।
స్నానేదానేతథాధ్యానే ప్రాణాయామాస్త్రయస్త్రయః ॥

தா:—தேவதார்ச்சனே, ஜபம், ஓமம், தபம், பாராயணம், ஸ்நானம், தானம், சிரார்த்தம் இக்கருமங்களைச் செய்யுமுன், பிராணயாமத்தைக் காலையில் நின்று கொண்டும், மாலையிலுட்கார்ந்து கொண்டும் செய்து முடித்த மேல் மேற்படி காரியங்களைப் பிராரம்பித்தலுத்தமம்.

பிரபன்னர் இத்தியாதி நித்யநைமித்திக கர்மங்களைச்சரிவர நடத்தி தங்கள் தங்கள் மகாசாரத்திற்கும் ஆசார்யோபதேசத்திற்கும் தகுந்ததான திருவாராதனத்தை உபக்ரமிக்க வேண்டும்.

யார் எப்படி பூஜிப்பதென்பது.

சுலோகம்.

ப்ராம்மணைக்ஷத்திரியைர்வைஸ்ய,
ஶூத்ரஸ்த்ரீபிஃ ஸ்ததேதளாஃ,
யதாஹிஜ்யஸ்வயேச்சஸ்ய,
நித்யம்ஸர்வேஸ்வரோஹரிஃ.

தா:—பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் என்கிற சாதுர்வர்ணஸ்தரும் சந்ததம் தவறாது பகவதாராதனம் செய்யவேண்டுமென்னும் விதியிருப்பினும், பிராம்மணர் வைதிக மார்க்கமாகவும் க்ஷத்திரியர் வைதிகதாந்திரிகமாகவும், * வைசிய சூத்திரர் தாந்திரிகமாகவும் பகவதாராதனம் நடத்த வேண்டுமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

* குறிப்பு:—பஞ்சசமஸ்காரம், பஞ்சகால அநுஷ்டானம், பஞ்சமோபாய நிஷ்டை, முதலான சம்பந்த முடையவர்களுக்கு யிந்தப்பிரமாணம் சேராது.

துளசிபுட்பம், சமித்திவைகளின் கிரமம்.

சுலோகம்.

சுஷ்கம்பர்யுஷிதம்சார்த்ரம், கஷ்டம்வாதுளசீதளம்,
அர்ச்சனேவாசுதேவஸ்ய, லக்ஷகோடிகுணம்பவேத்.

தா:—திருத்துழாய் காய்ந்திருப்பினும், எடுத்து நாளாயிருப்பினும், சுவல்பமாயிருப்பினும், தளமில்லாதிருப்பினும், காஷ்டமாயிருப்பினும் குற்றம் பாராமல் கொணர்ந்து வாசுதேவனை அர்ச்சிப்பாராகில் லக்ஷகோடி குணங்கள் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சுலோகம்.

துளஸ்யாம்ருதசம்பூதே ஸதாத்வம்கேசவப்ரியே,
கேசவார்த்தம்லுனாமித்வாம் வரதேபவசோபனே.

தா:—நந்தனவனத்திற்கு போகும் சமயம் ஆசாரசீலனாய் புண்டரதாரியாய்ச் சுத்தாந்தக்கரணமுடையனாய், புட்பக் குடலையுடன் சென்று மேலே சொல்லியிருக்கும் சுலோகத்தை அநுசந்தித்துக் கொண்டு ஒருவருடனும் பேசாமல் தளம் தளமாகப் படாமல்திருத்துழாய்ச் சேகரிக்க வேண்டும்.

சுலோகம்.

சதுர்த்தியஷ்டமீபர்வம், சந்தியாசுத்வாதசீஷுச,
சங்கிராந்தீஷுவ்யதீபாதே, மன்வாதிஷுயுகாதிஷு,
பௌமார்க்கேசுக்ரவாரேஷு, ததாசார்த்ததினைஷுச,
ஆகானேவைஷ்ணவேநக்ஷே மத்யாஹ்னோஅபரஸ்ததா,
துலசீக்ரந்தனம்யத்நத், விஷ்ணோச்சிரசிக்ருந்தனம்.

தா:—சதுர்த்தசி, அஷ்டமி, பர்வகாலங்கள், சந்தியாகாலம், துவாதசி, சங்கிராந்தி, வ்யதீபாதம், மன்வாதி, யுகாதி, செவ்வாய், ஞாயிறு, வெள்ளி, சார்த்ததினம், விஷ்ணு ஜன்மநாள், உச்சிக்காலம், சாயரக்ஷை, இத்திபூதி சமயநாட்களில் திருத்துழாய் எடுப்பாராகில் எம்பெருமானுடைய சிரசைச்சேதம்செய்ததொக்குமென விஷ்ணுசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—மலஜல விசர்ஜனம் செய்யக்கூடியவிடம் எச்சில் சம்மந்தமானயிடம், பாழ்கோவில், மயானம், நீசர் நிவாசஸ்தலம், மனை

ரம்மிய மில்லாதயிடம் இத்தகையதான அசுத்த பூமிகளிலுள்ள துளவம் க்ரஹிக்கத்தகாது. பாதரக்ஷை போட்டுக்கொண்டும், பொடி போட்டுக்கொண்டும், சுருட்டு பிடித்துக்கொண்டும், நீசசம்பாஷணை செய்து கொண்டும் துளபமெடுக்கக்கூடாது அனதிகாரிகள் தொட்ட திருத்துழாய், புட்பம் இவைகளைப்பெற்று அர்ச்சிக்கக்கூடாது.

சமித்து புட்ப விதி.

சுலோகம்.

சமித்புஷ்பம்விஸ்தோயம், பாத்ரோபனயனதிஷு,
அவைஷ்ணவாவிஸேஷேண நகர்மஸூனி யோஜயேத.

தாத்:—திருத்துளவுக்குச் சொல்லியபடியே, சமித்து புஷ்பம், தர்ப்பை, யாகயுக்தமான சமஸ்த வஸ்துக்களையும் நிர்மலப்பிரதேசத்திலிருந்தே சேகரித்துக்கொள்ளத் தக்கது.

குறிப்பு:— சண்பகம், மல்லிகை, செங்கழுநீர், இருவாக்ஷி, தாமரை, வகுளம், தவனம், மருவம், ரோஜா, பாதரி, கருமுகை, பவளமல்லிகை, அலரி, விருச்சி, பாரிசாதம், முல்லை முதலான சுகந்தமலர்களைத் தாம்பரக்குடலை அல்லது தென்னோலைக்குடலை யிவைகளில் எடுத்துவரவேண்டுவதன்றி வஸ்திரங்களால் கொணர்ந்த புஷ்பங்கள் பகவதற்பித மாகாது.

இவ்வித சுத்தியோடுள்ளதான தர்ப்பை சமித்து யாகவஸ்துக்களை சேகரித்துக் கொள்ளவும்.

தேவதார்ச்சனைக்குத் தளிகை செய்யும் க்ருஹணி தர்மம்.

பாஞ்சராத்திரம் பராசரசம்மிதை.

శ్లో॥ సతీనాంయోషితాం దేహో యద్వోపకరణంభవేత్ ।
భర్తౄణాంభగవద్భక్త దేహ స్తద్వజ్జగద్గురోః ॥

தா:—பதிவிரதைகள் சரீரமானது பர்த்தாக்களுக்கு எவ்விதமுபயுக்தமாகின்றதோ அத்தன்மையாகவே சேதனர்களுடைய சரீரமானது சர்வேசுவரனை புருஷனுக்கு கைங்கர்யார்த்தம் உபயோ

கப்படுத்தவேண்டும். அந்தக் கைங்கர்யமானது மனோவாக்குக்காயங்களாகிய திரிகரண சுத்தியுடன் செய்யவேண்டிய பகவத்பாகவத ததியாராதனமானதினாலே அதற்கு அநுகுணமாக ஸ்ரீயும் நடந்துகொள்ளவேண்டியது அத்தியாவசியமானதினாலே அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய சிஷ்டாசார தர்மத்தை யிவ்விடம் புகல்கின்றேன் கேட்பீர்களாக.

శ్లో॥ సదాప్రపన్ననారీణాం సంద్యావర్జ్జసుతాంత్రికం।
ద్వయేనమూలమంత్రేణ, విధితేరర్చతుర్ముఖ।
శౌచస్నానాదికంసర్వం, ప్రాతఃకాలవిశేషతః
గృహంసంశోద్యవిధివత్ గృహోపకరణానిచ।
ఊర్ధ్వపుండ్రసదాస్త్రీణాం అర్ధచంద్రాకృతిర్భవేత్।
యావజ్జీవంవిశేషేణ, సమ్యక్స్నార్యేదయేతథా॥

தா:—என்றமையால் ப்ரபன்னைகளான ஸ்ரீகள் நாடோறும் பிராம்யமுகூர்த்தத்தின்போது படுக்கையை விட்டெழுந்து சௌசாதிகளை நிஸ்ஸேஷமாக முடித்துக்கொண்டு துவயாநுசந்தானத்தோடு பர்த்தா முதலியவர்களுக்குத் தண்டம் சமர்ப்பித்துக் காவேரிக்கு விடைகொண்டு ஸ்நாநம்செய்து அர்த்த சந்திராக்ருதியாக புண்டரம் தரித்து க்ருஹோபகரணங்களையும் க்ருஹத்தையும் சுத்திசெய்து தீர்த்தம் கொணர்ந்து வடிகட்டி, தேவதார்ச்சனை செய்யத்தனியாக ஓர் பாத்திரத்திலும், தளிகைசெய்ய ஓர் பாத்திரத்திலும், சௌசாதிகளுக்காக ஓர்பாத்திரத்திலும், ஆகமூன்றிலும் தனித்தனியாகவைக்கவேண்டும். புனஹதீர்த்தம் கொணர்ந்து முறம், முசலம், உரல், ஆட்டங்கல், மணைகள், கரியமுதுகள் முதலான யாவத்பதார்த்தங்களையும் சுத்திசெய்து வைக்கவேண்டும். சங்குசக்கர சின்னங்களோடுகூடிய பாத்திரங்களில்லாவிடில் திருமண் ஸ்ரீசூர்ணமிட்டு திருப்பாவையநுசந்தானத்தோடு தளிகைசெய்ய ப்ராரம்பிக்கவேண்டும். விருத்தர், பாலர், வியாதியுடையோர், கர்ப்பிணிகள் இவர்களுக்கு வேறு தளிகைசெய்து தேவதார்ச்சனைக்கு முன்னமே பரிமாறிவிடவேண்டும். நெய், எண்ணெய், தயிர், பால் இவைகளை வைத்திருக்கும் பாத்திரங்கள் தவிர மற்றுளபாத்திரங்களைத் துலக்கிக்காற்று, வெயில் படும்படியாக வைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். பகவதாராதனைக்குத்தளிகைசெய்யும் பாத்திரம் நிதமும் புதிய மண்பாத்திரமாயிருக்க வேண்டும். அன்றேல் லோகபாத்திரமாயிருக்க வேண்டும். தளிகை செய்யும்போது தலையைத்தொட்டாலும், மூக்குச் சீந்தினாலும், வேர்வையைத் துடைத்தாலும், சௌசத்திற்கு வைத்திருக்கும் ஜலத்தால்

கை சுத்திசெய்யவேண்டும். மலஜல விசர்ச்சனம்செய்ய நேரிடில் புடவையை அவிழ்த்து விளிப்பு வஸ்திரம் தரித்து விசர்ச்சனம் செய்தமேல் கடிஸ்நாநம்செய்து ஆசமனம்செய்தமேல் மடிதரித்து ஆரம்பிக்கவேண்டும். திருவாராதனம் முடியும் பரியந்தம் சமஸ்கார மில்லாதாருடனும், நீசாளுடனும், பஹிஷ்டையானவர்களுடனும் சம்பாஷிக்கக்கூடாது

தேவதாராதனத்திற்கு முன்கஞ்சி கழனியிவைகளை யுபயோகிக்கக்கூடாது. பருப்புகள், நெய், திலம், எண்ணெய் இவைகளைப் பட்சத்திற்குமேல் உபயோகிக்கப்படாது. வாழைக்காய், ஷை தண்டு, பூ, வெண்டைக்காய், இரண்டுவித பூசினி, பிலாக்காய், மாங்காய், தேங்காய், பாகல், நெல்லி, முள்ளி, சோம்பு, நெடும்புடல், வெள்ளரி, வெள்ளையல்லாத கத்தரி, கரணை, தூதுவளை, மின்னை, மிஷ்டை, மிதிபாகல், தக்காளி, பொன்னாங்காணி, இலந்தை, அறுகீரை, உளுந்து, பாசிப்பயிர், கடலை, பெருங்காயம், கோதுமை, சர்க்கரை, மாத்தினுசுகள், இஞ்சி, கொத்தமல்லி, கருவேப்பிலை, அவரைக்காய் இவைகள் போன்ற சாத்விக கறியமுதுகளைச்சமையல் செய்யவேண்டுமேயொழிய, தாமத பதார்த்தங்களை பகவானுக்கெப்போதும் சமர்ப்பிக்கக்கூடாது. சீம்பால், எருமைப்பால், செம்மறியாட்டுப்பால், கன்றுசெத்த பசுவின்பால், ஒட்டகத்தின் பால், இதரதேவர்களுக்கு தலம்போட்ட பசுவின்பால், கற்பத்திற்கு ஆயத்தமாயிருக்கும் பசுவின்பால், அமேத்தியம்புஜிக்கு மாவின் பால், இவைகளைத் தேவாராதனத்திற்கு உபயுக்தப் படுத்தக்கூடாது. கடையில் வாங்கும் புழுங்கலரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவைகள் தளிகைக் குபயோகமல்ல. பின்னும் ஆஸ்ரயதுஷ்டம், காலதுஷ்டம், கிரியாதுஷ்டம் இவைகளால் சம்பாதித்த பதார்த்தங்களும் தேவார்ஹமாகமாட்டாது. கபிலப்பசுவின்பால் மிகச்சிரேஷ்டமானதால் தேவதார்ச்சனைக்கும் அக்ரவர்ணஸ்தர்களுக்குமே உபயோகிக்கவேண்டும். கைப்புப் பதார்த்தங்கள், இஞ்சி, தயிர், எள்சம்பந்தமான பதார்த்தங்கள் கீரைதினுசுகள் இவைகளை இரவில் புசித்தால் இலக்ஷ்மி நீங்கி விடுவளென்று சொல்லப்பட்டிருப்பதால் இவைகளைத் தவிர்க்க வேண்டும். பானுவாரம், சப்தமி, இத்தினம் பகலில் நெல்லிக்காய்ச் சமையல் செய்யக்கூடாது. இந்தப் பிரமாணங்களின்படியும் உலக அநுஷ்டான சிஷ்டாசாரத்தின்படியும் க்ருஹிணி தளிகைசெய்து திருவாராதனத்திற்கு வேண்டிய நெய், பால், தயிரமுது, பத்திரம், புஷ்பம், பலவர்க்கம், பாத்திரோபகரணங்களையும் சித்தம்செய்து திருவிளக்குச் சமர்ப்பித்து பர்த்தாவரவை யெதிர்நோக்க வேண்டும்.

தேவதார்ச்சனைக்கிரமம்.

பிரபன்னன் க்ருஹத்திற்குவந்து சாஸ்திரோக்தமான காலாநுஷ்டானங்களை முடித்து தங்களுடைய ஆசாரிய நியமனப்படியாயுள்ள திருவாராதனம் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு:—ஜிய்யர்படி திருவாராதனம் தனிமையாய் அச்சிட்டிருப்பதாலிவ்விடம் எழுதப்படவில்லை. கிரந்தகர்த்தாவிற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

4-வது சுவாத்தியாய காலவிதி.

அபரான்னகாலத்தில் வேதசாஸ்திர இதிஹாஸ பகவத்விஷயாதி கிரந்தங்களை, சிஷ்யப்ராதி சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் சாயித்தலுக்கு சுவாத்தியாயமென்று சொல்லப்படுகிறது. இதனைப் பிரபன்னன் தேவதார்ச்சனைசெய்த சிறிது காலத்திற்குப்பிறகு காலாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நிம்மதியானவோரிடத்தில் பீடத்தின்மேரில் கிரந்தஆசாரியனை எழுந்தருளச்செய்து தண்டம்சமர்ப்பித்துத் தானுமோர் ஆசனத்திலமர்ந்து ஏகாக்கிரசித்தனாய் ஆசாரியனைத்தியானம் செய்து பகவத் விஷயாதி கிரந்தங்களை விதிப்படி சமயோசிதமாய்க் குணானுபவம் செய்யவேண்டும். இதரப்ரயோஜனங்களை அபேக்ஷியாமல் தம்மையடைந்த சர்வருக்கும் சுபோதமாய் காலக்ஷேபம் சாயிக்கவும் வேண்டும்.

5-வது யோக காலவிதி.

சாண்டில்யஃ

శ్లో॥ యామిన్యాంయోగకాలేతు యత్కార్యంయోగిభిర్ద్విజైః ।
తద్వక్ష్యామిసమాసేన, శృణుధ్వంమునిపుంగవా ॥

தா:—முனிபுங்கவனாகிய சாண்டில்யமஹரிஷியை முனிவர்கள் வேண்ட இருடிகளைக் கடாக்ஷித்துச்சொல்கிறார். ஏ தபசிகளே! கேளுங்கள். யோகமென்றால் அஷ்டாங்க யோகத்தையும் பகவத்தியானத்

னதயும் யோகமென்று சொல்லலாம். இந்தயோகமானது இராத்திரி திருவாராதனத்தின் முன்னாவதும் பின்னாவதும்செய்யும் பகவத் தியானம். ஆசபனம்செய்து துவயாநுசந்தானத்தோடு தீர்த்தம் ப்ரோக்ஷித்துக்கொண்டு ஏகாந்தமானவோரிடத்தில் ஆசனம், தர்ப் பையாசனம், கிருஷ்ணாம்ஜினம், வேத்திராசனம் இவைகளிலொன்றி லமர்ந்துநிர்மலாந்தக்கரணனுப் பரமாத்மாவைத் தியானிக்கக்கடவது.

శ్లో॥ ఈదృశంపరమాత్మాయంప్రత్యగాత్మాతథేదృశః ।
తత్సంబంధానుసన్ధాన, మితియోగప్రకీర్తితః ।
యోగోనామేన్ద్రియైర్వర్త్య, ర్బుద్ధేర్బ్రహ్మణిసంస్థితి ।
సమ్యగ్జ్ఞానమిదంప్రాజ్ఞా, కదన్యచ్యుత యోగినః ।
యోగధర్మఇతిఖ్యాత, స్సాక్షాద్భాగవతోవిధిః ॥

தா:—யாதெனில் ஜீவாத்ம ப்ரமாத்மஸ்வரூப மின்னதென் றும், அர்த்த பஞ்சக்கியானமித்தன்மைய தென்றும் நவவித சம்பந்த மிவையென்றும் தெரிந்து, இந்திரியங்களை வசப்படுத்தி, ப்ரம்மத்தை தன்னுள் காண்பதே யோகமென்று சொல்லப்படுகிறது.

శ్లో॥ భగవద్వాసుదేవస్య పాదామ్బురుహచిన్తనమ్ ।
ఓమిత్యేకాక్షరంసాక్షా, ద్వాసుదేవస్యవాచకమ్ ॥

தா:—பகவானுடைய பாதாரவிந்தங்களைத் துவாதசாக்கர மந்தி ரத்தால் சந்ததம் தியானம்செய்வது உத்தமமானயோகம். அல்லது இந்த மந்திரத்தின் முதலெழுத்தான ஓம் என்கிற பிரணவத்தோடா யினும்1008-தரம் ஜபிப்பது உத்தமமே வாசுதேவனைப் பிரதிபாதிக் கிற (ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்கிற) மந்திரத்தால் 108 அல்லது 1008-தரம் உரு ஜபித்து வேதபாராயணம் செய்து பின் னும் உரு ஜபித்து பாராயணம் இடைவிடாது செய்தலும் அஷ் டாங்க யோகம்செய்து பகவானையுள்ளபடி தரிசித்தலும் யோக மென்று சொல்லப்படுகின்றது.

శ్లో॥ సర్వధర్మాన్సముత్సృజ్య, పఞ్చకాలమనువ్రతాః ।
వ్యామిశ్రయోగనిర్ముక్తా గచ్ఛన్తిపురుషోత్తమమ్ ॥

தா:—இதரமான சர்வதர்மங்களைவிட்டு இந்த சாஸ்திரோக்த மான பஞ்சகால வநுஷ்டான பரமதர்மங்களை அநுஷ்டிப்பவர்களும், தேவதாந்திர சாதனாந்திர மந்திராந்தரங்களை விட்டவர்களும், அஷ் டாங்கயோக நிரதர்களும், திருமந்திரதுவயாநு சந்தான ஜபசீலர் களும், சரமஸ்லோக தாத்பர்ய மனஸ்வீலர்களும் பிரம்மசாக்ஷாத்

காரத்தை யடைகிறார்களென்று பஞ்சகால அநுஷ்டான சீலரான பரமயோகீந்திரரால் சொல்லப்பட்டிருப்பதால் சர்வரும் இந்த சதாசாரத்தைப் பின்பற்றி நடக்கவேண்டுமெனச் சொல்லப்படுகிறது.

அஷ்டாங்க யோகமாவன.

1. இயமம்:—5. கொல்லாமை, மெய்கூறல், கள்ளாமை, பிறர் பொருட்கவராமை, இந்திரிய மடக்கல்.

2. நியமம்:—5. தவம், சௌசம், நூலாராய்தல், கிடைத்தது கொண்டு மகிழ்தல், தெய்வவழிபாடு.

3. ஆதனம்:—துடைக்கும் முழந்தாளுக்கு மிடையே யிரண்டு உள்ளங் கால்களையும் செலுத்தி இருமாந்திருத்தல் போன்றவைகள்.

* 4. பிராணாயாமம்:—ரேசக, பூரக, கும்பங்களை உள்ளடக்கித் தியானிக்குதல்.

5. பிரத்தியாஹாரம்:— மனதை விஷயங்களில் செல்லாமல் பஞ்சேந்திரியங்களையும் தன்னுள் அடக்கி பிரமத்தைக்காண முயற்சித்தல்

6. தாரணை:—தைல தாரையைப்போல இடைவிடாமல் அந்தக்கரணங்களை ஒருவழிப்படுத்தித் தியானிப்பதற்குத் தாரணையென்பர்.

7. தியானம்:—கடவுளிடத்தில் விட்டு விட்டுச் செல்லும் அந்தக்கரணத்தின் பிரவாகம்.

8. சமாதி:—உண்டாயிருக்கும் சமஸ்காரங்களின் ஒழிவும், அடங்கியிருக்கும் சமஸ்காரங்களின் வெளிப்பாடும், உண்டாகி அந்தக்கரணம் ஒருமுகமாய் பரிணமிக்குதலும்.

இஃதன்றி, இமயம்-10, நியமம்-10, ஆதனம்-84, பிராணாயாமம்-2 என்பதாகவும் பிறவுமாகிய இவற்றின் விரிவை அஷ்டாங்க யோகத்தில் பரக்கக் காணலாம். அணிமா, மஹிமா, கரிமா, லஹிமா, ப்ராப்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம் என அஷ்டமாசித்திகளும் உண்டு. இவற்றில் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் சித்தபுருடர்களென்று சொல்வது.

ஆழ்வாராதியர்களில் சிலரும் இந்தயோகத்தை அநுஷ்டித்திருக்கிறதாக விசிதமாகிறது.

---

* குறிப்பு:—இரேசகபூரகக் கும்பங்களின் விவரமாவன - வாயுவை மூக்கின் வலது துவாரத்தின் வழியாக உள்ளுக்கிழுத்தல் இரேசகம். வாயுவை மூக்கின் இடது துவாரத்தின் வழியாக உள்ளுக்கிழுத்தல் பூரகம். வாயுவை மூற்றிலும் உள்ளடக்கல் கும்பகம். இவைகள் மூன்றும் சேர்ந்ததைதான் பிராணாயாமமென்று சொல்வது.

ஆசார்ய லக்ஷணம்.

பிர்ம்ம சாக்ஷாத்காரத்தை யடையக்கூடிய ஐந்துகால அநுஷ்டானங்களையும், வேதோக்தமான கர்மங்களையும் தவறாது செய்து சிஷ்யர்களுடைய பவபந்தங்களை ஞானோபதேசத்தால் விடுவித்து மோக்ஷ சாம்பிராச்சியத்தில் சேர்ப்பிப்பவ னெவனோ அவனே ஆசாரியனென்று சொல்லப்படுகிறது.

'பா. அம்பொன்னரங்கர்க்குமாவிக்குமந்தரங்க சம்பந்தம் காட்டித் தடைகாட்டி—உம்பர் திவமென்னும் வாழ்வுக்குச்சேர்ந்த நெறி காட்டும் அவனன்றோ ஆசாரியன். என்றும், ஆசார்யஸ்ய ஹரி: ஸாக்ஷாத்.

தா:—என்றமையால் ஆசாரியன் ப்ரம்மவித்தை யுணர்ந்தவனாய், சுசீலனாய், சுலக்ஷணனாய், யுக்தவய துடையவனாய், க்ருஹ தர்மம் வழுவாதவனாய், குலனாய், நீசசேவை செய்யாதவனாய், வேத பாண்டித்யனாய், சதானந்தனாய், சத்சம்பிரதாய முடையவனாய், சத்கர்மநியமனாய், தார்மிகனாய், சந்தேகங்களை நிவர்த்திப்பவனாய், சன்மார்க்க சிஷ்யகோடிகளைப் பெற்றோனாய், பகவத் பாகவத கைங்கர்ய துரந்தரனாய், பத்நி சமேதனாய், புத்ரவானாய், புண்யசீலனாய், பாபகாரியங்களைக் கனவினும் கருதாதவனாய், பல்லோர்க்கும் நல்லோனாய், பகவத்குண கீர்த்தனங்களைப் படனம் செய்வோனாய், பகவத் விஷயாதி கிரந்தங்களைச் சந்ததம் பாராயணம் செய்யவல்லனாய், இத வசனனாய், இதோபதேசம் செய்யும் இச்சையுடையவனாய், எள்ளளவேனும் கர்வமில்லாதவனாய், எவ்வுயிரும் தன்னுயிர்போல பாவிப்பவனாய், இகபரசாதகங்களை எடுத்துரைப்பவனாய், இதாயிதங்களுணர்ந்தவனாய், இந்திரிய நிக்ரகனாய், ஆஹாரநியதி, அநுவர்த்தனநியதி, சஹவாசநியதிகளுடையவனாய், ஆபத்திலும் தைர்யத்தை விடாதவனாய், ஆரோக்கியவானாய், அரிஷ்டவர்க்க நிக்ரஹனாய், ஐஸ்வர்யவானாய், ஐம்புலன்களையு மடக்கவல்லவனாய், தேவதாந்திர சாதனாந்தர மந்திராந்திரங்களால் ஜீவியாதவனாய், (குரு) என்கிற வாசகத்தின் பிரயோஜனத்தைச் செவ்வையாக வுணர்ந்திருப்பவனாய், நவவித சம்பந்தத்தை நன்றாகபோதிப்பவனாய் இராநின்ற புருஷனியாவனோ, அவனே ஆசிரியனென்று சொல்லப்படுகிறது.'

ஆனாலித்தகைய லக்ஷணங்களோடு கூடிய குருகிடைப்பதரிதாயினும் தீர்க்க விசாரணைசெய்து சற்றேறக்குறைய விலக்ஷண புருஷனை யமர்த்திக் கொள்ளலாம்.

பா. ஞானமநுட்டானமிவை நன்றாகவேயுடையனான குருவை யடைந்தக்கால்—மானிலத்தீர் தேனார் கமலத்திருமா மகள் கொழு நன் தானே வைகுந்தம் தரும்.

தா:—என்றமையால் இவ்விதகுணபூர்த்தியில்லாத காரிய குருக்களை விரும்புதல் வியர்த்தமே யாம்.

சுவயமாசாரிய லக்ஷணம்.

ஆக்னேயம்.

ஆசார்யஸ்சஹரிஃ ஸாக்ஷாத்,
சரரூபோநஸம்ஸயஃ, மக்னானுத்தரதேலோகான்,
காருண்யாச்சாஸ்திரபாணிநம்.

தா:—ஆசாரியனியாவருக்கும் பிரத்தியக்ஷமாகியும் சரரூபியாகியும் பிர்ம்மஸ்வரூபியாகியும் இருக்கிறான். இதனாலவன் தயாளுவாய்ச்சமுசாரசாகரத்தில் மூழ்கிக்கிடக்கின்ற பக்தசேதனர்களை ஞானோபதேச தெப்பத்தைக்கொண்டு கரைசேர்க்க வல்லவனானதாலும் பிர்ம்ம சாக்ஷாத்காரத்தை யடையச்செய்பவனானதாலும் ஆசிரியனை ஹரிக்கு ஒப்பிட்டுச் சொல்லலாயிற்று.

சுலோகம்.

எதிர் குருத்விஜாதீனாம், வர்ணானாம்ப்ராம்மணோகுரு,
ஸ்ரீணாம்குருஃப்பதிச்சைவசர்வேஷாம்வைஷ்ணவோகுரு.

தா:—எதி பிராம்மணருக்குக் குரு. க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுக்குப் பிராம்மணன் குரு. ஸ்ரீகளுக்குத் தன்பர்த்தா குரு. இந்த சர்வத்திராளுக்கும் வைஷ்ணவன் குருவென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சுலோகம்.

அசிகாசூத்ரவாம்ஸ்சவ காயத்ரிமபிநஸ்மரேத்,
துளசிகஞ்சமாலாதி, சங்கசக்கிராதிலாம்சனம்,
அஷ்டாக்ஷரஸ்ஸயனுஷ்டானம், சாத்தாதஸ்ரீவைஷ்ணவஸ்ததா,
பரஸ்யமோக்ஷதன்யைவ, குர்யாணித்யசுகிச்சலஃ.

தா :—சுவயமாசாரியனுன சாத்தாத வைஷ்ணவன் சிகாஎக்ஞோப வீதங்களைத் தியாச்சியம்செய்து, துளசி, நளிஞக்ஷமாலைகளைத் தரித்து, சங்கு சக்கர சின்னத்தோடமைத்த கர்ணபூஷண மணிந்து, சதா பிர்ம்மத்தியானியாய், ஜிதேந்திரயனுகி அர்த்த பஞ்சக தத்துவக்கியான ஆகாரத்ரய ஸம்பன்னனுகி சமதமாத்யனந்த கல்யாண குண பூரிதனுய், பகவத்குணுநுபவங்களில் ஈடுபட்டவனும், யாஷீயாதி காரியாயிருக்கிற விலக்ஷண புருஷனை ஆசாரியனுக அடையலாமென்று நாரதீயம் புகலும்.

இத்தியாதி பிரமாணங்களிருந் தமையினுலே. தான் உடையவர் திருக்கச்சி நம்பிகளிடம் ஆஸ்ரயிக்கச் சென்றதும் தீர்த்தப் ப்ரசாதம் விரும்பியதும் (குருபரம்பரை).

குறிப்பு :—சிகா எக்ஞோப வீதங்களைத்யஜித்ததாகச் சொல்வதால் பூர்வாஸ்ரமத்தில் இரண்டும் இருந்ததாக ஏற்படுகிறது.

இப்போது சங்கரர், மத்துவாசாரிகளுக்குச் சிகா எக்ஞோப வீதம் இல்லாதிருப்பது போல வெகுகாலத்திற்கு முன் ஆசாரியத்துவம் செய்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தியாச்சியமாயிருந்திருக்கிறது.

சிஷ்ய லக்ஷணம்.

சாண்டில்யம்.

శ్లో॥ పరిశుద్ధకులోద్భూతం, విశుద్ధాచారతత్పరమ్ ।
విరతంచమహాపాపా త్పితృదారాదిషుప్రియమ్ ।
దాన్తంశాన్తంమృదుంసౌమ్యం ప్రశాన్తంభగవత్పరమ్ ।
సంతప్తహృదయంభక్త్యా సక్త్యాసర్వార్థసాధకమ్ ।
ప్రియవాక్యంమహాబుద్ధిం సత్యంకుశలవాణికమ్ ।
ఏవమాదిగుణోపేతం శేవ్యభావేనసంగతమ్ ।
సంవత్సరంతదర్థం వామాసత్రయమథాపివా ।
పరీక్ష్యవివిధోపాయైః కృపయానిస్పృహోవదేత్ ॥

தா :—ஆசாரிய இலக்கணத்தைக்கேட்ட ஆரியர்கள் சீடருடைய இலக்கணத்தைத் தெரியச்செப்பவேண்டுமென்று, வேண்ட சாண்டில்ய மஹரிஷி சாற்றுகின்றார்.

ஹே ப்ரபன்ன சிரேஷ்டர்களே! தர்மார்த்த காமமோக்ஷத்தை யடைய விரும்பும் மாணுக்கன் பரிசுத்த குலசீலனுய் சிஷ்டாசாரத்தில் அபேக்ஷையுடையனுய், பாபக்ருத்தியங்களில் சம்பந்தப்படாதவனுய், பந்து யிதனுய், தாய் தந்தையர்களுக்குப் பணிந்து நடப்போனுய், பஞ்சேந்திரியங்களையும் அடக்கவல்லோனுய், ம்ருது சுபாவமுடையவனுய், வைதிகாசார முடையவனுய், வைஷம்யமிலானுய், வயதுள்ளவனுய், தயாளுவாய், சாந்தனுய், க்ஷமையுடையவனுய், சாஹசமுடையவனுய், கிராக்ய சத்தியுடையவனுய், சோம்பலற்றவனுய், வித்யார்த்தியாய், கேட்டவைகளை மறவாதவனுய், நித்திரை, சுகம், துயரம், இவைகளை நீக்கினவனுய், குருவாக்கை கடவாதவனுய், இத்தகைய குண விசேஷங்களுடையவ னெவனே அவனே நற்சீடனென்று சொல்லப்படுகிறது.

கேளுங்கள் முனிபுங்கவர்களே! மேலே சொல்லப்பட்ட விலக்ஷணசீடன் ஆசார்யரிடம் வந்து தன்னை யங்கீகரித்து ப்ரம்மோபதேசம் செய்து பஞ்சமோபாய நிஷ்டனுகச்செய்து பாகவத ஸ்ரீபாததூளிக்கு அருகனும்படி கடாக்ஷிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டும்.

*"நாஸம் வத்ஸரவாஸிநேப்ரப்ரூயாத்" என்கிறபடி ஒரு வருஷகாலம் ஆசிரியன் சந்நிதியில் சலிப்பின்றி வாசம்செய்கிற சிஷியனுக்கு உபதேசம் செய்யவேண்டு மென்னும் பிரமாணமிருப்பதால் அவனை இருத்தி குணுதிசயங்களை பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்வோமென்று சிஷியனுக்கறிவிக்க, சீடன் அதற்கிணங்கி ஆசாரியனிடம் சமாஸ்ரயணுதிகளையும் மந்திர மந்திராந்திரங்களையும் அப்யஸிக்க வேண்டும்.

శ్లో॥ ఆచార్యచిత్తానుగుణం సిద్ధాంతానుగుణంత్వపి ।
అన్యత్రశ్రుణుయాజ్జీర్ణే యమనుజ్ఞాప్యైవజీవతి ।
యస్మిన్నపదమవిద్యాయాన సంసిద్ధిరభోధతః ।
గుణోర్త్యాప్యన్యతో గ్రాహ్య పరావిద్యాగుణాన్వితాత్ ॥

---

* 18 ஆவர்த்தி உடையவரை வரும்படியாகச் செய்து, திருக்கோட்டியூர் நம்பி மந்திரார்த்தங்களைச் சாதித்துணர்க.

தா :—என்று சொன்னமையால் ஒரு ஆசிரியனை அடைந்த சீடன் மற்றொரு ஆசிரியனை யடையலாகுமாவென்கிற சங்கையுண்டாகக்கூடும் : உடையவர் ஐந்து ஆசாரியர்களிடம் வேதார்த்தங்களை கேட்டறிந்ததாக குருபரம்பரையில் காண்கிறபடியால் ஆசாரியன் ஜீவித்திருப்பினும் அவருடைய நியமனத்தின்பேரில் மற்றொரு ஆசாரியரிடத்தில் வேதாந்தங்களை அப்யசிக்கலாம் வார்த்திக்ய திசையினாலும் போதனசக்தி குறைந்துவிட்ட காரணத்தினாலும் இவரொத்த ஆசிரியனையடையத் தட்டில்லை.

சங்க சக்கராங்கித ப்ரபாவம்.

பாராசரம்.

శ్లో॥ ఆద్యస్తుశఙ్ఖచక్రాది ధారణం వైష్ణవం స్మృతం ।
పుణ్డ్రం నామక్రియాం చైవ మన్త్రశ్చైవార్చనం హరేః ।
సంస్కారాః పఞ్చకర్తవ్యా బ్రాహ్మణస్య విధానతః ।
వినా యజ్ఞోపవీతేన వినా చక్రస్య ధారణాత్ ।
అచక్రధారణం విప్రం యశ్శ్రాద్ధే భోజయేన్నరః ।
రేతో మూత్రపురీషాదీన్, స పితృభ్యః ప్రయచ్ఛతి ॥

தா :—பகவத் ஸமாஸ்ரயணமானது ஒரு சேவகன் தன்னை இன்னார் மநுஷ்யனென்று பிறரறிக்கைக்காக எஜமானுடைய அடையாளத்தைத் தரித்திருப்பதுபோல ஸ்ரீயப்பதியினுடைய தாசபூதர்களான நாம் அவனுடைய ஆயுதங்களான சங்கம் சக்கரமென்கிற இரண்டு சின்னங்களையுமணிதல் அவசியம். மேலும் சக்கர தாரணமென்கிற தாபஸம்ஸ் காரத்தையும் துவயாநுசந்தான மென்கிற மந்திர சமஸ்காரத்தையும் பெறுதவன்பூணூலில்லாத நீசப்ராமணனை நிகர்ப்பான். சமஸ்காரமில்லாத ப்ராம்மணனை எவன் சார்த்தத்தில் வரிப்பானோ அவன் தன்னுடைய பிதுர்களுக்கு சுக்கிலம் மூத்திரம், அமேத்தியம் முதலான நிஷித்த வஸ்துக்களை வுண்பிப்பவனாகிறானென்று சாஸ்திரங்களின் பிரமாணம். தாபசம் ஸ்காரமில்லாதவன் இந்த ஜன்மத்

திலே நீசனுகி ஔவ்விய கௌவ்வியங்களுக்கு யோக்கியனுகாமல் போய் விடுகிறுன்.

வேதம்.

శ్లో॥ జ్ఞానాన్ మోక్షమజ్ఞానాత్సంసారమ్ ।
తద్విజ్ఞానార్థం సగురుమేవాభిగచ్ఛేత్, సమిత్పాణిశ్శ్రోత్రియం ।
బ్రహ్మనిష్ఠం తస్మైసవిద్వానుపసన్నాయ, సమ్యక్ప్రశాంత ।
చిత్తాయ. శమాన్వితాయ, యేనాక్షరంపురుషంవేదసత్యం ।
ప్రోవాచ, తాంతత్త్వతో బ్రహ్మవిద్యాం ॥

தா :—என்று சொல்வதால் மோக்ஷா பேக்ஷையுடைய பரம சத்வ நிஷ்டர்களுக்கும் எம்பெருமானுடைய நித்திய விபூதி கைங்கர்யபரர்களுக்கும் அர்த்த பஞ்சக்கியானத்தினுலும், தாப சம்ஸ்காரத்தினுலும் பரனுலகடைய வேண்டியிருப்பதால் சர்வ சேதனர்களுக்கும் உஜ்ஜீவிக்க ஹேதுவானதாயிருக்கிறது. அஃதில்லாதவன் அநேக கோடி ஜன்மங்கள் நரகவாசம் செய்கிறுனென்று சுருதிகளில் சொன்னபடிக்கு முமுக்ஷுவானவன் அந்த விக்ஞானுர்த்தம் அறிந்த வேதார்த்தசாவித்தனும் ப்ரம்மநுபவைகநிஷ்ட விலக்ஷணனுனவனுமான சதாசாரியனையடைந்து சமாஸ்ரயண சம்பந்தமான தப்தசக்ராங்கிதத்தை அடைய வேண்டுவதவசியமென, ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையாலுங்களுக்கு அதை சவிஸ்தாரமாகப் புகல்கின்றேன் சாவதானமாய்க் கேளுங்கள்.

எஜுர்வேதம் ஸதபதப்ரமாணம்.

శ్లో॥ తప్తంచక్రంద్విభుజేదార్య మిత్యూర్ధ్వపుణ్డ్రం ।
మాలిఖేత్తస్మాద్విరేఖంభవతి, బ్రహ్మణా ।
సాయుజ్యం సలోకతాంజయతి, యఏవంవేద ।
నామ్నే మైత్రాయణీయశాఖాయాం, పవిత్ర ।
మిత్యగ్నిః అగ్నిర్వై సహస్రారః, సహస్రా ।
రోనేమిః, నేమినాతప్తతనూః, బ్రహ్మణసాయుజ్యం సలోకతామాప్నోతి॥

எஜுர்வேதம் கடஸாகை.

శ్లో॥ ధృతోర్ధ్వపుణ్డ్రః కృతచక్రధారీ, విష్ణుంపరంధ్యాయ |
యతియోమహాత్మ, స్వరేణమంత్రేణసదాహృ |
దిస్థితంపరాత్పరం యన్మహతోమహాంతం ॥

இருக்கு வேதம்.

శ్లో॥ చక్రంబిభర్తివపుషాభితప్తం, బలందేవానా |
మమితస్యవిష్ణోస్సఏతి, నాకందురితా౯వి |
ధూయప్రియంయద్వ్రతయోవీతరాగాః ॥

பாஞ்சராத்திரம் விஹகேந்திர ஸம்மிதாயாம்.

శ్లో॥ శ్రుతిస్మృతిస్వరూపేణ, జగతాముపకారకం |
సర్వకర్మాధికారశ్చ, శుచీనామేవచోదితః |
శుచిత్వంనిహితం తస్యయోభిభర్త్యాయుధానిమె |
అశ్వమేధసహస్రస్య వాజపేయశతస్యచ |
యత్ఫలంప్రాయతే తత్స్యాన్మదీయాయుధదారణాత్ |
ఉపాసీతగురోర్వర్షం విష్ణోర్ధాస్యమభీప్సతః |
విహితాంపంచసంస్కారాః యుక్తస్యానన్యచేతసః |
తాపఃపుండ్రస్తథానామమంత్రోయాగశ్చపంచమః |
అమీతుపంచసంస్కారాః పరమైకాంతిహేతవః |
తారయిష్య౯గురుశ్శిష్యం చక్రాద్యైశ్శ్రేష్ఠిభిర్యుతేః ॥

தா :—இவ்விதமாக அநேக வேதஸ்ருதிகள் முறையிடுகின்ற மையால் பகவத் சம்பந்தத்தைக் கோரும் சமஸ்த மதஸ்தர்களும், தாபப்புண்டர நாமமந்திரயாக மென்று சொல்லப்பட்ட பஞ்ச மஸ்காரங்களையும் அவசியமடைதல் வேண்டும்.

இருக்சாகை எழாம் அஷ்டகம் நாலாமத்தியாயம், 7-ம் வர்க்கம்.

శ్లో॥ పవిత్రంతేవితతంబ్రహ్మణస్పతే ప్రభుర్గాత్రాణి |
పద్యేషివిశ్వతః, అతప్తతనూర్నతద్దామోఅశ్నుతేతసద్వహంతస్సమానతః ॥

தா :—சக்கராங்கித மில்லாத ப்ராம்மணனாயினும் அவன் சரீ ரத்தைப் பார்க்கக் கூடாதென்று நிஷேதித்திருக்கிறது.

மைத்திராவருண சாகை.

శ్లో॥ సామవేదే ప్రతిపాద్యతె తథాహి పవిత్రమిత్యగ్నిః।
అగ్నిర్వై సహస్రారః, సహస్రారో నేమిః, నేమినా తప్త।
తనుః బ్రాహ్మణస్సాయుజ్యం సలోకతామాప్నోతి ॥

தா :—அக்கினியால் தப்தமான சங்கு சக்கரங்களைப் ப்ரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய யாவரும் தரித்துக்கொள்ள வேண்டுமென்றும் தரித்தவர்கள் ப்ர்ம்மசாயுச்சியத்தையடை கிறார்க ளென்றும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

காண்டவ வேதம்.

శ్లో॥ దేవాసోయేనవిధృతేన బాహునాంసుదర్శనేన।
ప్రయాతంస్వర్గమాయాంతితామలోకవిస్ఫృష్టవీ।
తస్యయంతీబ్రహ్మణాంసర్వం సర్వావైదేవతానాం।
సర్వావైవిప్రాణాం, సర్వావైక్షత్రియాణాం।
సర్వావైవైశ్యానాం, సర్వావైశూద్రాణాం।
మిత్యగ్రినావైహోత్రా తప్తంచక్రం।
ద్విభుజేధార్యేలోర్ధ్వ పుండ్రమాలిఖేత్।
తస్మాద్విరేఖంభవతి, పునరాగమనంచేతి।
బ్రహ్మణస్సాయుజ్యం సలోకతామాప్నోతి ॥

தாத் :—சமஸ்த தேவர்களும் சமஸ்த ப்ராம்மணர்களும் சமஸ்த க்ஷத்திரியர்களும், சமஸ்த வைசியர்கணும், சமஸ்த சூத்தி ரர்களும் சங்கு சக்கரதாரணம் செய்துகொள்ளவேண்டும். மத்தி யிலிரண்டங்குல இடைவெளியுள்ள ஊர்த்துவ புண்டாம் நெற்றி இல் தரிக்கவேண்டு மென்றும் இந்த அடையாளங்க ளுள்ளவர் களை எமகிங்கரர் அணுகமாட்டார்க ளென்றும் சுருதி புகலும்.

பரமோப நிஷத்து.

శ్లో॥ నేమినాతప్తతనుః బ్రహ్మణసాయుజ్యం, సలోకతాంమాప్నోతి ॥

தா :—அக்கினியில் தப்தமான சக்கராங்கிதத்தோடு கூடின சரீரமுடையவன் பிராம்மணனாயினும் மற்றெவராயினும் சாலோகிய சாயுஜ்ஜியங்களை யடைகின்றார்கள்.

அதர்வணமஹோப நிஷத்து.

శ్లో॥ దక్షిణేతు భుజేవిప్రో బిభృయాద్వై సుదర్శనం ।
సవ్యేతుశంఖం బిభృయాదితిబ్రహ్మవిదోవిదుః ॥

தா :—பிராம்மணர்கள் இருபுஜங்களிலும் சங்காழி தரித்துக் கொள்ளவேண்டியது யுக்தமென பரம்ம நிஷ்டர்கள் அறிவார்களென்று வேதங்கள் முறையிடுகின்றன.

அதர்வணமஹோப நிஷத்து.

శ్లో॥ అచక్రధారయేత్ విప్ర బహువేదశ్రుతోపివాన్ ।
నజీవన్ న్నేవచండాలో, మృతో నిరయమాప్నుయాత్ ॥

தா :—அநேக வேதங்களைக்கற்ற பிராம்மணனாயினும் சக்கரதாரண மில்லாதிருப்பானாயின் அவன் ஜீவசண்டாளனாகி யிறந்த பின்னர் நரகத்தையடைகிறா னென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பராசர ஸ்ம்ருதி உத்தரகாண்ட
2-ம் அத்தியாயம்.

శ్లో॥ వినాయజ్ఞోపవీతేన వినాచక్రస్యధారణం ।
వినాద్వయేనైవవిప్రశ్చండాల త్వమాప్నుయాత్ ।
విధీనాంశంఖచక్రాదిధారణాం చోర్ధ్వపుణ్డ్రకం ।
ఉపవీతంశిఖాబంధః విపులస్యసతస్మృతం ।
చక్రలాంచన హీనస్య ద్విజత్వంనిష్ఫలంభవేత్ ।
అచక్రధారణంవిప్రం యశ్శ్రాద్ధేభోజయేన్నరః ।
రేతోమూత్రపురీషాది పపితృభ్యఃప్రయచ్ఛది ।
శంఖచక్రోర్ధ్వపుండ్రాది రహితో బ్రాహ్మణాధమః ।
జీవన్నేవసచండాలస్సర్వకర్మసుగర్హితఃచక్రసంస్కార ।
రహీనస్యద్విజత్వం నిష్ఫలంభవేత్ ॥

தா:—எக்ஞோபவீதம் சக்கராங்கித தாரணம் இல்லாமல் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது. இவைகளில்லாத பிராம்மணன் ஜீவசண்டாள த்வத்தை யடைகின்றான். விதிப்பிரகாரம் எக்ஞோபவீதம், ஊர்த்துவ புண்டரம், சக்கராங்கிதம் இவற்றை எவன் தரிக்கவில்லையோ அவனுடைய பிராமணீகம் நிஷ்பிரயோஜனம், சமஸ்காரமில்லாத பிராம்மணனை சிரார்த்தத்தில் புஜிப்பித்தவன், ரேதசு, மூத்திர, மலாதிகளைப் பிதுர்களுக்கு உண்பித்தவனாகின்றான். சங்கு சக்கர ஊர்த்துவபுண்டா ஹீனனான பிராம்மணன் ஜாதிசண்டாளனாய் குலப்ரஷ்டனாய் யாவராலு மிகழப்பட்டு ஔவ்விய கௌவ்வியங்களுக்கு யோக்கியமில்லாமல் இறந்த பின்னர் ரௌரவாதி நரகத்தில் அநேக காலம் வாசம் செய்ய வேண்டு மென்று வெகு வேத சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

வ்ருத்த பராசரஃ

శ్లో॥ అగ్నినైవతుసంతప్తం చక్రమాదాయవైద్విజః ।
ధారయేత్సర్వవర్ణానాం హరిసాలోక్యసిద్ధయే ।
ఉపవీతశిఖావిప్రచక్రలాంఛనసంయుతః ।
చక్రలాంఛనహీనస్య విప్రస్యవిఫులాఃక్రియాః ॥

தாத்—விஷ்ணுலோக சித்தியை விரும்பும் பிராம்மணன் சிகை, எக்ஞோப வீதம், சக்கராங்கிதம் இவைகளுடையவனாயிருக்கவேண்டும். இவைகளில்லாதவன் செய்யும், ஜபம், தபம், யாகம், எக்னும், தானம், சார்த்தம் முதலிய யாவத்கர்மங்ளும் காட்டிற் கெரித்த நிலவாய் விடும்.

வ்ருத்த மநுஃ

శ్లో॥ ఊర్ధ్వపుండ్రంతథా చక్రంనిత్యంధారయేత్ నరః ।
తేనతస్యాశుదిర్నశ్యేచ్ఛుభమేస్యవివర్ధతే ।

தா:—ஊர்த்துவ புண்டர சக்கராங்கித தாரணமுடையவர்கள் புத்தி பூர்வகமாகவும் அபுத்தி பூர்வகமாகவும் செய்யும் சுவல்ப பாபங்கள் யாவும் சூரியன் முன் பனிபோலாகுமெனமநு சொல்லியிருக்கிறார்.

சங்கர வுவாசः

శ్లో॥ ఉపవీతాదివద్ధార్యః శంఖచక్రగదాదయః ।
బ్రాహ్మణస్య విశేషేణ వైష్ణవస్య విశేషతః ॥

தாத் :—சங்கு சக்கரம், கதை நாந்தகம், சார்ங்கம் என்கிற ஐந்து ஆயுதங்களையும், உபவீதம்போல் விசேஷ பக்தியுடன் ப்ராம்மணர்கள் தரிக்கவேண்டும். அதினும் விசேஷமாக வைஷ்ணவர்கள் தரிக்க வேண்டுமென்று சிவபிரானல் சொல்லப்பட்டிருக்கிறது,

சாண்டில்யः

శ్లో॥ పశుపుత్రాదినం సర్వం గృహోపకరణాని చ ।
అంకయేచ్ఛంఖ చక్రాభ్యాం నామకుర్యాచ్చ వైష్ణవః ॥

தாத் :—புத்திரன், புத்திரி, பசுக்கள், க்ருஹத்திலுள்ள சமஸ்த வஸ்துக்கள் விருக்ஷாதிகள் முதலான யாவற்றிற்கும் சங்கு சக்கரதாரணம் செய்து வைஷ்ணவ மென்கிற பெயரிட்டு வழங்கப்பட வேண்டு மென்று விதி புகல்கின்றது.

ஹரிவட்சம்

శ్లో॥ నానాదేశసముద్భూతబ్రాహ్మణాః క్షత్రియా విశః ।
చక్రాంకితా ప్రవేష్టవ్యా యావదాగమనం మమ ॥

தாத்:—நாநாதேசங்களில் உத்பவித்தவர்களரனுலும், நான்கு வர்ணத்திலுத்பவித்தவர்களானுலும் சக்கராங்கித மில்லாதவர்களை நான் வருமளவும் கோட்டைக்குள் பிரவேசிக்க விடப்படாதென்று, வாயில்காப்பாளரைப்பார்த்து கண்ணபிரான் அருளிச்செய்ததாக ஹரிவம்சம் புகலும்.

பாகவதம்ः

శ్లో॥ చక్రాంకితస్య సాన్నిధ్యే తపః కుర్యాత్పవిత్రతః ।
స్నానం దానం తపోహోమ స్తత్సర్వం చాక్షయం భవేత్ ।

సంవత్సరేణయత్పాపం మనసాకర్మణాకృతం ।
తత్సర్వంనశ్యతే తేషాంసకృచ్చక్రాంకదర్శనాత్ ।
జ్వరదాహభయంచైవ, చ్చోరాగ్నిచభయంతథా ।
సర్వతంత్రశమాయాలం యత్రచక్రాంకితో వసేత్ ॥

தா :—சங்க சக்கராங்கிதம் உடையவன் வசிக்கும் ஸ்தலத்தில் தபசு, ஹோமம், பகவதாராதனம், தானம், நித்திய நைமித்திக கர்மங்களியாவும் விருத்தியடையும். மனோவாக்குக் காயங்களாலுண்டாகும் பாபங்களியாவும் நசிக்கும்' சுரம், அக்கினி, தாபம், சோரர், துஷ்டபயம் யாவுமகலும்-மங்களகரம்மேன்மேலுண்டாகு மென்று புராணத்திற் புகல்கின்றன.

பிர்மாண்ட புராணத்தில் சிவன் பார்வதிக்குச் சொன்னது.

శ్లో॥ సాసాక్షాద్విష్ణుసామీప్యం మృతపిత్రాలభేత్సదా ।
విష్ణుచక్రాంకితందృష్ట్వా యోభ్యుత్థాయకృతాంజలిః ।
స్వకీయంకులమర్త్యం బ్రహ్మలోకముహీయతే ।
చక్రాంకితంభుజాయస్మై పఙ్క్తిమధ్యేతుభుంజితే ।
బ్రహ్మచారిగృహస్థోదవానప్రస్థోఽథభిక్షుతః ।
అవశ్యంధారయేచ్చక్రం అగ్నితప్తమతంద్రితా ॥

தா :—தாபசமுஸ்காரமுள்ள சரீரத்தைப் பார்த்து எவன் நமஸ்கரிப்பானோ அன்னோன் தன்னுடைய இறந்த பிதுர் தேவர்களுடன் பிர்ம்மலோகம் சார்ந்து யாவராலும் பூஜிக்கப்பட்டு தன் குலத்தினுள்ள பின்னவரையும் சத்கதிக்கு ஆளாக்குகிறான். எந்த ஜனசமுகத்தில் சக்கராங்கித மடைந்தவன் புஜிப்பானோ, அந்த பந்தியையும் காரிய கர்த்தாவையும் தேவர்கள் கொண்டாடுகிறார்கள். பிர்ம்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், சன்னியாசி இவர்களியாவராயினும் சர்வ ஜாக்கிரதையுடன் தக்ஷணமே சமாஸ்ரயணம் செய்துகொள்ள வேண்டும். நீரில் எழுத்தாகும் ஆக்கையானதினாலே திடீரென மரணம் சம்பவிப்பதாகும். சமஸ்காரமில்லாவிடில் பாவதேஹமாகிவிடும். மேலும் தீக்ஷை பெறுதவன் சூத்திரனாயிருப்பதால் அவனுடன் எவ்வித சம்பந்தமும்

வைத்துக்கொள்ளக் கூடாதென்று அநேக ப்ரமாணங்களை முன்னிட்டே பெரியோர்கள் சிசு ஜனித்த ஜாதகர்மதினத்திலேயே புட்பத்தால் சங்கு சக்கர குறிவைப்பதும், தங்கம், வெள்ளி தகட்டில் சங்கு சக்கரம் ஸ்தாபிதம் செய்து சிசுவின்கழுத்தில் கட்டிவைப்பதும். வழக்கமாயிருக்கிறது. ஐந்து அல்லது ஏழாவது வயதில் தப்தமான சக்கராங்கிதம் செய்து மந்திரோபதேசம் செய்ய வேண்டுமென்று பலஸ்ருதிகளினும் சோன்னவற்றைப் புகலலாயினேன்.

வராஹ புராணம்.

శ్లో॥ అంకయోశ్శంఖచక్రాభ్యాందక్షిణేతరపార్శ్వయోః ।
తద్ధారణాన్మహాపాపాన్ముచ్యతేనాత్రసంశయః ।
వాసుదేవంకనంకుర్యాద్రాత్మనోబాహుమూలయోః ।
సోశ్వమేధఫలంప్రాప్య విష్ణులోకేమహీయతే ॥

ஆதித்ய புராணம்.

శ్లో॥ చక్రాదీన్ధారయేద్విప్రోలలాటేమస్తకేభుజే ।
పాతకాదివిశుధ్యర్థం భవక్లేశవినాశనం ॥

தாத் :—தப்த சக்கிராங்கிதங்களைத் தரித்தவன் சர்வ பாபத்தினின்றும் விடுபட்டவனாய் அஸ்வமேத யாகத்தின் பலனை யடைந்து விஷ்ணுலோகத்தில் பூஜ்ஜியனாகின்றான். பின்னும் பாப விமோசனத்தின் பொருட்டும், சம்சார துக்க நிவாரணத்தின் பொருட்டும்,தாப சம்ஸ்காரத்தைப் பிராம்மணன் லலாட நெற்றி முதலிய ஐந்து இடங்களிலும் செய்து கொள்ளல் வேண்டும்.

பகவத் வாக்யம்.

శ్లో॥ విప్రోవాయదివాక్షత్రో వైశ్యశ్శూద్రస్తథైవచ ।
అన్యేసంకరజాతాశ్చ చక్రాంకామమవల్లభాః ॥

தா :—பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர சங்கர ஜாதியார்களாயினும் என்னுடைய திருவாழித் திருச்சங்கத்தைப் புஜத்தில் தரிப்பாராகில் எனக்கு மிகுந்த பிரியமுள்ளவராகின்றார்கள் என்பதாக எம்பெருமானால் சொல்லப்பட்டிருக்கிறது.

శ్లో॥ సపాదపుణ్డ్రాంకితఫాలకే తాసుతప్తచక్రాంకితబా ।
హుమూలాః అష్టాక్షరద్వాదశమంత్రజప్యాః ।
మద్భక్తవర్యాః ఖలుపూతదేహాః ॥

தா:—பாத புண்டரங்களால் அலங்கிருதமான முகமும், தப்த சக்கராங்கிதமான பாஹுக்களும் அஷ்டாக்ஷர, துவாதசாக்ஷர திரு மந்திரத்துவயாநு சந்தான முடைய ஹ்ருதய முடைய வரும் எவரோ அவர்கள் எனது பக்தருள் மிகச்சிறந்தவர்களாயும் அவருள் சதா நீங்காதவனாயும் வாசம் செய்கிறேன் என்று பகவா னருளிச் செய்திருப்பதாலவர்களுடைய பெருமையையும் தாப சம்ஸ்காரத்தின் மகிமையையும் புகலவென் னொருநாவில் முடிவு பெறுததினாலும் கிரந்த விஸ்தரபீதியினாலும் சங்கரகமாக வுரைக்கப்பட்டது.

குறிப்பு:—மத்வமதஸ்தர்கள் இருபுஜங்கள் நெற்றி மார்பு முதலிய ஐந்து யிடங்களிலும் சங்கு சக்கரத்தைத் தரிப்பது வழக்கம்.

சமஸ்கார மில்லாத சரீரத்தை அரைக்ஷணமாகிலும் தரிப் பது கஷ்டமெனச் சிந்தித்த எம்பெருமானார் மதுராந்தக ஏரிக் கரையில் பெரிய நம்பிகளைச் சேவித்து மவ்விடமே சமாஸ்ரய ணம் செய்து கொண்டார் (குருபரம்பரை பார்க்கவும்).

ஸ்ரீபாத தீர்த்த மகிமை.

பராசர:

శ్లో॥ త్రిస్రఃకోట్యర్ధకోటీచతీర్థాని భువనత్రయే ।
వైష్ణవాఙ్ఘ్రిజలస్పర్శాత్ కోటిభాగేననోసమః ॥

பாரதம்.

శ్లో॥ వైష్ణవానాంతుయోమర్త్యః పిబేత్ పాదోదకంసదా ।
క్షయరోగాదికుష్ఠంతు సద్యోవశ్యతిభారత ॥

ఏతత్సమస్తపాపానాం ప్రాయశ్చిత్తర్మనీషిభిః ।
నిర్మితంభగవత్భక్త పాదోదకనిషేవణం ॥

தா:—சுவர்க்க மத்திய பாதாளமென்று சொல்லுகிற மூன்றுலகங்களினும் மூன்றரைக்கோடி புண்ணியதீர்த்தங்களுண்டு. இதில் ப்ரபன்ன சிரேஷ்டரான பாகவதர்களுடைய ஸ்ரீபாத தீர்த்த மென்று சொல்லுகிற ஓர் திவ்விய தீர்த்தமுண்டு, இந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் பாதோதகத்தின் புண்ணியத்தில் கோடியிலோர் பங்கு மூன்றரைக்கோடி தீர்த்தங்களும் கொடா தென்பதாக பராசர பகவானால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்ரீபாத தீர்த்தமாகையினாலே கர்மாநுகுணமாக வுண்டான மகத்தான குஷ்டரோகம், க்ஷயரோகம், காசரோகம், முதலிய கொடிய வியாதிகள், பஞ்சமஹா பாதகங்கள், இவைகளியாவும் நசித்து பரனுலகமடைகின்றார்க ளென்று பாரதாதியிதிஹாசம் புகலாநின்றது.

பராசர:

శ్లో॥ ప్రాయశ్చిత్తమిదం గుహ్యంమహాపాతకనామపి ।
వైష్ణవాఙ్ఘ్రిజలంపుణ్యంభక్త్యాసంప్రాశ్యశ్రీయదా ॥

தா:—ப்ரம்மஹத்தி, சுராபானம், குருநிந்தை பரத்ரவ்யாபஹரம், பொய்பேசல், அசத்காரியங்களைச்செய்தல், ஆசாரமின்மை முதலிய பாபங்களியாவும் பாகவத ஸ்ரீபாததீர்த்த ஸ்வீகரத்தால் நசித்து விடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.)

ஸ்ரீபாத தீர்த்தம் சேர்க்கவேண்டிய பத்ததி.

பாஞ்சராத்திரம் விஷ்வக்ஸேன சம்ஹிதை.

శ్లో॥ మండలంపురతః కృత్వాతదూర్ధ్వేత్వాసనంన్యశేత్ ।
తస్యోపరినశేత్వాతస్మిం తస్యపృష్ఠేసమర్చయేత్ ।

ఆగతం వైష్ణవం సాక్షా ద్విష్ణుమిత్యేవచింతయేత్ ।
ప్రణీపత్య యథాన్యాయం ప్రార్థయేచ్ఛ్రీపదద్వయం ॥

தா :—தனக்கெதிரில் மண்டலாகாரமாக ஆசனமமர்த்தி, அதின்பேரில் பாத்திரத்தை வைத்து, புஷ்பதீப தூபாதிகள் சமர்ப்பித்து யதியாகவந்த ஸ்ரீ வைஷ்ணவரை ஆசனத்திலமர்த்தி சர்வேசனைகப் பாவித்து சோடசோப சாரங்கள் சங்கிரஹமாக நடத்தி சாஷ்டாங்கம் செய்து, அவருடைய மங்களகரமான திருவடிகளைப் பிரார்த்தித்து, சிரம், நெற்றி, கண்கள், ஹ்ருதயம் இவைகளில் ஒத்திக்கொண்டு பீடத்தின்பேரில் அமர்த்தி சுகந்த ஜலத்தினல் வலதுபாதத்தையும் இடது பாதத்தையும் சுத்தி செய்து தீர்த்தத்தைப் பாத்திரத்தில் ஏற்று தௌதவஸ்த்திரத்தி ஞல் பாதத்தைத் துடைத்து பூர்வம்போல அங்கங்களில் ஒன்றிக் கொண்டு தாம்பூல தக்ஷிணைவைத்து தண்டம் சமர்ப்பித்து, அவர் ஆக்ஞையின் பேரில் தீர்த்தத்தை மூன்று தபாஸ்வீகரிக்க வேண்டும். வெண்கலம், ஈயம், மரம், மண் இந்தப் பாத்திரங்க ளில் தீர்த்தம் சேர்க்கப்படாது.

ஸ்ரீபாததூளியின் விசேஷம்.

பராசர:

శ్లో॥ యస్యమూర్ధ్ని స్థితా యావద్వైష్ణవాఙ్ఘ్రిరజశ్శుభమ్ ।
గఙ్గాదిసర్వతీర్థాని తావత్తిష్ఠన్త్యసంశయమ్ ॥

தாத் :—ஸ்ரீமகா பாகவ தோத்தமர்களின் ஸ்ரீபாத தூளியா னது ஒருவருடைய சிரசில் எவ்வளவு காலம் தங்கியிருக்குமோ அந்தகாலம் வரையில் கங்கை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா சிந்து, காவேரி, யமுனை என்று சொல்லப்படுகிற சப்த தீர்த்தங் களும் அவர்களுடைய சிரத்தில் வாசம் செய்கின்றன.

சேஷப்ரசாத விசேஷம்.

శ్లో॥ కోటిజన్మార్జితం పాపం జ్ఞానతో జ్ఞానతోపివా ।
సద్యః ప్రణశ్యతే నౄణాం వైష్ణవోచ్ఛిష్టభోజనాత్ ॥

தா :—யாவனொருவன் பரமபாகவதோத்தமர்கள் ப்ரசாதப் பட்டு மீந்த ப்ரசாதத்தை மஹாப்ரசாதமென்று திரிகரண சுத்தியோடு ஸ்வீகரிப்பானோ அவன் புத்தி பூர்வகமாகவும் அபுத்தி பூர்வகமாகவும் செய்துள்ள சர்வபாபங்களும், ஜன்மாந்திர பாபங்களும் தக்ஷணமே நசித்து விடுமென்று பராசர பகவானால் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—மதுராந்தக ஏரிக்கரையில் பாகவத உச்சிஷ்டத்தைப் புஜித்த உடும்பு யாதவப்ரகாசனாக ஜனித்த சரிதம் குருபரம்பரையில் காணலாம்.

இராஜஸூய யாகத்தில் உச்சிஷ்ட ஸ்பரிசம்பெற்ற அணில் சுவர்ணமயமான கதை பாரதத்தில் பார்க்கலாம். "போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதராவர்" (திருவாய் மொழி)

ஆஸ்ரம விதி.

ஆக்ஞ வல்கியர்.

శ్లో॥ చత్వారో బ్రాహ్మణస్యోక్తా, ఆశ్రమాశ్రుతిచోదితాం।
క్షత్రియస్యత్రయంప్రోక్తాః ద్వావేకో వైశ్యశూద్రయోః॥

தா :—வேதப்ரமாண ரீதியாக. பிராம்மணர்களுக்கு ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தம், வானப்ரஸ்தம், சன்னியாசம் என்கிற நான்காஸ்ரமங்கள் விதித்திருக்கின்றன. க்ஷத்திரியருக்கு சன்னியாசம் தவிர்த்த மூன்றும், வைசியருக்கு பிர்மசரியம் க்ருஹஸ்தமிரண்டும் சூத்திரருக்கு க்ரஹஸ்த தர்மம் ஒன்றுமட்டும் அவலம்பிக்க வேண்டுமென ஆக்ஞவல்கியஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனதினால் வர்ணாஸ்ரம தர்ம்மங்களை யாவரும் மீறி நடக்கக்கூடாது நடப்பாராகில் மேலான நரகவாசத்தையடைகின்றாரென்பதாக பாரதாதி கிரந்தங்கள் புகல்கின்றன.

சந்தியாவந்தனப் பிரகரணம்.

ப்ரபன்னன், நதி, தடாகம் கூவம் இவைகளில் காலாநுஷ்டானந் தீர்த்துக்கொண்டு, வெண்கலம், வெள்ளி, ஔதும்பரம் இந்த பாத்திரங்களில் ஏதேனுமொன்றில் தீர்த்தம் கொண்டு,

அகஸ்திய சம்மிதை.

శ్లో॥ గాయత్ర్యాం పూర్వముచ్చార్య, మూలమంత్రంతతోవదేత్ ।
సందేహానాంవినాశార్థం, యేతదర్ఘ్యం త్రయంచరేత్ ।
అర్ఘ్యందత్వాత్రయంసమ్యక్, సూర్యనారాయణంస్మరన్ ॥

சுலோகம்,

காயத்ரியாம் பூர்வமுச்சார்ய, மூலமந்த்ரம். ததோவதேத்
சந்தேஹா னும்விநசார்த்தம், யேததர்க்கியம்த்ரயம்சரேத்
அர்க்யம் தத்வாத்ரயம்ஸம்யக். சூர்யநாராயணம்ஸ்மரன்,
ஏகஸஸ்த்ரம்விநஸாய, ஏகவாஹனநாஸனே,
அசுராணும் விநஸார்த்தம்: ஏதமர்க்யம்த்ரயம் க்ஷிபேத்.

தா:—இந்த ஸ்லோகங்களின்படி சூரியனுக்கபி முகமாய் நின்று (கோஸ்ருங்கம்) பசுவின் கொம்பினுயர்த்தி யெவ்வளவோ அந்தப்பிரமாணமாகத்தனது கையையெடுத்தஞ்சலி செய்து தீர்த்தத்தையெடுத்து காயத்திரியின், மூலமந்திரத்தால் அபிமந்திரித்து, அசுரர்களும், அவர்களுடைய சஸ்திரங்களும், வாஹனங்களும், நசிக்கவேண்டு மென்னு முத்தேசத்தோடு அர்க்கிய ஜலத்தை பூமியிலாயினும் ஜலமத்தியிலாயினும் விழும்படியாக உயர்த்தி மூன்றுதரம் அர்க்கியம் விடவேண்டும்.

சுலோகம்.

காமக்குரோததததா மோஹாத், சந்த்யாதிக்ரமணே நச
ப்ராதர்மத்யேசஸாயான்ஹே, ப்ராயச்சித்தார்த்தமாசராத்.

தா:—காமக்குரோத லோபமோகமத மச்சரங்களால், திரிகாலக் கிரமமாக்ச் செய்யவேண்டிய சந்திவந்தன மானது, தவறிவிடுமாகில், காலதீத தோஷத்தைப் போக்கிக்கொள்ளப் பிராயச்சித்தம் செய்தமேல், அந்த சந்தியாவந்தனம் செய்யவேண்டும்.

சுலோகம்.

மத்கர்மகுர்வதாம்பும்ஸாம், கர்மலோபோபவேத்ய
தத்கர்மசேத்ப்ருகுர்வந்தி, த்ரிஸ்ர:கோட்யோமஹர்ஷய:.

தா:—வேத பாராயணம், கிரந்த காலக்ஷேபம், பெருமாள் புரப்பாடு, குருபணிவிடை, பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கர்யம். இவைகளைச்செய்து கொண்டிருக்கையில் சந்தியாகாலம் நேரிட்டு அவற்றைச்செய்யத் தவக்கப்படுமாயின், இவர்களுக்காக மூன்று கோடி ரிஷிகள் சந்திவந்தனம் செய்கிறார்களென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயமாக ஒருக்கால் பட்டரும் சாயித்திருக்கிறார், (குருபரம்பரை பார்க்க)

காயத்திரி மந்திரம் தெரியாதவர்கள், மூலமந்திரத்தினாலாயினும், த்வயமந்திரத்தினாலாயினும், சந்தியாவந்தனம் செய்யலாகுமென மேலோர் விதித்திருக்கிறார்கள்.

பிராணாயாமவிதி.

ஓம்பூ:, ஓம்புவ:, ஓம்சுவ:, ஓம்மஹ:, ஓம்ஜன:, ஓம்தப:, ஓம் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோதேவஸ்யதீமஹி தியோயோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோஜ்யோதீரஸோம் ருதம் ப்ரம்ஹ, பூர்ப்புவஸ்ஸுவரோம், என்று வலக்கையால் வலது காதை மூடவும்.

வலது கைகட்ட விரலால் வலநாசியைமூடி இடதுபுற நாசிகையால் சுவாசத்தை உள்ளிழுத்து பிறகு பவுத்திர விரலினால் இடது நாசியைமூடி சுவாசத்தை வுள்ளிழுத்து, பிறகு வலது நாசிகை வழியாகச் சுவாசத்தை வெளியிடவும். இதைப்போல வலது நாசி வழியாகச் சுவாசத்தை உள்ளேயிழுத்து, நிறுத்திப் பிறகு இடது நாசி வழியாக வெளியிட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு ரேசக பூரக, கும்பக மெனப்பெயர், பூரக ரேசகங்களுக்கு கால அளவுவொன்றே கும்பகத்திற்கு யிருமடங்காகும்.

பிராணாயாம காலத்தில் கண்பார்வையைப் புருவங்களுக்கிடையில் நிறுத்தி மனதை யிருதய கமலவாசியாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் வைக்கவேண்டும்.

குறிப்பு:—"மார்வ மென்பதோர் கோவிலமைத்து, மாதவ னென்னும் தெய்வத்தை நாட்டி" என்று ஆழ்வார் பாசுரம்.

"ஈஸ்வரஸ்ஸர்வபூதானும், ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி" என்று கீதாவாக்கியம்.

ஸ்ரீ பகவத் சன்னிதியில் செய்யுமபசாரங்கள்.

(1) வாஹன மீதிலேனும், பாதரக்ஷை, பாத குறடு இவைகளை தரித்தேனும் சன்னிதிக்குச் செல்குதல்.

(2) உத்சவ காலங்களில் பெருமானைச் சேவியாதிருத்தல்.

(3) எம்பெருமானுக்கெதிரில் ஆத்ம ப்ரதக்ஷணம் செய்குதல்.

(4) ஆசௌச முண்டாயிருக்கும்போது தண்டம் சமர்ப்பித்தல்.

(5) பெருமாளுக்கெதிரில் யோகபட்டை யணிந்திருக்குதல்

(6) தனிகராக விருந்தும் சங்கிரகமாககைங்கர்யம் செய்தல்.

(7) சன்னிதியில் சயனம் செய்குதல்.

(8) சன்னிதியில் புஜிக்குதல்.

(9) சன்னிதியில் கலகம் செய்குதல்.

(10) சன்னிதியில் தகாத வசனங்களை வசனித்தல்.

(11) சன்னிதியில் ரோதனம் செய்குதல்.

(12) சன்னிதியி லொருவரை நிக்ரஹித்தல்.

(13) ஒருவரை அநுக்ரஹித்தல்.

(14) ஸ்ரீகளோடு சரச சம்பாஷணைகளைப் பேசல்.

(15) சன்னிதியில் போர்த்துக் கொண்டிருத்தல்.

(16) பிறரை தூஷிக்குதல்.

(17) பகவத் சேஷமாகாத பதார்த்தங்களை புஜிக்குதல்.

(18) ஒரு கையூன்றி தண்டம் சமர்ப்பித்தல்.

(19) தாம்பூலம், சுருட்டு, பொடி, புகையிலைகளை உபயோகித்தல்.

(20) பெருமாளுக்கு பிருஷ்ட பாகத்தைக் காட்டி யுட்காரு தல்.
(21) தன்னுடைய குருஸ்துதி செய்யாமலிருத்தல்.
(22) தற்புகழ்ச்சி செய்து கொள்ளுதல்.
(23) தெய்வங்களை யிகழ்தல்.
(24) அந்தந்தக் காலங்களில் உண்டாகும் விசேஷமான கனி வர்க்கங்களைப் பெற்று ஆராதனம் செய்யாதிருத்தல்.
(25) சன்னிதியில் கடை வைத்து வர்த்தகம் செய்குதல்.
(26) அதிக இறைச்சலோடு பேசுதல்.
(27) அபான வாயுவை விடல்.
(28) சேஷமான பதார்த்தங்களை நிவேதனம் செய்குதல்.
(29) பெருமாளுக்கெதிரில் பிறருக்கு தண்டம் சமர்ப்பித்தல்.
(30) தகாத வார்த்தைகளை இரகசியமாகப் பேசுதல்.
(31) அநுசித கதைகளையும் பாட்டுகளையும் பாடுதல்.
(32) பரஸ்துதி செய்யல் முதலான குற்றங்களை தவிர்த்து சன்னிதியில் வர்த்திக்க வேண்டுமென்று புராணங் களில் செல்லப்பட்டிருக்கின்றது.

ஏகாதசி விரதம்.

శ్లో॥ ఏకాదశ్యాంనభుంజీత, కదాచిదపిమానవః।
యద్భుంజీతయోమోహేన, నరకేషునిమజ్జతి ॥

தா.—ஏகாதசியன்று எவ்வித காரணத்தைக் கொண்டு புஜிக்கக்கூடாது. ஆசையாலாயினும், அலக்ஷியமாயேனும் விரதத்தைத் தவிர்த்து யாவன் புஜிக்கின்றானோ அவன் நரகவாசம் செய்வான்.

சனத் குமார சம்மிதை.

శ్లో॥ ఏకాదశ్యాం మునిశ్రేష్ఠ, యోభుంజీన్మూఢ చేతసః।
ప్రతిగ్రాసమసౌభుంక్తే, కిల్బిషం శ్వాది విట్సమం।
నిష్కృతిర్మద్యపస్యోక్తా, ధర్మశాస్త్రే మనీషిభిః।
ఏకాదశ్యన్నకామస్య, నిష్కృతిః క్వాపినోదితా ॥

தா.—எவன் மூட ஹ்ருதயனாய் ஏகாதசி யன்று புஜிப்பானோ அந்த அன்னத்தின் கபளங்களெத்தனை யோ அத்தனை சங்கை யுடைய நரகங்களில், அழுந்தி, நாய், முதலான ஜெந்துக்களின் மலத்தை யுண்கிறான். மத்தியபானம் செய்தவனுக்கு சாஸ்திரத் தில் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஏகாதசியில் புஜித், தவனுக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை.

காத்தியாயன ஸ்ம்ருதி.

శ్లో॥ అష్టవర్షాధికో మర్త్యో, హ్యపూర్ణాశీతివత్సరః ।
ఏకాదశ్యాముపవసే, త్పక్షయోరుభయోరపి ॥

தா.—எட்டு வயதிற்கு மேற்பட்டு எண்பது வயதிற்குட்பட் டவர்கள் பிரதி மாதமும், சுக்கில கிருஷ்ண பக்ஷங்களில் வரும், ஏகாதசி விரதத்தை யநுஷ்டிக்க வேண்டும்.

శ్లో॥ వరం స్వమాతృగమనం, వరం గోమాంసభక్షణం ।
వరం చాపి సురాపానం, హరివాసరభోజనాత్ ॥

தா.—ஏகாதசி யன்று புஜித்தவன் மாத்ரு சங்கமம் செய்த வனுக் கொப்பாகின்றான். கோமாம்சம், சுராபானம், சாப்பிடுகிற மனிதனுடைய பாபத்தைவிட மேலான பாபத்தை யடைகின்றான்.

శ్లో॥ యాని కానిచ పాపాని, బ్రహ్మహత్యాది కానిచ ।
అన్నమాశ్రిత్యతిష్ఠంతి, సంప్రాప్తే హరివాసరే ॥

தா.—ஏகாதசி யன்று அன்னத்தை புஜிப்பவனுக்கு சமஸ்த தோஷங்களும், பிரமஹத்தியாதி பாபங்களும், சம்பவிக்கின்றன

హాని పరిత్యజ్య చండాలః కోటిజన్మసు ॥

தா.—என்று சொல்லப்பட்டிருக்கும் ஞாயத்தால், பிதுர்கர் மத்தை விட்டு விட்ட வுத்த மாஸ்ரி மிகளான மகான்களும் இந்த யேகாதசி விரதத்தை விட்டார்களில்லை. பிதுர்கர்மத்தை விட்ட வன் கோடி ஜன்மங்கள் சண்டாள யோனியில் ஜனிப்பானென்று சுருதிகளில் சொல்லப்பட்டிருப்பினும், பிதுர் தினத்தில் ஏகாதசி

வருமாகில் விரதத்தை யநுஷ்டித்து மறுநாள் பிதுர் திதி செய்ய லாகு மென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ద్వాదశ్యాం ముపవాసంస్యు, త్రయోదశ్యాంతు పారణం ||

என்று சொல்லிருப்பதால், ஏகாதசக்கித்தசமி வேதை யுண்டாகில், துவாதசி யன்று பவாசமிருந்து திரயோதசி யன்று பாரணை செய்யவேண்டும். துவாதசி திதி சுவல்ப நாளிகை யிருந் தால், அதனை ஸாத்தியத் துவாதசி என்று சொல்லி யிருக்கிறார் கள். இப்பேர்க்கொற்ற துவாதசி வரும் காலங்களில் அந்தத் திதி யிருக்கும்போதேபாரணை செய்யவேண்டுமென சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றய தினம் துவாதசி திதி அதிக நாளிகை யிருக்கும் பக்ஷத்தில், அதை மூன்று பங்குகள் செய்து முதல் பங்கு நாளி கையை விடுத்து இரண்டாம் பங்கு நாளிகைக்குள் பாரணை செய்ய வேண்டுமென பாத்மோத்திரத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. பின்னு மெவ்விதமான ஏகாதசியாயினும் பகவதாராதனம் செய்த பிரசாதத்தைப் புஜிக்கத்தட்டில்லை.

சாண்டில்லியர்.

సక • జపనిష్ఠానాం, దాంత్రాణాం మితభోజనమ్ ।
అచ్ఛిద్రదానశీలానాం నిత్యం, నాశ్చాద్వమలంభవేత్ ||

தா.—செவ்வையாக புஜிப்பவருக்கும், திடகாத்திர சரீர முடையோருக்கும், உபவாசமிருக்கச் சத்தி யிருக்குமே வொழிய சுவல்ப ஆஹாரம் புஜித்துச் சுகுமார சரீர முடையவராய் வாழ்ந்து வந்தவர்களுக்கு எப்படியுபவாச மிருக்க முடியும் உப வாச மிருந்தா லவர்களுடைய கதி யென்னவாகும். ஆனதால் சந் ததமும் ஜபதப சீலராய், சுவல்ப ஆஹாரமுடையராய், சகல ருக்கு மிதபோதகராய், சந்தி வந்தனாதிகளைக் கை விடாதவராய் நித்தியோப வாசிகளாய், இருக்கும் க்ருஹஸ்த தர்ம சீலருக்கு ஏகாதசி உபவாசம் தேவையில்லை என்பதாகச் சாண்டில்லிய மஹரிஷி சொல்லியிருக்கிறார்.

விருத்தர், பாலர், கர்ப்பிணிகள், நோயாளர், இவர்கள் தங்க ளுடைய பசிதணிய, பால், கிழங்கு வகைகள், தயிர், நொய்க்

கஞ்சி இவைகளை பகவதாராதனம் செய்து சாப்பிடலாகு மென் பதாக பாகவத புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

శ్లో॥ అగస్తీ తులసీచైవ, ధాత్రీఫలమథాచ్యుత ।
ద్వాదశ్యాం ప్రథమాహారత్వం, బ్రహ్మహత్యాంవ్యపోహతి ॥

தாது.—துவாதசியில் பாரணை செய்யும்போது முதல் கபளத்தில், அகத்திகீரை, நெல்லிக்காய், சுண்டைக்காய், மின்னை, மிஷ்டை, இவை போன்ற விரத சாகாதிகளைச் சாப்பிட வேண்டு மென்பதாகச் சில புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

நித்தியோபவாசிகளென்றது, அமிர்ததுல்லியமான பதார்த் தங்களாயினும், தேவாராதனம் செய்து தத் சேஷத்தைச்சாப் பிடுகிறவனை நித்தியோப வாசியென்று சொல்லியிருக்கிறது.

ஜயந்து விரதம்.

ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி, இவைகளைப் போன்ற விரதாதிகளின் தினத்தன்று உபவாசமிருந்து "உத்சவாம்தேது பாரணம்" என்று சொல்லி யிருப்பதினாலே, அந்த தினம் பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கர்யம் நடத்தி, தத்சேஷத்தை புஜிக்கும் தினத்திற்கு ஜயந்து பவாச தினமென்று பெயரா யிருக்கும்.

ஏக புக்தம்.

பிதுர், மாதுர், பிராதுர், இவர்களுடைய சிரார்த்த தினங் கள், திருநக்ஷத்திரங்கள், சைத்திரம், ஆஷாடம், ஆஸ்வீஜம், புஷ்யம், இந்த மாதங்களின் சங்கிரணம், சங்கிராந்தி, அமாவாசை, மஹாளிய திதிகள், இப்பேர்க் கொற்ற காலங்களில் பகவதாராதனமான பிரசாதத்தை புஜித்து இரண்டாவது புஜி யாமல் நியமத்தோடிருப்பதற்கு ஏகபுக்தமென்று சொல்லப்படு கிறது.

குறிப்பு.—தந்தை, தாயிருப்பினும் அமாவாசை யன்று (ஏக புக்தம்) ஒருபோது சாப்பிட்டுபவசிப்பதுத்தமமெனப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கிரஹணம்.

சூரியக் கிரஹணம், சந்திரக் கிரஹணம் பிடிக்கும்போதும், விடும்போதும், ஸ்நானம் ஆசரித்து தர்ப்பணம் செய்யவேண்டும்.

சுத்த மண்டல தர்சனமான மேல் விதிப்படி புனஹ தீர்த்த மாடவேண்டும்.

சூரியக் கிரஹணம், பிடிப்பதற்கு நான்கு ஜாமத்திற்குள்ளும், சந்திரக் கிரஹணம் பிடிப்பதற்கு மூன்று ஜாமத்திற்குள்ளும், கிரஹணம் பிடித்திருக்கும்போதும் புஜிக்கக்கூடாது.

குறிப்பு:---கிரஹணம் பிடிக்குமுன் சமஸ்த வஸ்துக்களிலும், திருத்துளாய், தருப்பை இவைகளைப் போட்டு வைப்பது வழக்கமாயிருக்கிறது.

ஸ்தல சுத்திக் கிரமம்.

பிரசவித்தயிடம், இறந்தயிடம், அசுத்தமான யிடம், இந்த ஸ்தலங்களில் உள்ள மண்ணை கொஞ்சம் மேலாக வெட்டி யல்லது செதுக்கி யெடுப்பதினாலும், அக்கினியிட்டு தஹித்திடுவதினாலும், வேறு மண் போடுவதினாலும், பசுவை ஒரு நாள் கட்டி வைப்பதினாலும், மெழுகிக் கோலமிட்டு, பஞ்சகவ்வியம், புண்யாஹவாசன தீர்த்தம் புரோக்ஷிப்பதினாலும் பரிசுத்த முண்டாகின்றன.

மலஜல விசர்ஜனம் செய்தவிடம் மெழுகிக் கோலமிட்டு பஞ்சகவ்விய தீர்த்தம் புரோக்ஷணம் செய்வ தால் சுத்தி யுண்டகும்.

மிலேச்சர், சண்டாளர், நீசர் இவர்கள் வாசம் செய்த வீடு, வேறு மண் போட்டு, மூன்று தினம் பசுவைக் கட்டி வைத்து, சுண்ணாம்பினால் சுத்தி செய்து பஞ்ச கவ்வியம் புரோக்ஷித்து புண்யாஹவாசனம், ஓமம் நடத்தி தீர்த்தம் புரோக்ஷணம் செய்துத தியாராதனமும் நடத்த சுத்தியடைகின்றன.

பின்னும் ஒரு மாதத்திற்குமேல் நீசர் வாசம் செய்த வீடு, 10-நாட்களும், இரண்டு மாதம் வசித்த வீடு, ஒரு பக்ஷமும்,

ஆறு மாதம் வசித்த வீடு, இரண்டு பக்ஷமும் பசுவைக் கட்டி வைத்து மேற் சொன்ன ஆசாரப்படிக்கு யாவும் நடத்த சுத்தி யுண்டாகு மெனப் பராசரசம் மிதையில் சொல்லப்பட்டிருக் கின்றன.

இரசாதி வர்க்க பாத்திர சுத்தி விபரம்.

எண்ணெய், நெய், பால், தையிர், தேன். உப்பு, வெல்லம், சர்க்கரை, பாக்கு, கற்பூரம், சாம்பிராணி, இனியுமிவைகள் போன்ற சம்பாரங்கள், உத்திர வாக்கிய மந்திர தீர்த்தப் புரோக்ஷணத்தினலும், தங்கள் தங்கள் மதா சார மந்திரோபதேசத் தாலும், திருத்துளாய், தற்பை, இவற்றில் சம்பந்தப் படுத்தி வைத்திருப்பதினலும், சுத்தியடைகின்றன. மேற்படி பதார்த் தங்களை வைத்திருக்கும் பாத்திரங்களை 15 தினத்திற்கோர் முறை அனலில் காட்டி, சூரியஸ்பரிசம், வாயுவின்ஸ் பரிசம் படும்படி செய்வதினலே சுத்தியுண்டாகின்றன.

சுவர்ணம், இரஜிதம், சங்கம், தாரு தந்த பாத்திரங்கள். பிரம்பின் பாய், கூடைகள், இயாக பாத்திரங்கள், இரத்தின பாத்திரங்கள், கிழங்கு, சாகங்கள், கரிய முதுகள் மற்றுமிவை கள் போன்ற யாவற்றும் சுத்த ஜலத்தால் அலம்புவதால் சுத்தி யடைகின்றன.

கல்லை மற்றொரு கல்லால் தேய்ப்பதாலும், மண் பாண்டங் களை சூளை போடுவதாலும், சுத்தியுண்டாம்.

மரப்பாத்திரம், கொம்புப் பாத்திரமிவைகளைச் சீவுவதால் சுத்தியடைகின்றன.

ஈயம், இரும்பு, வெங்கலம், தாம்பிரம், பித்தளை, இந்தப் பாத்திரங்களில் சாப்பிட்ட எச்சல், தோஷம், தீர நெருப்பிட்டு சாணம், புளி, சாம்பல் இவற்ருல் துலக்கி சுத்த ஜலத்தால் அலம்ப தோஷம் நீங்கும்.

தங்கம், வெள்ளி, இரத்தினம், இந்த பாத்திரங்களுக்கு தோஷ முண்டாகில், சர்க்கரை, சுண்ணும்பு, சாணம், இவை களால் துலக்கி சுத்த ஜலத்தா லலம்பிவிட சுசியாம்.

நதி, குதிரை, ஆடு, மாடு, மாதர், வேதியர்; சுத்தி.

காசிகாண்டம் "கவி"

பொங்குளைப் புரவியாடி வற்றினுக்குப்
புனிதமாம் முகம்பசுவினுக்கு
தங்கு பிற்புறமே புனிதமந்தணர்க்கு தாளிணை
புனிதம் வேனெடுங்கண்
மங்கையர்க்குடலம் முழுவதும் புனிதம்
வருநதி வெண்கலம் செம்பு
துங்கமாம்புளியால் சாம்பலால் பெருக்கால் தூய்மையா
மென்பர் தூய்துணர்ந்தோர்.

தா :—குதிரை, ஆடு, இவற்றிற்கு முகம் சுத்தி, பசுவிற்கு பிரஷ்டபாகம் சுத்தி, வேதியருக்கு பாதங்கள் சுத்தி, நதிக்கு. பிரவாகத்தால் சுத்தி, வெண்கலத்திற்கு சாம்பலால் சுத்தி, தாம்பிரத்திற்கு. புளியால் சுத்தி இவைகள் ஒன்றின்றியே மாதருக்கு அங்கமுற்றிலும் சுத்தியாயிருப்பதாகச் சொல்லப் பட்டிருப்பதை ஆன்றோர் கவியாலுணர்க.

மலம், ஜலம், இரத்தம், பிரேதம், இச் சேர்க்கையடைந்த, தாம்பிரம், வெண்கலம், பித்தளை, ஈயம், இரும்பு, இந்த பாத்திரங் களை உருக்கி வார்ப்பதாலும், சாணை பிடிப்பதாலும், அக்கினியிற் காய்ந்தெடுப்பதாலும், விதிப்படி துலக்குவதினாலும் சுத்தி யுண்டாகின்றது.

வெண்கல பாத்திரம், தாம்பிர பாத்திரம், சன்னிதிபாத்தி ரம் இவைகளால் பாதப்பிரக்ஷாளனங், குதப்ரக்ஷாளனம், வாயலம்பல், செய்யக்கூடாது.

நார்மடிகள், பட்டு, நூதனவஸ்திரம், படுக்கை, பெட்டி, பேழை, கம்பளம், சாலுவை, இவைகள் சுத்தி விவரம்.

பராசர :—மூங்கில், பனையோலை, தென்னம் ஓலை, விசிறி, கூடை, பெட்டி, பேழை, வகைகளுக்கும், நார்மடி, வெண்பட்டு, சிகப்புப்பட்டு, கம்பளம், சாலுவை, படுக்கை சாமான்கள், இவைகளுக்கு சுவல்பதோஷம் நேரிட்டால் மந்திராவாகன தீர்த்தப் புரோக்ஷணத்தால் சுத்தியுண்டாகின்றது.

மேற்படி சாமான்களுக்கு நீசாள்பரிசம், ம்ருதர சௌசம், ஜனன சௌசம், ஏற்பட்டால், உழமண்ணி, பூச்சிக்கொட்டை பச்சைப்பயர், இவைகளைப் போன்ற ஒன்றை அரைத்து ஜலத்தில் கலக்கி அதில் ஏற்ற சாமான்களை நனைத்து மறுநாள் துவைத்து காய்ந்துவிடில் சுத்தியுண்டாம். துரோணமளவுள்ள நெல், மற்ற தானியங்கள், இவைகளுக்கு, சண்டாளர், பஷ்டிமாதர், பிரசவஸ்ரீகள், பிரேதம், இவர்களுடைய ஸ்பரிசமுண்டாகில் மந்திரோச்சாரண தீர்த்தம் புரோக்ஷிக்கில் சுத்தியடைகின்றது.

ஜலாசயத்தின் சுத்திக் கிரமம்.

கூவம், குளம், குட்டை, நடைகிணறு, பொய்கை, சரஸ்ஸு இவைகளுக்கு சண்டாளர் ஸ்பரிசம் நேரிடுமாகில், (100) குடம் ஜலத்தை எடுத்துக் கொட்டிவிட்டு சம்புரோக்ஷணை செய்தால் சுத்தியுண்டாகின்றது.

மனிதர், மிருகம், பக்ஷிகள் இவைகளிறந்து விட்டால் கிணத்து ஜலத்தை முற்றும் நீக்கி அக்கினி, வாயு, சூரியன் இவர்களுடைய ஸ்பரிசம் படச்செய்து பஞ்சகவ்விய சம்புரோக்ஷணாதிகள் நடத்தி பகவதாராதனம் * பாகவதாராதனம் நடத்தி ஸ்ரீபாத தீர்த்தம் புரோக்ஷிக்க சுத்தியாகும் முதல்நாள் கொணர்ந்த தீர்த்தத்திற்குப் பர்யுஷித தோஷமுண்டாகின்றமையால், பகவதாராதனத்திற்கு பயுக்தமாகமாட்டாது.

குறிப்பு:—* பாகவதராவார்-

శ్లో॥ అర్థపంచకతత్త్వజ్ఞా, పంచసంస్కార సంస్కృతా।
ఆకారత్రయసంపన్నా, ఇతిభాగవతాశ్శ్రుతాః॥

தா:—என்றமையால் அர்த்தபஞ்சகஞான முள்ளவரும், பஞ்சசமஸ்காரம் பெற்றவரும், ஆகாரத்ரயவிவரணம் அறிந்தவரும், பஞ்சகாலவநுஷ்டான முடையவருமான மகான்களெவரோ அவரே பாகவதராவர்.

ஆஹார நியமம், அல்லது ஆஹார நியதி

மோக்ஷா பேக்ஷையையுடைய சேதனனுக்கு ஆஹாரநியதி அவஸ்யா பேக்ஷிதமாகவும், ஆநுவர்த்தனநியதி, சஹவாசநியதியிவைகளிரண்டு மதற்கு அனுகுணமாகவு மிருப்பதால் இந்த

மூன்று நியதிகளையும் தவறாது அநுஷ்டிப்பவரெவரோ அவரை ஆஹாரநியம முடையவரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1-வது ஆஹார நியதியில், ஜாதிதுஷ்டம்

ஆஸ்ரயதுஷ்டம், நிமித்த துஷ்டம் என மூன்று பிரிவுக ளுண்டு. இதில்ஜாதி துஷ்டமாவது·

శ్లో॥ లశునం మత్స్యమాంసాని, మూలకం గృంజనంతథా
తిలపిష్టం తథాశిగ్రుం, బిల్వంకో శాతకేంతథా
అలాబుం శ్వేతవార్తాకం, విడ్వనీకం తథైవచ
ఏవమాదీని భక్ష్యాణి, శాస్త్రదుష్టాని యేనరాః
ఖాదంతి తేనరాయాంతి, విణ్మూత్రం క్రిమిభోజనం॥

சுலோகம்.

லசுனம் மத்ய மாம்சானி; மூலகம்க்ரும் ஜனம்ததா
திலபிஷ்டம் ததாஸிக்ரும், பில்வம் கோசாத கிம்ததா
ஆலாபும்ஸ்வேத வார்த்தாகம், விட்வநீகம் ததைவச
ஏவமாதீனி பக்ஷயாணி, ஸாஸ்த்ர துஷ்டானியே நரா:
காதம்திதே நராயாம்தி விண் மூத்ரம் க்ரிமிபோஜனம்.

என்று சொல்லப்பட்டிருப்பதால், வெள்ளைப்பூண்டு, வெங்காயம், மது, மாம்சம், முள்ளங்கி, காளான், பிண்ணுக்கு, பீர்க்கம் காய், சுரைக்காய், குறும்புடல், வெள்ளைக்கத்திரி, மரத்திலுண்டாகும் காளான், சிகப்புமெழுகு, முருங்கை, முட்டகோசு, மச்ச வகைகள், பனைவெல்லம், இனியுமிவைபோன்ற நிஷித்த பதார்த்தங்களை ஜாதி துஷ்டமென்று சாஸ்திரம் சொல்லுவதால் பிரபன்னன் நீக்கத் தக்கதா யிருக்கிறது.

శ్లో॥ ఆహారసుద్ధౌ స్త్వసుధిః, శత్వాత్వంజాయతేజ్ఞానం॥

என்று பிராமாணமிருப்பதால், ஞானத்தையும், வர்ணாஸ்ரமத்தையும், கௌரவத்தையும், போக்கக்கூடியதும், தூஷணைக்கு யேதுவானது மான நிஷித்த தாமத பதார்த்தங்களை பற்றற நீக்க வேண்டியது ஆவசியகமாயிருக்கிறது.

2-வது ஆஸ்ரயதுஷ்டமாவது.

பதிதர்களாலும், சண்டாளர்களாலும், அபிமானிக்கப்பட்டதும், தூஷிதங்களானதுமான பதார்த்தங்களைப் பெற்றுக் கொள்ளாமல் த்யஜிப்பது.

3-வது நிமித்த துஷ்டமாவது.

சிரார்த்தாதிகளாலும், மந்திர எந்திரங்களாலும், சாந்தி, சகுண, பிராயச்சித்த பௌரோஹிதங்களாலும், வைத்திய, ஜோதிட, வருமானங்களினாலும் வரப்பட்ட சம்பாத்தியங்களைக் கொண்டு ஜீவித்தல் நிமித்த துஷ்டமென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் இவைகள் போன்றனவும் த்யஜிக்கத் தக்கவைகளாம்.

பின்னு மாஹாரநியதியிலும் மூன்று பிரிவுகளுண்டு.

எவையெனில், ஆஹாரநியதி, அநுவர்த்தனநியதி, சஹவாச நியதி, என மூன்று.

1-வது ஆஹார நியதியாவது.

கேசோச்சிஷ்டம், ஆபக்ருஷ்டம், ஸ்பர்சதுஷ்டம், என்று சொல்லப்பட்ட மூவகை குற்றங்களையும் நீக்கியுண்ணல்.

2-வது அநுவர்த்தன நியதியாவது.

ஆர்ஜிதத்தின் பொருட்டு அரசர்களுடையவும், உத்தியோகஸ்தருடையவும், பந்த சமுசாரிகளுடையவும், தயவுக்கெதிர் பார்த்தும், அவர்களிடம் சேவை செய்தும், அதிர்ஷ்டம் கர்மாதீனமென்று நினைக்காமல் தனார்ஜன யிச்சையுடையராய் சத்சங்க நிக்ரஹராய் தேவதாந்திர மந்திரார்த்தங்களையுடைய ஆசாரியர்களை நிக்ரஹித்து வர்த்திப்பவர் எவரோ, அவரை அநுவர்த்தன நியமமுடையவரென்று சொல்லப்படுகிறது.

3-வது சஹவாச நியதியாவது

தேஹாத்மாபிமானங்களையும், தேவதாந்திர பிரயோஜனாந்திர, சாதனாந்திரங்களையும், சுவதந்திர குணமுடையோர்களையும், பிரதிகூலர்களையும் காணில் கொடிய சர்பத்தைக்கண்டு பயந்தோடுநர்போலிவர்களை விட்டு நீங்கி சத்சம்பிரதாய சீல ஆரியனை

யடைந்து அவனுடைய நிழலில் ஒதுங்கி வர்த்திப்பவரை சஹவாச நியதியுடைவரென சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையாலித் தியாதி நியதிகளுடன் கூடின ஸ்ரீ வைணவன் தன் க்ருஹத்திற்கு வந்த அதிதிகளைச் சோடசோபசாரம் செய்து பூஜித்து ஆசனத் திருத்தி ஸ்ரீ பாத தீர்த்தம் ஸ்வீகரித்து எம்பெருமான, முது செய்த பகவத் ப்ரசாதத்தை பரிமாறி பந்து மித்திர புத்திரர்களை யும் பூஜிக்கும்படி செய்து பிறகு தான் புஜிக்க வேண்டும்.

இங்ஙனமாக ஆஹார நியம சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்க தத்கால வைணவர்கள் சிலர் முண்டனம் செய்து கொண்டும், சிலர் சிகை வைத்துக் கொண்டும், கர்ணங்களில் சங்கு சக்கிர கடுக்கன் தரித்துக் கொண்டும், கழுத்தில் கனக்க நளினுக்ஷ துளப மணிகளை யணிந்து கொண்டும், பஞ்சகச்ச பட்டுக்கறை காஞ்சியுர தோவத்திகளணிந்து கொண்டும், தசத்வி புண்டரதாரிகளாய், எனக்கு நாலாயிரம் வரும், ஐயாயிரம் வரும் என்று சொல்லிக் கொண்டு பௌண்டர வாசுதேவனைப்போலும், இராவண சன்னியாசியைப் போலும், பகல் வேஷக்காரரைப் போலும், பாவனை காட்டி வேஸ்யாலங்காரராய் பிறர் பொருளி லிச்சை வைத்து கேட்போர் மயங்கும்படியான காலக்ஷேபங் களைச் சொல்லி வயப்படுத்தி சம்பாவனைகளையும், சம்பாரங்களை யும் சம் ருத்தியாகப் பெற்று தனியிட மமர்த்திக் கொண்டு, அபேயபான அபக்ஷயாபக்ஷியங்களில் விசேஷ யிச்சையுடைய ராய், ஸ்வஜாத்யாபிமான மற்றவர்களாய், ஸ்வபோஷகராய், சத்வ சூன்யராய், பரதார கமனராய், ஆஷாட பூதிகளாய், ஆசார்யோப தேச நிக்ரஹராய்ப் போலிவைணவராய், அறைக்குள்ளும், திரைக் குள்ளும் இருந்து வயர்புடைக்க வுண்பவர்கள் ஆஹார நியம முடையோர் ஆகமாட்டார்கள்.

இன்னுருடைய அன்னம் புஜிக்கத்தகாது

பகவதாராதன மில்லாதவர் வீட்டன்னம், குஷ்டரோகி யினன்னம், பொய் பேசுவோனுடைய அன்னம், குலத்துரோகி களன்னம், குருத்துரோகியன்னம், குலப்பிரஷ்டன், கோள் சொல்லுவோன், குருக்கள், திருடன், மதுபானி, மாம்சபக்ஷணி புத்திர ஹீனன், கிராம புரோகிதன், சிவத்விஜன், விஷமிடுவோன், பஞ்ச மகா பாதகன், விபசாரி, குண்டகன், கோளகன், இவர்

களுடைய அன்னத்தையும், ஆஹார நியமமில்லாமல் செய்த அன்னமும், நாய், சூத்திரன், ரஜஸ்வலை, இவர்களுடைய வீக்ஷண மான அன்னமும் புஜிக்கத்தகாது.

பர்யுஷித தோஷவிதி

ஒரு நாளைக்குச் செய்த பதார்த்தங்களை மறு நாளுமுப யோகித் தலுக்கு பர்யுஷித தோஷமென்று பெயர்:

శ్లో॥ అన్నం పర్యుషితం భోజ్యం, స్నేహాక్తం చరసంస్థితం
అస్నేహా అపిగోధూమా, యవగోరస విక్రియాః ॥

தா.—காலாதீதமான எண்ணெய், நெய், நெய் சம்பந்தமான ப்ரசாதம் கட்டமுது, இவைகள் மறு நாளும் சாப்பிடத்தக்கது. நெய், எண்ணெய் இவற்றின் சம்மந்தமில்லாதிருப்பினும், கோதுமை மாவு, பால், தயிர், மோர், காய் வகைகள், பலஹா ராம், பருப்பு, புலகம், பால் சம்பந்தமான வஸ்துக்கள், பாயசம், தயிரிஞல் கலந்த மாப்பண்டங்கள், அவல், வற்றல்கள், ஊறு காய்கள், மற்றுமிவைகள் போன்றவற்றிற்கு பர்யுஷித தோஷ மில்லை.

தாம்பிர பாத்திரத்தில் வைத்த தேன், பால், இவைகளுக்கு தோஷமுண்டு.

உப்பு சேர்ந்த பால், நெய், இவைகள் மதுவுக்குச் சமமாகை யால் நீக்க வேண்டும்.

பாநு வாரம் பகலிலும், இரவிலும், சப்தமி பகலிலும் நெல் லிக் காய் சாப்பிட்டால் மூதேவி வாசமுண்டாகுமென்று சாஸ் திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

போஜன விதி

శ్లో॥ ప్రక్షాళ్య పాదవాచమ్య, శుచిర్మౌనీ సమాహితః
బంధుభిః పుత్రభృత్యైర్వైవ, స్వయాభుంజీతసాదరః
పవిశ్య సనేరమ్యే, ప్రాగ్వా ప్రత్యఙ్ముఖోపివా ॥

சு.—ப்ரக்ஷாள் யாபாதவாசம்ய ஸுசிர் மௌனேஸமாஹித: பந்துபி: ப்புத்ர ப்ருத யௌத்வை, ஸ்வயாபும் ஜீதசாதா: உப விஸவாஸனேரம்யே, ப்ராங்வாப்ரத்யுன் முகோபிவா.—

தா.—ப்ரபன்னன் ஸ்வீகரிக்கு முன்பு அஸ்த பாதங்களை சுத்திசெய்து கொண்டு, இரண்டு தரமாசனம் செய்து, சுசியாய், மௌனியாய், சமாஹிதனுய், பந்து, மித்திர, புத்திர, அதிதி, ப்ருத்தியாளுடன், கிழக்கு, அல்லது தெற்கு முகமாக மணையின் பேரில் உட்கார்ந்து ஸ்தல சுத்தியானயிடத்தில் பரிமாரிய பகவத் சேஷமான தளிகையைப் பிராணு குதி செய்து அமிர்ததுல்லிய மாக நினைத்துப் புஜிக்க வேண்டும்.

புஜிக்கும்போது த்யஜிக்க வேண்டிய விஷயங்கள்

ஆபாரம், கால் சட்டை, தலைப்பாகை, போர்வை, ஒற்ற வஸ்திரம், இவைகளோடு சாப்பிடக்கூடாது. தலைவிரித்திருத்தல், கால் நீட்டி யுட்கார்ந்திருத்தல், கால்களை தரையில் வைத்துட்காந்திருத்தல், கையூன்றி யிருத்தல், சயனித்திருத்தல், நாற்காலியிலமர்ந் திருத்தல், பெஞ்சு, மேஜை, இவைகளிலிருத்தல், சாப்பிடும் பாத்திரங்களை மடியின் மீது வைத்துக் கொள்ளல், வலது கையால் எடுத்து இடது கையில் வைத்து சாப்பிடல் முதலான குற்றங்களை தவிர்த்துப் புஜிக்க வேண்டும்.

பஞ்ச சமஸ்கார மில்லாதவன் வீட்டன்னம், ஒருவர் சாப்பிட்டு மீந்தன்னம், தீபமணைந்த பின் மீந்தன்னம், மயிர், கல், புழு, மண், உமி, இவைகள் சம்மந்தப்பட்டன்னம் புஜிக்கக் கூடாது. ஆபோசன தீர்த்தம், பாயசம், நெய், பால், தயிர், இவற்றை சப்த முண்டாகும்படி சாப்பிடக் கூடாது. ஒருவர் சாப்பிட்டு மீந்த ஜலத்தை கொள்ளக் கூடாது. சந்திரனுடைய வெளிச்சத்தில் சாப்பிடக் கூடாது. இரண்டு கைகளாலும் புஜிக்க கூடாது. ஒருவர் ஊற்றும் ஜலத்தில் வாயாலேற்றலும், இழ நீரை வேறு பாத்திரத்திலூற்றிக் கொள்ளலும், இரண்டு கைகளாலும் வாரி ஜலத்தைக் கொள்ளுதலும், இரும்புச் சட்டி, பித்தளை பாத்திரம், வெங்கலப் பாத்திரம், மண் பாத்திரம், மரப் பாத்திரம், பீங்கான் பாத்திரம், இவற்றுள் சாப்பிடுதலும் கூடாது.

* பானீயம், பாயசம், உப்பு, பக்ஷணம், இவைகளை ஒருவர் கையால் கொடுப்பினும் தன் கையால் வாங்கி சாப்பிடக் கூடாது.

க. சங்கு சக்கிரம் திருமண்பிம்பங்கள் செதுக்கிய பாத்தி ரங்களினால் ஜலம் சாப்பிடக் கூடாது.

அமிர்ததுல் லியமான போஜனமாயினும் முக்கால் வயிற் றுக்கு மேல் சாப்பிடக் கூடாது.

சாப்பிடும்போதும், சாப்பிட்ட பின் கை சுத்தி செய்யு முன் னும் சூத்திரரிடம் பேசுதல் கூடாது.

சாப்பிட்ட பின்பு ஆரோக்கிய சாஸ்திரப்படிக்கு காய்ச்சிய நீரையே சாப்பிட வேண்டும்.

சாப்பிடும்போதும் சாப்பாட்டின் முன்னும் அதிகமாக நீரைக் கொள்ளுதல் கூடாது. இவ்விதமான குற்றங்களை நீக்கி போஜனம் செய்ய வேண்டுமென யாக்ஞவல்கியர் சொல்லி யிருக் கிறார்.

* குறிப்பு — பானீயம், பாயசம், இவற்றை ஓர் பாத்திரத்தில் ஊற்றிக் கொடுக்க வேண்டும். உப்பு, பக்ஷணம், இவைகளை யிலை யில் பரிமாற வேண்டுமல்லாமல் கையில் கொடுக்கக் கூடாது.

ஸ்ரீ தர்மம்

குலதர்மம் தவறாது நடந்து கொண்ட உத்தம பதிவிரதை களான, நளாயினி, மண்டோதரி, திரௌபதி, சந்தியாவல்லி, சந்திரமதி, சாவித்திரி, அருந்ததி முதலான ப்ரபன்னைகளான ஸ்த்ரீகளின் குண விசேஷங்களை யிவ்விடம் எடுத்து தஹரிப்பதா லிவிற்கு ஸ்ரீ தர்மமென்று சொல்லப்படுகிறது.

குலதர்மபத்நியின் செயல்கள்

நீதி-சா.—கார்யேஷு தாசி, கருணேஷு மந்த்ரி ரூபேஷு லக்ஷ்மிர க்ஷமயாதரித்ரி போஜ்யேஷு மாதா, சயனே சுவேஸ்ய ஷட்கர்ம நாரி குல தர்ம பத்னி.—

தெய்வந் தொழாள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை,
சிறை காக்கும் காப்பெவன் செய்யு மகளிர்,
நிறை காக்கும் காப்பேதலை

கொழுநனுண்டபின் தானுணுங் கொள்கையும்
விழிதுயன்ற பின்றுஞ்சலுமேயவர்
எழுதல் முன்னு மெழுதலும் பண்புடை
புழுதில் கற்புடை பாவையார்க்கென்னவே.

அரியகற்பினி லாழ்ந்துள மாதர்கள்
உரியகேழ் வருவப்ப முன்னெய்துவர்
பிரியும் காலையில் பெய்க லனியாவையும்
ஒருவிமாசுட னுண்டிட வைகுவார்.
பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலும் கூடியிருக்கலாம், சற்றேனும்
ஏறுமாறாக யிருப்பாளே யாமாகில்
கூறாமல் சன்யாசம் கொள்.

என்று அனேக பிரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கிற படிக்கு க்ருஹணி யென்ற தர்மபத்தினியான ஸ்ரீ தன் பர்த்தா, மாமன், மாமி, இவர்களுடைய பணி செய்யும்போது பணிந்து நடக்கும் வேலைக்காரியைப் போன்றும், அரசனுக்கேற்ற யிதோப தேசங்களையும் த்ரிகால வர்த்தமானங்களையு மறிவிக்கும் அமாத் தியனைப்போல தன் பர்த்தாவுக்கு யோசனை சொல்வதில் மந்திரி யைப் போன்றும், உருவிற் சிறந்த திருமகள் போலும், பெருமை யில் பூபிராட்டியைப் போலும், பர்த்தாவுக்குச் சாதம் பரிமாறு கையில் தனயனுக்கு தாய் எவ்வித வுபசாரணைகள் சொல்லி ஊட்டி வைப்பாளோ அவ்வண்ணம் செய்பவளாயும், சயனகாலத் தில் விலை மாதானவள் விடனோடு கூடி ரமிக்கச்செய்து அவனுக்கு இன்ப சுகத்தைக் கொடுத்துத் தானுமானந்தமென் னும் பெருவாரியி லாழ்ந்திருத் தலைப்போன்ற இவ்வறு குணங்க ளுடைய மாதரெவரோ அவர்களைத்தான் குலதர்மபத்தினி யென்று சொல்லப்படுகிறது.

பின்னும் (பதியையே) கணவனையே தெய்வமாகக்கொண்டு அவனுடைய கைங்கரியங்களிலே சதா ஈடுபட்டு நடக்கும் மாத ருக்குத் தனிமையாக ஜப, தப, மந்திரவிரதாதிகள் ஒன்றும் தேவையில்லை யென்பதாகவும் அத்தாலவளுக்கு பதிவிரதை யென்று நாம முண்டாயிற்றென்றும், அவள் நினைத்தயாவும்

கைகூடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மாதர்கள் தங்களுடைய கற்பென்னும் சிறைச்சாலையை யடைந்து மானத்தைக் காத்துக்கொண்டிருக்கின்றாரேயன்றி கணவராலும் பிறராலும் ஏற்படுத்தப்பட்ட காவல் சிறையால் கட்டுண்டு நடக்கிறாரில்லை. தம் கணவர் சாப்பிட்ட சேடத்தை புஜித்தலும், சயனித்த பின் சயனித்தலும், எழுமுன் எழுதலும், அவரைப் பிரிந்திருக்கும் காலம் அணிபணிகளைப் பிரிந்திருத்தலும், பழுதில்லாக் கற்புடைய பாவையர்க் கழகாம். மேலும் கற்பிலக் கணமுடைய கன்னியர்களின் செயலை விரித்துரைப்பின் கண்ணியமான குலத்துற்பவித்தவளாய் கோகனகை போன்ற ரூபலாவண்ணியமுடையவளாய், குணக் கிராஹிய முள்ளவளாய் கோதையர் போற்றும் குலதிலகமாய், கொஞ்சும் கிளிமொழியுடைவளாய், குரு, பந்து, மித்திரர்களின் பணிவிடையில் சிரத்தையுள்ளவளாய் அஹிம்சாதர்மவதியாய், அகஹங்கார மமகார மற்றவளாய், அனுதாக்ஷியாய், அழுக்காறற்றவளாய், ஐம்புலனடக்கவல்லளாய் அமிர்தவசனமுள்ளவளாய், பகலுறக்கம் கொள்ளாதவளாய், பரபுருடருடைய முகம்பாராதவளாய், பகுத்தரிவுள்ளவளாய், பக்தியிற் சிறந்தவளாய், அங்கப்பழுதிலாதவளாய், துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் இதமுடையவளாய், நகைமுக முற்றவளாய், நல்லிணக்கமுடையவளாய், நவதானிய சம்பாரங்களை அந்தந்த காலத்தில் சேகரித்துப் பாதுகாப்பவளாய், பர்த்தாவின் காலோசிதமாய் நடக்குங் காரியவாதியாய், கணவனுக்கு ப்ரீதியான கரியமுதுகளைச் சித்தப்படுத்திப் பரிமாறும் சுதந்திரமுடையவளாய், மிதபாஷியாய், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற நாற்குணத்தினும் சிரேஷ்டியாய், அன்னையின் க்ருஹத்திற்கும், அயல்வீட்டிற்கும் அடிக்கடி அகாரணமாய்ச் செல்லாதவளாய், சோம்பலில்லாதவளாய், அன்னம்போன்ற நடையுடையவளாய், புறங்கூறாதவளாய், பொய்பேசாதவளாய், பிறர் பொருளிலிச்சை வைய்யாதவளாய் புத்திரபாக்கிய சந்ததியிற் பிறந்தவளாய் க்ருஹச் சித்திரங்களை பிறருக் கறிவியாதவளாய், கெம்பீர குணமுடையவளாய் கேள்வி முயற்சியுடையவளாய், கேட்கப் பிரியமுடைய பெயருள்ளவாய், அற்பச்செயலுக்கழாதவளாய், அன்னியருடைய துயரம் சகியாதவளாய்,செம்பட்டை மயிரில்லாதவளாய் மிதசரீரமுடைய

வளாய், மிருது பாஷியாய், வித்தை கற்றவளாய், சங்கீத வித்வத்தையுடையவளாய், வினோதரச பாஷைகளில் தேர்ச்சியுடையவளாய் வேதபாஹ்யருடைய சஹவாசத்தை விரும்பாதவளாய், "புல்லுகாதலர் ஆயுள் பொலிவுற,, மல்லலோங்கிட மஞ்சளணிவராய், உள்ள நீதிநெறி தவறாமல் நடக்கின்ற ஸ்ரீகளைத்தான் தர்ம பத்தினிகளென்று சொல்வது. இது விசேஷமாக எழுதப்புகின் கிரந்த விஸ்தரபீதியாலிமட்டில் சுருக்கி எழுதலாயிற்று. "பேய் கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ளலாகாதே" ஸ்ரீணும் ப்ரத்யக்ஷராஜஸம், என்றும் சொல்வதினாலே விவாஹம் செய்யு முன்னரே ஆராய்ச்சி செய்து சாமுத்திரகா சாஸ்திரத்திற்கும் மேலே சொல்லப்பட்டிருக்கும் குணாதிசயங்களுக்கும் ஒற்றுமையான மாதர்களை மணம் புணர்தல் உத்தமம், உத்தமம், உத்தமம்.

குறிப்பு:—வரர்களுடைய ஆயுள் நீடித்திருந்தல் வேண்டி மாதர்கள் மாங்கில்யத்திற்கும், முகத்திற்கும், பாதங்களுக்கும் முன்பு மஞ்சள் காப்பணிந்து மேற்படி நீரைசிரசில் புரோக்ஷித்துக் கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டுமென்று விதியேர்ப்பட்டிருக்க தற்கால நவீன நாகரீகமுடைய மாதர்கள் விதந்துகள் போல மங்களகரமான அரித்தி ராவை நீக்கி சோப்பையுபயோகித்துவருவது சுகமல்ல, சுகமல்ல, சுகமல்ல.

அக்ர வர்ணத்தில் பிறந்த சிலமாதர்கள் கச்சம் போட்டுக் கட்டவேண்டுமென்னும் விதியிருக்க நீச மாதரைப்போல கட்டிக்கொள்ளுதல் மதாசாரவிருத்தமென்றும், படிதாண்டில் பர்தாவுக்கு ஆணிவரு மென்றும், அவர் கைச்சல மானது மது சமான மென்றும் மநு நீதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வித துற் சரிதமுடைய பெண்களை திருத்தாவிடில் அவர்களால் ஏற்படும் பாப சம்பந்தமானது புருடரையடைதலால், சத்சரிதத்தை யநுஷ்டிக்கச் செய்தலே புருடருடைய கடமை யாகும்.

"கூழானாலும், குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கியுடுத்து" என்று பழமொழி யிருக்க ஜலாசயத்தின் சமீபத்திலிருக்கின்ற ஜனங்கள் கூட யிம்முறையை யநுஷ்டியாமல் நீச மாதரைப்போல நடக்கிற பெண்களையும், அவர்களை யாட்

கொளும் புருடரையும் மூத்தாளநுசரிப்பதல்லாது, ஞான சூனியமும் ஆயுள் க்ஷீணமும் உண்டாகுமென்று இதிஹாச புராண மாகிய பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

விதந்துகள் விஷயம்

காந்தனையும், காம சுகத்தையுமிழந்திருப்பவரை விதவைகளென்று சொல்லப்படுகிறது.

இவர்கள் ப்ராதக் காலத்தி லெழுந்து பகவத் பாகவதா சாரியர்களுக்கு ப்ரணமம் செய்து குருபரம்பராதி தனியன்களை யநுசந்தானம் செய்து, ஜலாசயஸ் தானங்களுக்கேகிச் சௌசாதிகளை விதிப்படி முடித்து சிரஸ் ஸ்நானம் செய்து நெற்றிக்கிட்டு ஆசாரியோபதேச மந்திரங்களை தியானித்து க்ருஹத்திற்கு வந்து, பகவதாரானத்திற்கு வேண்டிய கரியமுதுகள் முதலான பதார்த்தங்களைசெப்பனிட்டு தேவாராதனத்தின் பேரில் ப்ரசாதப் பட்டு தாம்பூல தாரணம் செய்யாமல் சத்சாஸ்திர கால க்ஷேபங்களில் ஈடுபட வேண்டும்.

தர்ம சாஸ்திரப்படி மாதர்கள், பாலியத்தில் தாய் தந்தைகளிடமும், யௌவனதிசையில் பர்த்தாக்களிடமும், வயோதிகத்தில் புத்திர பௌத்திரர்களிடமும்,ஆக்ஞையின்படி நடக்கவுள்ளவர் களானதால் ஸ்ரீகளுக்கு எப்போதும் சுவதந்திரம் கிடையாது.

ஆகையால் பெண்கள் தங்களுடைய யிச்சைப்படித் தனிமையாக வசித்தல், தனியிடம் போதல், தனித்து சயனித்தல், தாம்பூலம் தரித்தல்,தலைக் கெண்ணையிட்டு சவரித்தல்(தௌவதஸ்திரம்) வெள்ளைப்புடவை தரியாதிருத்தல், இரவில் புசித்தல், பகவதாராதன மில்லாத அன்னத்தை புஜித்தல், மயக்கமான வஸ்துக்களைக் கொள்ளல் மத்தான பதார்த்தங்களி லிச்சை கொள்ளல், 15 நாழிகைக்குள்ளாக புஜித்தல், தேவதாந்திர, சாதனாந்திர, மந்திராந்திரங்களைச் செய்யல், கண்ட ஸ்நானம் செய்தல், காமிகளான, சதிபுருடரோடு,சகவாசித்தல்,டிராமாப் போதல் அசத் சாஸ்திரங்களைக் கேட்டல், ஆசார மில்லாதவருடைய அன்னத்தை புஜித்தல், முதலிய குற்றங்களை நிக்ரஹிக்க வேண்டுமென்று பராசரர் சொல்லியிருக்கிறார்.

அநித்தியமான சரீரமானது பகவதாதீனமானதால் அதற்குடன் பட்டு சுகத்தைப் பேணில், பகவதர்ப்பணம் பொய்யாய் விடுவதன்றி சுவாதந்தரிய குற்றமும் வந்தடையுமிது பகவத் சாஸ்திர நிருபணம்.

பஹிஷ்டி ஸ்ரீகள் விஷயம்

காசிகா கவி

ஆன்றகற் பினர்பூப் பினகன்றுறை
மூன்று நாளு முகமலர் காட்டலர்
தோன்றயாதும் சொல்லார்புனற் றேய்ந்தபின்
சான்ற காதலர் தம்முகம் நோக்குவார்.

என் இவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறதென்றால், முன் போர் காலத்தில் விருத்திரா சுரனைக்கொன்ற பாவத்தாலிந்திரனுக்குப் பிரமஹத்தி தோஷமடைந்தது. அதை நீக்க மஹரிஷிகளை யிந்திரன் வேண்ட அன்னோர் அந்த ஹத்தியை நான்கு பாகமாக்கி ஒன்றை பஹிஷ்டி மாதருக்கு மொன்றை நதிகளுக்கும், ஒன்றை மரங்களுக்கும், ஒன்றை பூமிக்குமாகப் பங்கிட்டுக் கொடுத்து இந்திரனுக்கு தோஷத்தைப் போக்கினதாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் முதல் நாளில் பிரம்மஹத்தி தோஷமும், இரண்டாம் நாளில் சண்டாள ஸ்பரிச தோஷமும், மூன்றுநாளில் ஆடை தப்புவோர்கள் தோஷமும், பஹிஷ்டி மாதர்களிடம் சேர்வதால் மூன்று தினங்களும் முகம் பார்க்கவும் பேசவும் தகாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஐதிக்கியத்தை யிப்போதும் பிராம்மணக் ருஹங்களில் காணலாம்.

ஆசௌசமுடைய மூன்று தினங்களும், பால், தயிர், இராப் போஜனம், சந்தனம், புட்பம், தாம்பூலம், ஆசனம், பகவஸ்துதி, பர்த்தா சங்கமம், பாஷித்தல், முதலான செயல்களைப்பற்றற நீக்கவேண்டும் அப்படிச் செய்யாராகில் நரகவாசமுண்டென்பதாகச் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருகால் புத்தி பூர்வகமாகவோ அபுத்தி பூர்வகமாகவோ, பாஷா, சங்கம, ஸ்பரிச தோஷங்களேற்ப்படின், கங்காஸ் நானம் செய்து, 1008 ருக்குகள் ஜெபித்து பிராயச் சித்த,

மந்திராவாஹன தீர்த்த ப்ரசாதங்களால் புனிதராகுவரென்று தர்ம நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

புனஹ விலக்கமான மங்கையர்கள் நான்காம் நாள் உதயாத் பூர்வம், குதத்திற்கும், அஸ்தத்திற்கும் (31) ஆவர்த்திகள் மண்ணிட்டு சௌசம் செய்து (12) நாழிகை கடந்தமேல் வீட்டில் ஸ்நானம் செய்யாமல், நதி, தடாகம், குளமிவைகளுக்கோ அல்லது கூவத்திற்கோ சென்று (16) தடவைகள் ஸ்நானம் செய்து மடிதரித்து இரண்டு ஆசமனம் செய்து, புனஹசுத்த ஜலத்தில் தீர்த்தமாடி வஸ்திரமணிந்து இரண்டுஆசமனங்கள்செய்தால் சுத்தியடைகின்றார்கள். மற்றநாள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தமேல் தேவகாரியங்களில் ப்ரவர்த்திக்கவேண்டும்.

குறிப்பு :—வெளியில் போய் ஸ்நானம் செய்ய எந்தவிதமான சௌகர்யங்களும் ஏற்படாத சமயங்களில், விளிப்புடைய மற்றோர் மாதரால் ஜலத்தைக் கொண்டு வரும்படி செய்து விதிப்படி தீர்த்தமாடி ஆசமனம் செய்து கொள்ளவேண்டும். நான்காம் நாள் ஸ்நானம் செய்தவுடனே தன்னுடைய வலக்கரம், கண்ணாடி பகவத் சேவை, சூரியன், தன்பதி சேவை செய்ய வேண்டுமல்லது இதர புருடருடைய முகலாபனம் செய்தல் தகாது. ஏனெனில் சம்போக காலத்தில் பிறருடைய ஞாபகம் வருமாகிலவர் சாயலாக குழந்தை பிறக்குமென்று ஆயுர்வேதத்தில் கூறப்பட்டிருப்பதற்கேற்க ஸ்வாநுபவத்திலும் பார்த்திருக்கிறோம். இந்த விஷயத்திலியாவருமெச்சரிக்கையுடனிருப்பீர்களென நம்புகின்றேன்.

ருது மாதர்விஷயம்

கன்னிகைகள் முதல் புஷ்பவதியாகிறதற்கு, ருதுவென்றும் பூப்பென்றும், பஹிஷ்டியென்றும், பெரிய மநுஷியாயிற்றென்றும், பூத்திருக்கிறாளென்றும், சமைந்திருக்கிறாளென்றும், பக்குவமாயிற்றென்றும் பலவித பேர்கள் சொல்லுகிறார்கள். இதில் பிராம்மணர்கள். நான்கு நாளும், க்ஷத்திரியர்கள் 10 நாளும், வைசியர்கள் 15 நாளும், சூத்திரர்கள் (30) நாளும், ருதுமாதரை வெளியில் வைத்துப் பிறகு சுத்தி புண்யாஹவாசனம் செய்து வீட்டிற்கழைத்துக் கொள்ளவேண்டு மென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தத்காலவநுஷ்டா

னத்திலு மிம்முறையாகச் சில தேயங்களில் சில வைதிகர்கள் நடத்தி வருகிருர்கள்.

குறிப்பு :—மேற் சொல்லியபடிக்கு நடத்தாமல் சாஸ்திரத்தையும் சம்பிரதாயத்தையு முணராத சில தேயத்தவர்கள் முறையுணராத பூர்வர்கள் நடத்திவந்த காரியங்களே உத்க்ருஷ்டமென்று நினைத்து சிஷ்டாசாரமுள்ள வைணவர்கள் தங்கள் குழந்தைகளை சூத்திராதியரைப்போல நடத்தி வருவதை யினியாகிலும் தவிர்ப்பாராக. ருதுமாதருக்கு மோர், தயிர், பால், காரபதார்த்தங்கள், மந்தவஸ்துக்கள் முதலியன தவிர்த்து, வலிவு தரக்கூடிய (மாஷம்) உளுந்து, நல்லெண்ணெய், புலகம், வடை, இனியும் தேசாசாரத்திற்கேற்ற உபசரணைகள் நடத்தி நான்காம் நாள் சுத்தி புண்யாஹவசனம் செய்து பந்துமித்திருடன் நலுங்கு முதலிய விபவங்களும் நவக்கிரஹஹோமஜபதப ஔபாசனுதிகளும் நடத்தி நிஷேக முகூர்த்தம் நடத்தல் பூர்வப்பிரயோக சாஸ்திர விதியாம்.

தாம்பூல தாரண விதி

தன் வந்திரிவை சாஸ்திரம்.

శ్లో॥ తాంబూలం కటుపుష్ణతిక్తమధురం సారంకషాయూర్జితం
వాతాగ్నిక్రిమినాసనం కఫహారం, కాలాగ్నిసంధీపనం
ప్రాతఃస్సంధిపురీష విసర్జనం పద్మీముఖీవసికరం
శ్రీసంభాషణ భూషణరుచికరం తాంబూలరత్నాకరం॥

சு:—தாம்பூலம் கடுவுஷ்ணதிக் தமதுரம் சாரம் கஷாயூர்ஜிதம், வாதாக்னிக்ரிமி நாசனம் கபஹரம் காலாக்னி ஸந்தீபனம் ப்ராத: ஸ்ஸந்திபுரீஷவி ஸர்ஜனம் பத்மீ முகீவஸிகரம், ஸ்ரீ ஸம்பாஷண பூஷண ருசிகரம் தாம்பூல ரத்னகரம்.

தா:—என்று சொல்லப்பட்டதால் தாம்பூலமானது அதியுஷ்ணமுடையதாகவும், துவர்ப்பு சம்பந்தமுள்ளதாகவும், அதன் சாரமானது ஆரோக்கியத்தைத் தரும் ஓர்வித ஔடத கஷாய சாரத்தை யொத்ததாயும், வாதாக்கினியையும்,கிருமிகளையும் நாசப்படுத்தக் கூடியதாயும், கபரோகத்தை கண்டிக்கும் சக்தியுடையதாயும், காலாகாலத்தில் தீபன சக்தியை யுண்டு செய்வதாயும், காலை மாலைகளில் மலஜலங்களைக் கிரமமாய்

வெளிப்படுத்தக்கூடிய அவிழ்தமாயும், ஸ்ரீகளுக்கும் புருடர்களுக்கும் வசீகரம்தருதற்கான முகவொளியை கொடுப்பதாயும், சயன காலங்களில் மாதரோடு சரசசல்லாப வசனங்களைப் புகலுதற்கு பூஷணமாயும், அதிமதுரமாயு மிருந்துள்ள யிந்த தாம்பூலத்தை அடிக்கடி நினைத்த போதெல்லாம் உபயோகிக்கும் அறிவினர்களுக்கென்னென்றுரைப்பது.

"உண்ணும் சோரும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்" எல்லாம் கண்ணனென்றே யிருக்க ப்ரபன்னரும், ப்ரபன்னைகளும் தேவாராதனமில்லாத· தாம்பூலத்தை யணிதல் எத்தகைய பாப மென்பதை யுணர்ந்தாரில்லை.

శ్లో॥ దేవాలయే సభాస్థానే, సంధ్యయోరుభయోరపి
దుఃఖయుక్తే బహుజనే, తద్దైవోత్పాదదర్శనే
పశ్ర్థాచరణకాలేతు, పురాణ శ్రవణేతథా
తాంబూలం భక్ష్యయేద్యస్తు విష్ఠామసమితంనృప॥

தா :—தேவாலயம், சபை, ஆஸ்தானம், உபயசந்தியாகாலங்கள், துக்கமான வீடு, உயுத்தபூமி, பருவகாலங்கள், யாகசாலை, உத்பாத தர்சனகாலம், புராணபடனம் செய்யுமிடம் குருஸ்தான மித்தியாதி யிடங்களில் தாம்பூலம் தரித்துக்கொள்ளக் கூடாது, தரிப்பரேல் மலத்தைப் புஜித்ததற்குச் சமமென்று இதிஹாசங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தாம்பூலமானது, காலை மலறுக்கும், மாலை பரிமளிக்கு மென்று சொன்னபோதிலும் சமயோசிதம், காலோசிதம், ஜாத்தி யோசிதம் தெரிந்து சொன்னதல்லாது சர்வத்திராளுக்கும் சம்பந்தப்பட மாட்டாது என்பதை கவனிக்கவும்.

குறிப்பு :—தாம்பூல தாரணத்தை ஓர் விசேட ஔடதரூபமாக வைத்திய சாஸ்திரத்தில் நிரூபணம் செய்திருப்பதினாலே, "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாவது போல" திரேகாரோக்கியத்திற்குக் கெடுதியை யுண்டாக்கும்.

அன்னிய ஜாதியாரிட சுண்ணம்பையும் இதராளால் தொடப்பட்ட சுண்ணம்பையும் வைணவன் உபயோகப்படுத்துவானேயாகில் ஞானஹீனனுவதன்றி நமனாலும் துன்புறுத்தப்படுவான்.

தசவிதப்ராம்மணம்

சு—தேவோ முனித்விஜோராஜா வைஸ்ய சூத்ர பிடாலக;
பசுர்மிலேச்ச சண்டாலோ, தசவிப்ரோப்ர கீர்த்தித:

தா.—தேவப் பிராமணன், முனிப்பிராம்மணன், விப்ரப்ராம்மணன், க்ஷத்ரியப் பிராம்மணன், வைசியப் பிராம்மணன், சூத்திரப் பிராம்மணன், பிடாலகப் பிராம்மணன், பசுப் பிராம்மணன், மிலேச்சப் பிராம்மணன், சண்டாளப் பிராம்மணன் என்பதாகப் பத்துவிதப் பிராம்மணர்களுண்டென்று சாஸ்திரம் புகலும்.

தசவித வைஷ்ணவம்

சு:—அத்வேஷச்சாநுகூவச்ச, திவ்ய நாமதரஸ்ததா,
சக்ராங்கி மந்த்ர பாடீச வைஷ்ணவச்ச ததப்பரம்,
ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபன்னச்சயேகாந்தி நவமஸ்ததா
பரமேகாந்தி விக்ஞேய தசைதே வைஷ்ணவாஸ்ம்ருதா:

என்றமைபால், பத்துவித வைஷ்ணவமானது அத்துவேஷிவைஷ்ணவம், அனுகூல வைஷ்ணவம், நாமதாரி வைஷ்ணவம், சக்கிராங்கித வைஷ்ணவம், மந்திரபாடி வைஷ்ணவம், ஸ்ரீவைஷ்ணவம், ப்ரபன்ன வைஷ்ணவம், ஏகாந்தி வைஷ்ணவம், பரமேகாந்தி வைஷ்ணவம் என்பதாக பத்துவித வைஷ்ணவங்களை பகவத் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மந்திரங்களை இரண்டாவது வாலியத்திற் காண்க.

பிரபன்னாநுஷ்டான பாஸ்கரம் முதல் வால்யம்
ஸம்பூர்ணம்.